விலை:
ரூபா 25.00

# உதயன்

சுடர் 28 கதிர் 116 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 9 வெள்ளி 22.03.2013
UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

நேற்று அதிரடிப் பாய்ச்சல் 8

கொரிய விவகாரத்தில் தலையிடுகிறது சீனா 9

அரசமைப்புக்கே பொது பல சேனா சவால் 17

தீவுகளின் ஆதிக்கத்தில் திணறும் சிம்பாப்வே 23

# சுயாதீன விசாரணையை மட்டும் வலியுறுத்தி ஈழத் தமிழரை மீண்டும் கைவிட்டது இந்தியா

## போர்க்குற்றம், திருத்தங்கள் எதையும் கோரவில்லை

(ஜெனிவாவிலிருந்து ஆர்.சிவராஜா)

இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இந்தியா வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நேற்றுச் சபையில் கருத்துவெளியிட்ட ஜெனிவாவுக்கான இந்தியத் தூதுவர் திலிப் சின்ஹா, இறுதிப்போர் காலகட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஆக்கபூர்வமான சுதந்திர விசாரணைகள் நடைபெற வேண்டுமென்று மாத்திரமே தெரிவித்தார்.

அவரது உரையில் 'சர்வதேச விசாரணை' என்ற பதம் உள்ளடங்கவில்லை.

இதேவேளை, பிரேரணையில் எதுவித திருத்தங்களையும் இந்தியா மேற்கொள்ளாமல் ஈழத்தமிழர்களை மீண்டும் கைவிட்டுள்ளது.

திலிப் சின்ஹா தமது உயரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கை 2009 ஆம் ஆண்டு இந்தச் சபைக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதுடன் 13 ஆம் திருத்தத்தை அமுலாக்க முன்னுரிமை அளித்து,

பார்க்க பக்கம் 04

## இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணை

# வெற்றி

★ இந்தியா உட்பட 25 நாடுகள் ஆதரவு

★ 13 நாடுகள் எதிர்ப்பு

★ 8 நாடுகள் வெளிநடப்பு



(ஜெனிவாவிலிருந்து ஆர்.சிவராஜா)

இராஜதந்திரச் சமர் என வர்ணிக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை நேற்று வெற்றி பெற்றது. இந்தப் பிரேரணையை எதிர்க்கக் கடும் பிரயத்தனங்களை இலங்கை மேற்கொண்ட போதும் அந்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணையை 30 க்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதற்கு ஆதரவாக 25 நாடுகளே வாக்களித்தன. எதிராக 13 நாடுகள் வாக்களித்ததுடன், 08 நாடுகள்

பார்க்க பக்கம் 04

## எங்கள் மீது மட்டும் ஏன் இந்த பிரேரணை?

### ஜெனிவாவில் கேட்டார் சமரசிங்க




ஜெனிவா,மார்ச் 22

உலகில் எத்தனையோ நாடுகளில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. அதனையெல்லாம் விடுத்து எங்கள் மீது மட்டும் ஏன் இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டு வருகின்றீர்கள். இன்று இலங்கை, நாளை எந்த நாடு? எனவே ஒருநாட்டின் இறைமையில் தலையிடுவதற்கு ஐ.நா. சபை அனுமதிக்கவே கூடாது.

இவ்வாறு இலங்கையின் சார்பில் ஜெனிவாவில் பேசிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் அமெரிக்கப் பிரேரணை நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும்

பார்க்க பக்கம் 04

## தேவையான அழுத்தம் கொடுத்தது இந்தியா

ஜெனிவா, மார்ச் 22

இலங்கைக்கு எதிரான பிரேரணை விடயத்தில் இந்தியா தேவையான அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளது என்று ஜெனிவாவுக்கான இந்தியத் தூதுவர் திலிப் சின்ஹா தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைப் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர்

பார்க்க பக்கம் 04

# சர்வதேச விசாரணையிலிருந்து இலங்கை தப்பிக்கவே முடியாது

## உடனடியாக கதவை மூடிவிடுவதற்கு விரும்பவில்லை என்கிறது அமெரிக்கா

ஜெனிவா, மார்ச் 22

போர்க் குற்றங்கள்குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலில் இருந்தாலும், உடனடியாகக் கதவுகளை மூடுவதற்கு அமெரிக்கா விரும்பவில்லை என்று ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்காவின் தூதுவர் எலீன் சம்பர்லைன் டொனஹே தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை பிரேரணை மீது வாக்கெடுப்பு

பார்க்க பக்கம் 04

# வடக்கு நிலைமை இன்று ஆப்கானை விட மோசம்

## நாடாளுமன்றில் ரணில்

கொழும்பு, மார்ச் 22

வடக்கின் நிலைமை இன்று ஆப்கானிஸ்தானை விட மோசமாக இருக்கின்றது. தமிழ் மக்கள் மேலும் துன்பகரமான இக்கட்டான நிலையிலேயே வாழ்கின்றனர். இதனையிட்டு நானும் இலங்கையன் என்ற வகையில் வெட்கப்படுகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

மீள்குடியேற்ற அதிகார சபை திருத்தம் தொடர்

பார்க்க பக்கம் 04

# தமிழர்களுக்கு நீதி நெருங்கி வருகிறது

## பிரேரணை குறித்து கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 22

ஐ.நாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த இரண்டாவது பிரேரணையும் வெற்றியடைந்ததன்மூலம் உலக அரங்கில் தமிழர்கள் இரண்டாவது வெற்றிப்படியில் ஏறி நிற்கின்றார்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்த அமெரிக்காவுக்கும், பிரேரணையை ஆதரித்த இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளுக்கும் நன்றிகளை கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. பிரேரணை விடயத்தில் இந்திய அரசை உஷார்ப்படுத்தி தமிழகத்தில் பேரெழுச்சி கொண்ட மாணவர்களுக்கும் தனது நன்றியைத்தெரிவித்துள்ளது.

அதேவேளை, அமெரிக்கப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள சுயாதீன விசாரணை சர்வதேச சுயாதீன விசாரணையாக இருக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் பிரேரணை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று மாலை 'உதயனி'டம் தெரிவித்தவை வருமாறு:

''ஐ.நாவில் இலங்கை அரசுக்கு எதிராக கடந்த வருடம் அமெரிக்கா முதலாவது பிரேரணையைக் கொண்டுவந்தது. இது 24

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போர்க்குற்றம் விசாரிக்கப்படும் வரை நல்லிணக்க முயற்சிகள் தாமதமாகும்

## பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்



கடத்தல்கள், காணாமல்போதல்கள் மற்றும் சட்டவிரோதப் படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

லண்டன்,மார்ச் 22

இலங்கை மனித உரிமை நிலைமை தொடர்பான பிரிட்டனின் கரிசனை இரகசியமானதல்ல என அந்நாட்டு வெளிவகார அமைச்சர் அலிஸ்ரர் பேர்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைமைகள் தொடர்பில் பிரிட்டன் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். போர் இடம்பெற்ற காலத்தில் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் சில சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் வரையில், நல்லிணக்க முன்நகர்வுகளில் தாமதம் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்திருந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் சிமோன் டான்சுக் பிரிட்டன் நாடாளுமன்றில் வெளியிட்ட கருத்துக்களுக்குப் பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையுடன் மிக நெருக்கமான உறவு நீண்ட காலமாக நீடித்து வருகிறது, கல்வி, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் நட்புறவு நீடிக்கிறது. முன்னாள் பிரதம நீதியரசர் பணி நீக்கம் செய்யப்பட்டமை, சர்வதேச ஜூரிகள் பேரவை உறுப்பினர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் ஏமாற்றமளிக்கும் வகையில் அமைந்துள்ளன.

போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் சில சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் வரையில், நல்லிணக்க முன்னகர்வுகளில் தாமதம் ஏற்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லது அரச படையினரோ குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது. கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் சட்டவிரோதப் படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நிலக்கண்ணி வெடி அகழ்வு, பாதை நிர்மாணம், புனரமைப்பு, புனர்வாழ்வு போன்ற துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமையை கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு பயணம் செய்திருந்த போது நேரில் பார்வையிட்டேன் -என்றார். (த)

## கொள்ளைக் குற்றச்சாட்டில் மூவர் கைது

அவர்களிடமிருந்து 6 இலட்சத்து 68 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்,மார்ச் 22

கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் நேற்று முன்தினம் யாழ்.நகரில் வைத்து யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 6 இலட்சத்து 68 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை அரியாலையில் நெடுங்குளம் வீதியில் கத்திமுனையில் குடும்பப் பெண்ணை அச்சுறுத்திக் காயப்படுத்தியதோடு சுமார் 12 பவுண் நகைகளையும் கொள்ளையடித்த குற்றச் சாட்டில் சந்தேகத்தின் பேரில் இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர் எனவும் மற்ற இருவரும் அரியாலையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மூவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-ரி-4)

## நவநீதம்பிள்ளை அமெரிக்கப் பூனை

### அமெ. தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்




கொழும்பு,மார்ச் 22

இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணையை எதிர்த்து தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று வியாழக்கிழமை காலை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

கொள்ளுப்பிட்டிச் சந்தியில் இருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் கொள்ளுப்பிட்டி காலி வீதியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் வரை சென்று நிறைவடைந்தது.

ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டோர் 'அமெரிக்காவின் தீர்மானங்கள் எமக்குத் தேவையில்லை,'' நவநீதம் பிள்ளை அமெரிக்கப் பூனை", இந்தியாவின் றோவும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ.யும் இதற்குப் பின்னணி", நாம் யாருக்கும் அடிபணியமாட்டோம்'' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு அமெரிக்கத் தூதரகத்துகு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த)

## தேங்காய் முகத்தில் தாக்கியதில் மாணவன் காயம்

வடமராட்சி,மார்ச் 22

தேங்காய் பறித்தபோது அது முகத்தில் தாக்கியதில் மாணவன் ஒருவன் பலத்த காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்றுச் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்த யோகேந்திரன் கோசலன் (வயது-16) என்ற மாணவனே இவ்வாறு காயமடைந்தவராவார்.

பாடசாலையில் பரீட்சை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது நண்பர்களுடன் சேர்ந்து தென்னை மரம் ஒன்றில் தேங்காய் பறித்த போதே இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளது. (த-8-ரி)

## 95 தமிழ்ப் பெண் சிங்கங்கள் பயிற்சி முடித்து வெளியேறினர்



இலங்கையின் சகல மாவட்டங்களிலும் தமிழ்ப் பெண்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

யாழ்ப்பாணம்,மார்ச் 22

இலங்கை இராணுவத்தில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ்ப்பெண்கள் அணியின் பயிற்சி நிறைவு விழா நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சியில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்றது.

இலங்கை இராணுவத்தில் தமிழ்ப் பெண்களை இணைக்கும் செயற்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ்ப் பெண்களில் இராணுவப் பயிற்சிகளை நிறைவு செய்து கொண்ட 95 பேர் இலங்கை இராணுவத்தினரின் தமிழ் பெண் இராணுவ சிப்பாய்களாக நேற்று வெளியேறினர்.

இவர்களுக்கான பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 9.45 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் பயிற்சியை நிறைவு செய்து கொண்ட தமிழ் பெண்கள் படையணியின் இராணுவ அணி வகுப்பு மரியாதைகளைத் தொடர்ந்து பயிற்சிக்காலத்தில் திறம்பட செயற்பட்ட ஆறு இராணுவச் சிப்பாய்கள் பரிசில்கள், வெற்றிக் கேடயங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். அத்துடன் இராணுவத்தினரின் சாகச நிகழ்வுகளும் இடம் பெற்றன.

நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் கிளிநொச்சி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, இலங்கை இராணுவத்தின் விளையாட்டுக் கல்லூரி இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஜெயரத்தினம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், மதத் தலைவர்கள், படையணித் தளபதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த காலத்தில் இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டபோது பெரும் சவால்களை எதிர்கொண்ட போதிலும் அது தற்போது வெற்றியளித்துள்ளது. இலங்கையின் சகல மாவட்டங்களிலும் தமிழ்ப் பெண்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்று இலங்கை இராணுவத்தின் விளையாட்டுத் துறை அதிகாரி தெரிவித்தார். (த-6)

## இலங்கை இன்னும் காலனித்துவ நாடா?

### கேள்வி எழுப்புகிறார் ஜோன் செனிவிரட்ன

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் சில இலங்கையை இன்னும் தமது காலனித்துவ நாடாக எண்ணுகின்றனவா என்று அமைச்சர் ஜோன் செனவிரட்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

இரத்தினபுரி முவகம பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கொடூரமான பயங்கரவாதத்தைத் தோற்கடித்து, இலங்கைக்குச் சமாதானத்தை ஏற்படுத்தி கொடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவர்ச்சிகரமான தலைமைத்துவத்தில், நாட்டை முன் னோக்கி இட்டுச் செல்ல எடுக்கப்படும் சரியான தீர்மானங்கள் சில மேற்குலக நாடுகளுக்கு பிரச்சினையாக மாறியுள்ளன.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதை விட, சர்வதேச ரீதியில் மிகவும் பிரபலத்தைப் பெற்றுள்ள அரச தலைவரைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு, அவர்களுக்குச் சார்பான பலமற்ற தலைவர் ஒருவரை நியமிக்கும் தேவையே மேற்குலக நாடுகளுக்கு உள்ளது.

வரலாற்று காலம் தொட்டு நல்ல பெயரைப் பெற்றுள்ள இலங்கையில், போரின் இறுதித் தினங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சில சம்பவங்களை அடிப்படையாக கொண்டு, இலங்கைக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது மிகவும் அநியாயமானது- என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவர் தாக்கியதில் ஒருவர் படுகாயம்

தென்மராட்சி, மார்ச் 22

தோட்ட பயிர்களுக்கு பாத்தி அமைக்கும் பணியில் ஈடுபட்ட குடும்பஸ்தரை பக்கத்துத் தோட்டத்தில் வேலை செய்த மூவர் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கொடிகாமம் கொயிலாமனையில் இடம்பெற்றுள்ளது.

மீசாலை வடக்கு இராமாவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் (வயது-50) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## சிலுவைப் பாதை

நவாலி, மார்ச் 22

மானிப்பாய் புனித அன்ஹம்மாள் ஆலயத்தில் இருந்து தவக்கால சிலுவைப் பாதை இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி மானிப்பாய் வீதிகளூடாகச் சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடையவுள்ளது. (ம-100)

## காசநோய் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

உலக காசநோய் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (ம)

## நாவற்காட்டில் வீதிக்கு 'கொங்கிறீற்'

தென்மராட்சி, மார்ச் 22

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதியொன்று 'கொங்கிறீற்' கலவை வீதியாக மாற்றப்பட்டு வருகிறது.

வரணி நாவற்காட்டில் உள்ள வீதியொன்று நீண்ட காலமாக மணல் வீதியாகக் காணப்பட்டதால் அதனைப் புனரமைத்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதனையடுத்து பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜாவின் முயற்சியால் இந்த வீதி சிமெந்துக் கலவை வீதியாக மாற்றப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# காற்றோட்ட வசதிகள் இன்றி யாழ்.நவீன சந்தைக் கட்டடம்

### வெந்து அவிகின்றனர் வியாபாரிகள்






யாழ்ப்பாணம், மார்ச் 22

*யாழ்.மாநகர சபையால் கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் அமைத்துக் கொடுக்கப்பட்ட நவீன சந்தைக் கட்டடத் தொகுதி உரிய காற்றோட்ட வசதிகள் இல்லாத நிலையில் காணப்படுகிறது. இதன் காரணமாக தமது தொழில் நடவடிக்கைகள் சோபையிழந்து காணப்படுகின்றன என்று பாதிப்படைந்துள்ள வியாபாரிகள் உதயனிடம் கவலை தெரிவித்துள்ளனர். இந்த நிலை குறித்து வியாபாரிகள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-*

யாழ்.மாநகர சபையால் கடந்த 2 மாத காலத்துக்கு முன்னதாக யாழ். நகர் நவீன சந்தையில் உட்பகுதிகள் தகரங்களால் மறைக்கப்பட்டு மூடி அடைக்கப்பட்டன. எனினும் உரிய காற்றோட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

தற்போது அதிக வெப்ப காலநிலையால் மூடி அடைக்கப்பட்ட தகரங்கள் ஊடாக அதிக வெப்பம் பரவுகிறது. இதனால் அந்தப் பகுதிகளில் இருந்து வியாபாரம் மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.

மூடி அடைக்கப்பட்டமையால் நுகர்வோர், சந்தையின் முன்புறமாகவுள்ள வர்த்தக நிலையங்களில் பொருள்களை வாங்கிச் செல்கின்றனர். இங்கு கடைகள் இருப்பது நுகர்வோருக்கு தெரியாத நிலையும் உள்ளது.

கடைகள் மூடி அடைக்கப்பட்டதால் நுகர்வோர் இந்தக் கடைகளை நாடுவதில்லை: இதனால் வருடக்கணக்காக தொழில் புரிந்து வரும் பழக்கடை, வெற்றிலைக்கடை, பனம்பொருள் உற்பத்திப் பொருள்களின் கடை போன்ற சிறு வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகள் சோபையிழந்து போய் உள்ளன. உரிய காற்றோட்ட வதிகள் இல்லாத காரணத்தால் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் இந்த இடத்தில் இருக்க முடியாத நிலையும் உள்ளது.- என்று அவர்கள் மேலும் கூறினர். (ம-14)

## விபத்தில் காயம்

அளவெட்டி, மார்ச் 22

வீதியால் சைக்கிளில் சென்றபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் வலது கை முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த ரதிகரன் சுனிதா (வயது-35) என்ற பெண்மணியே இவ்வாறு அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, வீட்டிலுள்ள மேசை மீது ஏறி விளையாடிய சிறுவன் தவறி விழுந்ததில் வலது கை முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மல்லாகத்தைச் சேர்ந்த நகுலேஸ்வரன் கலையரசன் என்ற நான்கரை வயதுச் சிறுவனே இவ்வாறு காயமடைந்துள்ளான். (ம-36)

## சவேரியார் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 22

கொழும்புத்துறை மேற்கு சவேரியார் வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களான புனரமைப்பின்றி பெரும் சேதமுற்ற நிலையில் இந்த வீதி காணப்பட்டது.

தற்போது இந்த வீதி தார் ஊற்றப்பட்டு மீளப் புனரமைக்கப்பட்டும் வருகிறது.

மக்களின் போக்குவரத்து அதிகமாக காணப்படும் இந்த வீதியை புனரமைத்து தருமாறு இந்தப் பகுதி மக்கள் மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# உடுப்பிட்டி நவஜீவன் வி.கவுக்கு ரூ.80 இலட்சத்துக்குக் காணி

வடமராட்சி, மார்ச் 22

உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகத்துக்கு புலம்பெயர்ந்தோரின் நிதி உதவியுடன் 80 இலட்சம் ரூபா செலவில் 4 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

நாவலடி நலன்புரி சங்கம், புலம்பெயர்ந்தோர் சார்பாக பத்திரகாளி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள காணியையே விளையாட்டு மைதானத்துக்காக கொள்வனவு செய்து வழங்கவுள்ளது.

உடுப்பிட்டி நாவலடி கிராமத்தின் அபிவிருத்திக்கு இக்கிராமத்தைச் சேர்ந்த புலம் பெயர் உறவுகள் உதவிகள் வழங்க முன்வந்ததைத் தொடர்ந்து உதவிகளை ஒருங்கிணைத்து கிராம அபிவிருத்தியை இனங்கண்டு முன்னெடுத்துச் செல்லவென நாவலடி நலன்புரி சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வடமராட்சிப் பிரதேசத்தில் விளையாட்டுத்துறையில் சாதனைகளை நிகழ்த்தி வரும் இக்கிராமத்தில் இயங்கும் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகத்துக்கு விளையாட்டு மைதானம் ஒன்றில்லாமல் தனியார் காணிகளில் விளையாட்டு நிகழ்வுகளை நடத்தி வந்தது.

இக்கழகத்துக்கென சொந்த மைதானத்தின் அவசியத்தை உணர்ந்து அதற்கான காணி ஒன்றை வாங்கி வழங்க புலம்பெயர் உறவுகள் முன்வந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நாவலடி நலன்புரி சங்கத்தின் முதலாவது நடவடிக்கையாக நவஜீவன் விளையாட்டுக் கழகத்துக்கான விளையாட்டு மைதானத்துக்கென 4 பரப்புக் காணி, 80 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்து வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# இருபாலை, செம்மணி பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் சீரானது

யாழ்ப்பாணம், மார்ச் 22

இருபாலை, செம்மணி பிரதேசங்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தற்போது சீராக இடம்பெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேச மக்களுக்கு தினமும் இரண்டு தடவைகள் பவுசர் வாகனத்தின் உதவியுடன் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் சில நாள்கள் மட்டும் இந்தப் பகுதிக்கான குடி தண்ணீர் விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டது. அத்துடன் பிரதேசத்துக்கான கழிவுப் பொருள்கள் அகற்றும் பணியும் பாதிக்கப்பட்டிருந்தது.

**சபையில் போதிய வாகனச் சாரதிகள் இன்மையால்தான் இந்த பணிகளில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.**

சபையில் போதிய வாகனச் சாரதிகள் இன்மையால்தான் இந்த பணிகளில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

தற்போது சபையில் இருக்கும் சாரதிகளைப் பயன்படுத்தியே இந்த அத்தியாவசிய சேவையை ஓரளவு மேற்கொண்டு வருவதாக சபை தலைவர் தெரிவித்தார்.

குறிப்பாக வலி. கிழக்கின் அனேகமான இடங்களில் தேங்கிக் கிடந்த குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்கள் என்பன அகற்றப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் பெருமளவில் கழிவுப் பொருள்கள் தேங்கியுள்ளதால் அவற்றில் இருந்து நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துக் காணப்பட்டது. தற்போது இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## நிகழ்வுகள் இன்று

### மாதந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு, முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ம)

# சமய, சமூக பணியாளர் கௌரவிப்பு

பளை,மார்ச் 22

மகா சிவராத்திரியை முன்னிட்டு இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் கோயிலில் திருவிழா நிகழ்வுகளுடன் அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சமய மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டுவரும் இருவர் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டனர்.

மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற ப.அரியரத்தினம், மற்றும் கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற சி.விநாசித்தம்பி ஆகியோருக்கு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட பளைப் பிரதேச உதவித்திட்டமிடல் பணிப்பாளர் க.ஜெயக்குமார் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து பாராட்டுப் பத்திரமும் வழங்கினார்.

சிவராத்திரியை முன்னிட்டு பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாலை கட்டுதல், கோலம் போடுதல், பேச்சு ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# மேல்நாட்டு மரக்கறி வகைகள் நெடுந்தீவில் அமோக விளைச்சல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

நெடுந்தீவு பிரதேசத்தில் இந்த முறை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட மேல் நாட்டு மரக்கறிச் செய்கை பெரும் வெற்றியை விவசாயிகளுக்கு ஈட்டிக் கொடுத்துள்ளது.

கோவா, கரட், போஞ்சி, பீற்றூட் போன்ற மரக்கறி பயிர்கள் பரீட்சார்த்தமாக விவசாயிகளால் நெடுந்தீவில் பயிரிடப்பட்டன.

நான்கு ஏக்கர் நிலப் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த மரக்கறிப் செய்கையில் தெரிவு செய்யப்பட்ட பதினாறு விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர்.

**இந்த மரக்கறி விதைகளை விவசாய திணைக்களம் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகித்திருந்தது.**

மரக்கறிச் செய்கைக்கான விதைகளை விவசாய திணைக்களம் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகித்திருந்தது. இந்தப் பிரதேசத்தில் முதன் முதலில் இந்த மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் பெரும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

இந்த மரக்கறிச் செய்கை அவர்களுக்கு பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்திருப்பதால் அடுத்த போகத்துக்கும் மரக்கறிச் செய்கையில் அவர்கள் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை விடயங்களில் அதிக அக்கறை காட்டுங்கள்

## அமெ. இராஜாங்கச் செயலர் அறிக்கை

வொசிங்டன், மார்ச் 22

இலங்கை அரசு பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி தெரிவித்துள்ளார். மனித உரிமை விடயங்களில் அதிக அக்கறை காட்டுமாறும் அவர் கூறியுள்ளார்.

ஜெனிவா பிரேரணையை அடுத்து, வொசிங்டனில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இன்று (நேற்று) நடத்தப்பட்ட வாக்கெடுப்பு, பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்த உள்நாட்டுப் போர் மற்றும் உறுதியற்ற நிலையில் இருந்து, இறுதியான சமாதானத்தை அடைவதற்கான சுபீட்சமான பாதையில் தொடர்ந்து செல்வதற்கு இலங்கை அரசை ஊக்குவிக்கிறது.

இந்தப் பிரேரணை 2012ஆம் ஆண்டு பிரேரணையைப் போன்று, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் இலங்கை அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்நோக்கி நகர்த்த வேண்டும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நீண்டகாலப் பிரச்சினைகள் தொடர்பாக, இலங்கை அரசு தனது சொந்த மக்களுக்கான பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்று அமெரிக்கா, தனது அனைத்துலகப் பங்காளர்களுடன் இணைந்து அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை, சில முக்கியமான முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ள போதிலும், இன்னும் செய்ய வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என்றும், சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் விடயங்களில் அண்மையில் ஏற்பட்ட எதிர்மறையான நிலைமைகளில் இருந்து மீளத் திரும்பும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். இந்த முக்கியமான பணிகளுக்கு உதவ அமெரிக்கா தயாராகவே உள்ளது.

இலங்கை அரசுடன் எமது தொடர்புகள் முன்நோக்கிச் செல்வதையும், இலங்கை மக்களுடன் எமது நட்புறவை வலுப்படுத்திக் கொள்வதையும் எதிர்பார்க்கிறேன்-என்றுள்ளது. (த)

## வடக்கு...

(தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...)

பான விவாதத்தில் உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு பொறுப்புக் கூறும் நிலைப்பாட்டிலிருந்து முழுமையாகத் தவறிவிட்டது. இதன் காரணமாக இன்று சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கும் வெறுப்புகளுக்கும் உள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வீதிகள் போடப்படுகின்றன். பாலங்கள் கட்டப்படுகின்றன. ஒரு நல்ல பணிதான். ஆனால் அங்கு வாழும் தமிழ் மக்கள் சந்தோஷமாக வாழமுடியவில்லை. குறிப்பாக அந்த மக்கள் தேசிய கீதத்தைக் கூட தமிழில் பாட முடியவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இங்கு வந்தபோது நாட்டில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக நியாயமான தீர்வு காணப்படும் என வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளார்.

அதேபோன்று ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்த தவறிவிட்டது.

### சர்வதேசத்தின் முன் கைகட்டி நிற்கிறது

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் அது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, நமது நாட்டுக்கும் பல நன்மைகளை ஏற்படுத்தியிருக்கும். போர் முடிந்த பின் ஐ.நா. செயலாளருடன் இணைந்து வெளியிடப்பட்ட அறிக்கை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஏதாவது ஒரு தீர்வு கிட்டும் என அவர்கள் நம்பினர்.

தமிழ் அரசியல் தலைவர்களுடன் பேசும்போது அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். இவ்விடயம் இன்று சர்வதேச அரங்கில் பூதாகரமாக உருவெடுத்து விட்டது. இந்த அரசு பொறுப்புக் கூறும் நிலையில் இருந்து விலகிவிட்டது. இதனாலே சர்வதேசத்தின் முன் கைகட்டி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

வடக்கில் வாழும் மக்கள் இன்னும் அவல வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டும். வடக்கின் நிலைமை இன்று ஆப்கானிஸ்தானை விட மோசமாக உள்ளது. ஒரு இலங்கையன் என்ற வகையில் நான் வெட்கப்படுகின்றேன்-என்றார். (த-2)

## எங்கள்...

(தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...)

தெரிவித்ததாவது:-

இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்கப் பிரேரணையை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பிரேரணையில் சொல்லப்பட்ட விடயங்கள் ஒரு நாட்டின் இறைமைக்குள் தலைபோடும் விதமாக அமைந்துள்ளன.

எனவே இந்தப் பிரேரணையை எதிர்த்து இந்த சபையில் உள்ளவர்கள் இலங்கைக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

### ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள்

அமெரிக்கப் பிரேரணையில் சொல்லப்பட்ட குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை. அதனை நாம் அடியோடு மறுக்கின்றோம். அமெரிக்கப் பிரேரணைக்கு அடிப்படையாக அமைந்த ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை உள்நோக்கம் கொண்டது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் என்ற வரம்பை மீறி அவர் சில பரிந்துரைகளைச் செய்துள்ளார். இதனை இந்த ஐ.நா சபை ஏற்றுக் கொண்டால் அது தவறான முன்னுதாரணமாக மாறிவிடும். எனவே இதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள எங்களுக்கு எல்லா நாடுகளும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

நாம் போரின் பின்னர் மேற்கொண்டு வருகின்ற அபிவிருத்திப்பணிகள், புனர்வாழ்வுப் பணிகள் என்பவற்றை அமெரிக்கப் பிரேரணை கண்டு கொள்ளவில்லை. போரின் பின்னர் முன்னேற்றம் கண்டு வரும் நாட்டுக்கு உலக நாடுகள் ஒத்துழைப்பைத்தான் வழங்வேண்டும்.

நாம் இலங்கையில் யாரையும் பாரபட்சமாக நடத்தவில்லை. எங்களுக்குச் சர்வதேச விசாரணை தேவையற்றது. நாங்கள் உள்நாட்டுப் பொறிமுறையுடன் கூடிய தீர்வை முன்னெடுக்கின்றோம்.

உலக நாடுகள் பலவற்றில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. அவற்றை கண்டுகொள்ளாமல் எங்கள் மீது மட்டும் ஏன் இந்த அதீத அக்கறை. இன்று இலங்கை, நாளை எந்த நாடு? ஒரு நாட்டின் இறைமையில் தலைபோடுவதை ஐ.நா. அனுமதிக்கக் கூடாது-என்றார். (த-5)

## சுயாதீன...

(தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...)

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை நோக்கி இலங்கை பயணிக்க வேண்டும்.

காணாமல்போதல், தடுத்து வைப்பு, வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம், சிவிலியன்கள் பகுதிகளில் இருந்து படைக் குறைப்பு போன்ற செயற்பாடுகளையும் இலங்கை முன்னெடுக்க வேண்டும்.

இறுதிப்போர் நடைபெற்ற போது நடந்த பாதிப்புக்கள் குறித்து சுதந்திர, ஆக்கபூர்வமான விசாரணை நடத்தப்பட வேண்டும். பொறுப்புக்கூறும் கட்டுப்பாட்டுடன் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் வகையில் இலங்கை வெளிப்படுத்த வேண்டும்.

### தமிழர் எதிர்பார்ப்பு தவிடு பொடி

ஐக்கிய நாடுகள் ஆணையாளர் இலங்கை விடுத்திருக்கும் அழைப்பை ஏற்று அங்கு செல்ல வேண்டும். இலங்கை அரசு பன்முகத் தன்மையுடன் நடந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் - என்றார் இந்தியத் தூதுவர் சின்ஹா.

மனித உரிமைகள் சபையில் வாய்மூலமான திருத்தம் கொண்டுவந்து சர்வதேச விசாரணை ஒன்றை இந்தியா கோரும் என்ற தமிழர்களின் எதிர்பார்ப்பு இதன் மூலம் தவிடு பொடியாகியுள்ளது.

### பாகிஸ்தான்

இலங்கை நல்லிணக்க செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருகின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இப்படியான சூழ்நிலையில் ஒரு நாட்டுக்கு எதிராக இப்படியான நடவடிக்கைகளை எடுப்பது அர்த்தமற்றது. நாங்கள் இலங்கைக்கு எதிராக கொண்டு வரும் தீர்மானத்தை ஆதரிக்க விரும்பவில்லை. போருக்குப் பின்னர் நல்லிணக்கத்துக்கு எடுக்கும் முயற்சிகளுக்கு இலங்கையை பாராட்டுகிறோம்.

உள்நாட்டு தீவிரவாதத்தால் இலங்கை சுமார் 30 வருடங்கள் பாதிக்கப்பட்டது. அது மீள் வரவும் நல்லிணக்க முயற்சிகளை ஏற்படுத்தவும் அதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

தேவையற்ற செயற்பாடுகள் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கலாம். இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவியே தேவை. இனி வாக்கெடுப்புக்கு இதனை விட வேண்டும். நாம் இதனை எதிர்க்கிறோம் - என்றார் பாகிஸ்தான் தூதுவர்.

அயர்லாந்து, மொண்டிநீக்ரோ, சியராலியோன், பிரேசில், [illegible] ஆகிய நாடுகளும் அதன்போது தமது கருத்துகளை வெளியிட்டன. (த-5)

## தேவையான...

(தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...)

மாநாட்டின்போது, இந்திய தூதுவரிடம், தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையைதான் எதிர்பார்த்தனர். ஆனால் அதை இந்தியா வலியுறுத்தவில்லையே என 'உதயன்' செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர் திலிப் சின்ஹா '' சுயாதீன விசாரணை என்பதை சர்வதேச விசாரணை அல்ல என்று கூறமுடியாது. நம்பகமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாம் வலியுறுத்தியுள்ளோம்'' என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, தமிழ் நாட்டு மாணவர்களின் போராட்டங்கள் காரணமாகவா இலங்கை மீதான பிரேரணையை இந்தியா ஆதரித்தது என 'உதயன்' செய்தியாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு, இல்லை. மத்திய அரசு எடுத்த முடிவு என்று தூதுவர் திலிப் சின்ஹா கூறினார்.

இறுதி நேரத்தில் இந்தியா முன்மொழிந்த திருத்தங்கள் உள்வாங்கப்படாத விவகாரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, காலப் போக்கில் இந்தியாவின் முன்மொழிவுகள் குறித்து கவனம் செலுத்தப்படும் என மனித உரிமைகள் சபை குறிப்பிட்டுள்ளது என்று அவர் கூறினார். (த-சி)

## தமிழர்களுக்கு..

(தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...)

நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது. இந்நிலையில், அமெரிக்கா தனது முதலாவது பிரேரணையில் குறிப்பிட்ட விடயங்களை இலங்கை அரசு நிறைவேற்றாமல் அசண்டையாக இருந்ததையடுத்து இவ்வருடம் இலங்கை அரசுக்கு எதிராக தனது இரண்டாவது பிரேரனையை அமெரிக்கா கொண்டு வந்தது. இந்தப் பிரேரணை இன்று (நேற்று) 25 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியுள்ளது.

கடந்த வருடம் இலங்கை அரசுக்கு எதிரான முதலாவது பிரேரணை நிறைவேறியதுடன் உலக அரங்கில் முதலாவது வெற்றிப் படியில் தமிழர்கள் ஏறினார்கள். இவ்வருடம் இரண்டாவது பிரேரணையும் நிறைவேறியுள்ளதையடுத்து இரண்டாவது வெற்றிப்படியில் தமிழர்கள் ஏறி நிற்கின்றார்கள்.

எனவே, உலக அரங்கில் தமிழர்களுக்கு நீதியும், தீர்வும் கிடைக்கும் காலம் நெருங்கி வருகின்றது.

இதேவேளை, ஐ.நாவில் இன்று (நேற்று) நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை அரசுக்கு எதிரான அமெரிக்கா பிரேரணையில் 'சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த சுயாதீன விசாரணை உள்நாட்டு சுயாதீன விசாரணையாக இல்லாமல் சர்வதேச சுயாதீன விசாரணையாக அமையவேண்டும். இதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

ஏனெனில், இலங்கையில் இறுதிப் போரில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் இரு தரப்புகள் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அதாவது அரச படைகள் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், சுயாதீன விசாரணை உள்நாட்டு விசாரணையாக அமைந்தால் அது நடுநிலையான விசாரணையாக இருக்காது. அது அரசுக்கு சார்பான விசாரணையாக இருக்கும். எனவே, சர்வதேச சுயாதீன விசாரணையே நடுநிலையான விசாரணையாக இருக்கும். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் [illegible]டாக நீதியைப் பெற்றுக் [illegible]'' - என்று தெரிவித்தார் சுமந்திரன். (த-சி)

## சர்வதேச...

(தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...)

நடத்தப்பட்ட பின்னர் அவைக்கு வெளியில் வைத்து ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்திய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளக விசாரணை பொறிமுறையைக் கையாள்வதாக இலங்கை உறுதியளித்துள்ளது. அந்நாடு அந்த உறுதிமொழியை நிறைவேற்றும் என அமெரிக்கா நம்புகின்றது. ஆனால், உறுதிமொழிகள் பேச்சளவில் மட்டும் இருக்கக்கூடாது.

அவை தொடர்பில் இலங்கை பொறுப்புக்கூறும் கடப்பாட்டை நிச்சயம் வெளிப்படுத்த வேண்டும்.

அத்துடன், சுயாதீனமாக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். எனினும், பொறுப்புக்கூறும் கடப்பாட்டிலிருந்து தப்பமுடியாது என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

அதேவேளை, இலங்கை விவகாரம் குறித்தான பிரேரணையை பலப்படுத்துவது குறித்து நாம் இந்தியாவுடன் பேசினோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையை அமெரிக்கா பெரிதும் வரவேற்கின்றது. அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் சரியானவையாகும்.

அடுத்த மார்ச் மாதத்துக்குள் சுயாதீன விசாரணையை முன்னெடுத்து, இலங்கை அரசு அமெரிக்காவுக்கு ஆக்க பூர்வமாக பதிலை வழங்கவேண்டும் - என்றும் அவர் கூறினார். (த-சி)

## வெற்றி...

(தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...)

நடுநிலை வகித்தன.

இதனடிப்படையில் பெரும்பான்மை ஆதரவோடு

இலங்கைக்கு எதிரான பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று நிறைவேறியது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த முறை (19 ஆவதுக் கூட்டத்தொடரில்) இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, அதற்கு ஆதரவாக 24 நாடுகளும், எதிராக 15 நாடுகளும் வாக்களித்தன. எட்டு நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது நடுநிலை வகித்தன.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை தொடர்பில் இறுதி நேரத்தில் சில திருத்தங்களை இந்தியா வாய்மூலமாக முன்வைத்தாலும் அவை எதுவும் இறுதிப் பிரேரணையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எனினும், இலங்கை மீதான பிரேரணையை இந்தியா ஆதரித்தது.

இலங்கை விவகாரம் குறித்தான பிரேரணைக்கு சுமார் 32 நாடுகளின் ஆதரவு அமெரிக்காவுக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் வாய்மூலமான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதால் அமெரிக்கவுக்கு ஆதரவாக இருந்த பல நாடுகள் இலங்கையை பகைத்துக் கொள்ளாமலும் அமெரிக்காவிடம் அவப்பெயர் வாங்காத வகையிலும் நடுநிலை வகிக்கத் தீர்மானித்தன. பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டுமெனப் பாகிஸ்தான் கோரியது.

குறித்தப் பிரேரணைக்கு ஆதரவாக அமெரிக்கா, ஆர்ஜென்ரீனா, ஒஸ்ரியா, பெனின், பிரேஸில், சிலி, கோஸ்டாரிக்கா, ஐவரிகோஸ்ட், செக்குடியரசு, எஸ்டோனியா, ஜேர்மனி, கௌதமாலா, இந்தியா, அயர்லாந்து, இத்தாலி, லிபியா, மொண்டிநீக்ரோ, பெரு, போலந்து, கொரியா, மோல்டோவா, ரொமேனியா, சியராலியோன், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் வாக்களித்தன.

அதேவேளை, கொங்கோ, ஈக்குவடோர், இந்தோனேசியா, குவைத், மாலைதீவு, மொரிடோனியா, பாகிஸ்தான், பிலிப்பின்ஸ், கட்டார், தாய்லாந்து, உகண்டா, ஐக்கிய அரபு இராச்சியம், வெனிசுலா ஆகிய நாடுகள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன.

அங்கோலா, போட்ஸ்வானா, எத்தியோப்பியா, ஜப்பான், கசகஸ்தான், கென்யா, மலேசியா, புர்கினோ பாசோ ஆகிய நாடுகள் நடுநிலை வகித்தன.

கபோன் வாக்கெடுப்பு நேரத்தில் சபையில் இல்லாததால் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஜெனிவா நேரப்படி நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமான அமர்வில் இலங்கை மீதான பிரேரணை விவாதத்துக்கு விடப்பட்டது. இதன் பின்னர் 11.25 மணியளவில் வாக்கெடுப்பு நடைபெற்றது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

தலைமையகம்:
மின் அஞ்சல்
செய்தி:
news@uthayan.com
கருத்து:
comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com

# நினைத்ததை நிலைநிறுத்த அரசுக்கு மேலும் வாய்ப்பு

* இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில், அனைத்து நாடுகளும் ஏற்கக் கூடிய சுதந்திரமான, நம்பகமான விசாரணை அவசியம்.

* இலங்கைக்கு எதிராக சுயேச்சையான, சுதந்திரமான விசாரணை தேவை. அந்த விசாரணையில் அனைத்துலக சமூகத்தையும் பங்கெடுக்க வகை செய்ய வேண்டும்.

* இலங்கையில் தமிழர்களின் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும். ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் இலங்கை சென்று உண்மை நிலைமையைக் கண்டறிய வேண்டும்.

* நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது, அரச தரப்பில் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை வந்து விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா கொண்டுவர உத்தேசித்திருந்த தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதில் வெற்றிகண்ட இந்தியா, கொண்டுவந்த திருத்தங்களே மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்களாகும்.

இந்தியாவின் மேற்கண்ட மென்போக்கு அம்சங்களை உள்வாங்கிக் கொண்டு, நேற்று, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணை, 25 நாடுகளின் வாக்குகளைப் பெற்றுத் தீர்மானமாகிவிட்டது.

அமெரிக்கப் பிரேரணை, இந்தியத் திருத்தங்களால் நீர்க்கச் செய்யப்படாவிடின், எமது நாட்டு அரசு அனைத்துலக மட்ட விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டியதாகப் பாயம் உண்டாகி இருக்கும். எந்த நிலை நின்று பார்த்தாலும் இலங்கைக்கு இது இரண்டாவது வெற்றி என்பது துலாம்பரமாகியுள்ளது.

கடந்த வருடத்தைய ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தீர்மானம் இலங்கையால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை செயற்படுத்த இலங்கையை வலியுறுத்தியது.

இப்போதைய தீர்மானம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என்று கோருவதுடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்றவும் வலியுறுத்துகிறது.

அமெரிக்கா தனது நடவடிக்கையை நியாயப்படுத்தவே நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையையும் உள்வாங்கி தனது இரு தீர்மானங்களையும் தயாரித்திருப்பது கவனத்தில் எடுக்கக்கூடியது.

ஆனால், இந்த இரண்டு தீர்மானங்களுமே திருத்தங்கள் மூலம் நீர்த்துப்போகச் செய்யப்பட்டுவிட்டன. 2005 பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை இல்லாது ஜே.வி.பியிலும், ஜாதிக ஹெல உறுமயவிலும் தங்கியிருந்த மஹிந்த அரசுக்கு ஐ.தே.கவின் 17 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதில் பின்னணியில் செயற்பட்ட இந்தியா மஹிந்த அரசுக்கான ஆதரவைக் கைவிட இன்னும் தயாரில்லை என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கே உண்டு. ஆனால் இந்தியா அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. அமெரிக்காவின் தீர்மானத்தையே சிதிலமடையச் செய்துள்ளது. இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகம். நேற்றும் இதனை இப்பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

எனினும் அமெரிக்கத் தீர்மானத்தின் சில முக்கிய அம்சங்கள் நீக்கப்பட்டு தீர்மானம் மென்மையாக்கப்பட்டாலும் இதனை செயற்படுத்த வேண்டிய நெருக்கடி இலங்கைக்கு உண்டு. ஏற்கனவே ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை, ஐ.நா. உள்ளக விசாரணை அறிக்கை என்று இலங்கை மீதான அனைத்துலகப் பிடி இறுகி வருகிறது. இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்கள் மூலம் நெருக்கடி அதிகரித்துள்ளது.

மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளுக்கு புனர் வாழ்வளித்து அவர்களை விடுவிப்பது ஆகியவற்றில் இலங்கை குறிப்பிட்ட சிறிதளவான முன்னேற்றங்களைக் கண்டுள்ள போதிலும், இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறல், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, உட்படப் பல முக்கிய விடயங்களில் பின்னடிக்கிறது, ஒதுங்க நினைக்கிறது.

எந்த விவகாரத்திலும், தான் நினைத்ததையே நிலை நிறுத்தும் போக்கை இன்றைய அரசு கைவிடும் என்பதற்கான அறிகுறி தூரத்தே தானும் தென்படவில்லை. தர்மம் தலை காக்கும் என்ற நியமத்தை எட்டிப் பார்க்கவும் அது தயாரில்லை. ஜெனிவாத் தீர்மானம் அதற்கு மலர்தூவி ஊக்கமளிப்பதாகவே அமைகிறது.

# பொருளாதார மதிப்பீட்டுச் செயற்பாடு இலங்கையில் முதல் தடவையாக

## ஏப்ரலில் ஆரம்பிக்கத் திட்டம்

கொழும்பு, மார்ச் 22

இலங்கையில் முதல் தடவையாக பொருளாதார மதிப்பீட்டின் அடிப்படைச் செயற்பாடுகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு பொதுசன மற்றும் புள்ளி விவர மதிப்பீட்டுத் திணைக்களம் எதிர்பார்க்கிறது.

விவசாயத் தொழில்துறை மற்றும் சேவைகள் என்ற பிரிவுகள் உள்ளடங்கும் விதமாக 2013 மற்றும் 2014 ஆம்ஆண்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் இந்தப் பொருளாதார மதிப்பீட்டின் முன்னோடிப் பரிசீலனைகளை எதிர்வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவிக்கிறது.

அந்தத் திணைக்களத்தால் செயற்படுத்தப்படவுள்ள மதிப்பீடுகள், பரிசீலனைகள் மற்றும் நிர்வாகத் தரவுகளை சேகரித்துக் கொள்ளல் மற்றும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளல் சம்பந்தமாக ஊடகவியலாளர்களுக்கு அறிவுறுத்துவது தொடர்பான மாநாடு, பொதுசன மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தால் அண்மையில் நடத்தப்பட்டது.

இதன் போதே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

பத்தாண்டுகளுக்கு ஒரு தடவை இந்த நாட்டு எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்துத் தொழில் துறைசார்ந்த நிறுவனங்கள் உள்ளடங்கும் விதமாக தொழில்துறைகள் மதிப்பீடு ஒன்று பொதுசன மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன் அதற்கமைய 2013/2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள தொழில்துறைகள் மதிபீட்டுக்குப் பதிலாக முதற் தடவையாக பொருளாதார மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அந்தத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக தொழில்துறைகள் மதிப்பீட்டின்போது சேவைகள் பிரிவு உள்ளடங்காதிருப்பது, தரவுகளுக்கு நிலவும் கோரிக்கை அதிகரித்தல், வர்த்தக மற்றும் சேவைகள் பிரிவில் வேகமான வளர்ச்சி, வர்த்தக மற்றும் சேவைகள் பிரிவின் சராசரி தேசிய உற்பத்தி தொடர்பாக 59.5 வீதமாக உச்சப் பங்களிப்பை வழங்குதல், தேசிய வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொருளாதார அட்டவணைகள் தொடர்பாக தடைதாண்டல் தரவுகளைப் பெறுவதன் அத்தியாவசியம் போன்ற ஏதுக்கள் காரணமாக இவ்வாறு பொருளாதார மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.-என்று மேலும் கூறப்பட்டது. (ம-22)

# இலங்கையர் மொங்கோலியாவில் தொழில்களைப் பெறுவதற்கு வாய்ப்பு

## டிலான் பெரேரா தகவல்

கொழும்பு, மார்ச் 22

இலங்கையருக்கு மொங்கோலியாவில் வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாடுகள் மற்றும் நலனோம்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வாறு தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக அந்த நாட்டின் கதவுகள் திறந்து விடப்பட்டிருந்தாலும் கூட, அந்த நாட்டில் நிலவும் கடுமையான குளிர் காரணமாக இலங்கையர்களை அங்கு அனுப்பி வைப்பது சம்பந்தமாக இன்னமும் தீர்மானம் எடுக்க முடியாதுள்ளது.

அங்குள்ள மிகக் கடுமையான குளிர் நிலவும் சூழலில் பணியாற்றும் போது இந்த நாட்டு மக்களுக்கு பல்வேறு சிக்கல்கள் ஏற்படக் கூடும்.

இந்த நிலையில் அது சம்பந்தமாக ஆராயப்பட்டு வருகின்றது.

வேகமாக வளர்ந்து வரும் நாடொன்றான மொங்கோலியா முதலில் தொழிலாளர்களையே கோரியுள்ளது. அதன் பின்னர் தொழில்வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கவுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் உச்ச சம்பளங்களைப் பெறக் கூடிய நாடொன்றான மொங்கோலியா இலங்கையின் உழைப்பாளிகளுக்கு பொருந்தக்கூடிய நாடுதானா என்று ஆராயப்படுகிறது. -என்று அவர் மேலும் கூறினார். (ம-22)

# குடாநாட்டு உற்பத்தி பொருள்கள் தேசத்தின் மகுடம் கண்காட்சியில்

யாழ்ப்பாணம், மார்ச் 22

தேசத்தின் மகுடம் கண்காட்சியில் குடாநாட்டின் உற்பத்திப் பொருள்களையும் காட்சிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மும்முரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

பனம் பொருள் உற்பத்தி, மரக்கறி வகைகள், வெங்காயம் மற்றும் கைப்பணிப் பொருள்கள் போன்றவை முக்கியமாகக் காட்சி படுத்தப்படவுள்ளன.

நாளை சனிக்கிழமை அம்பாறையில் ஆரம்பமாகும் 2013 தேசத்தின் மகுடம் கண்காட்சியில் இவை காட்சிப் படுத்தப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# மூலிகைச் செடிகளுக்கு புதிய இணையத்தளம்

கொழும்பு, மார்ச் 22

மூலிகைச் செடிகளை மிகச் சரியாக இனங்கண்டு கொள்ளக் கூடியவாறு இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. றுகுணு பல்கலைக்கழகம், பாபேரியன் ஆயுள்வேத உல்லாசப் பயண ஹோட்டல்கள் குழுமம் மற்றும் தேசிய வைத்தியத்துறை அமைச்சு ஆகியன இந்த இணையத்தளத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

றுகுணு பல்கலைக்கழகத்தின் தாவரவியல் விஞ்ஞானக் கல்விப் பிரிவின் பேராசிரியர் எல்.பீ.ஜயதிஸ்ஸவின் தலைமையில் மருத்துவ மூலிகைகள் உள்ளடங்கிய இணையத்தளம் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் அதில் 1,374 வகையான மருத்துவ மூலிகைகள் பற்றிய தகவல்கள் அடங்கியுள்ளதாக தேசிய வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அவற்றை இனங்கண்டு கொள்ள வசதியாக புகைப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் மருத்துவப் பயன்பாடு, உணவுக்குப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய பகுதிகள், தாவரவியல் பெயர்கள் என அனைத்துத் தகவல்களும் இந்த இணையத் தளத்தில் உள்ளடங்கியிருப்பதாகவும் தேசிய வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (த-22)

# நெடுந்தீவு பனை தென்னை வள சங்கம் விரைவில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், மார்ச் 22

நெடுந்தீவு பனை தென்னை வள சங்கத்தை மீளப் புனர்நிர்மாணம் செய்து அதை ஆரம்பித்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென தற்காலிக பொது முகாமையாளர் ஒருவரை நியமித்து இந்தச் சங்கச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக எந்தவித செயற்பாடுகளும் இன்றி இந்தப் பனை தென்னை வள சங்கம் செயலிழந்த நிலையில் இருந்து வந்தது.

தற்போது தற்காலிக பொது முகாமையாளர் ஒருவரை நியமித்து சங்கத்தை மீள புனரமைக்கவும் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனை விட இந்தச் சங்கத்தின் கடந்த கால செயற்பாடுகள் குறித்தும் பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று கூறினார். (ம-17)

# 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு 5 ஆம் திகதிக்கு முன் ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம், மார்ச் 22

70 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் இனிமேல் மாதாந்தம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் வழங்கப்படல் வேண்டுமென முதியோருக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கு மாதத்தின் முதல் வாரத்திலும், ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவோருக்கு பிரதி மாதங்களில் 23 ஆம் திகதியும் வழங்கப்பட்டு வந்தது.

முதியோருக்கான தேசிய செயலகத்தால் அனுப்பப்பட்ட புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஐந்தாம் திகதிகளில் இந்தக் கொடுப்பனவை வழங்க வேண்டுமெனவும் நிதிக் கோரிக்கையை முதல் மாதத்தின் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் தொடக்கம் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் அனைவருக்கும் பிரதி மாதமும், ஐந்தாம் திகதி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்கடி முடங்கும் பாடசாலைக் கணினிகள்

அக்கராயன்,மார்ச் 22

கிளிநொச்சி வன்னேரிக் குளம் மகாவித்தியாலயத் துக்கு வழங்கப்பட்ட கணி னிகள் அடிக்கடி முடங்கிக் கொள்வதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலைக் கென கணினிகள் வழங்கப் பட்டபோதிலும் மின்சார வசதிகள் இல்லாததால் நீண்ட நாள்களுக்குப் பின்னர் கிடைத்த மின்பிறப்பாக்கி ஒன்றின் மூலமாக இவை இயக்கப்பட்டு வருகின்றன.

தினமும் இந்த மின்பிறப் பாக்கியை இயக்குவதில் சிரமங்கள் காணப்படுகின் றன. இதனால் சில தினங் களில் இது இயக்கப்படுவ தில்லை. இதன் போது கணி னிகளும் செயலிழந்த நிலை யில் காணப்படுகின்றன.

வன்னேரிக்குளம் கிரா மத்தை ஊடறுத்து மின்கம் பங்கள் நடப்பட்டுள்ள போதி லும் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத நிலை காணப் படுகின்றது. 60 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட வன்னேரிக்குளம் கிராம மக்கள் மின்சாரம் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருப்பதை அவதா னிக்க முடிகின்றது. (க-18)

## சனசமூக நிலையங்களை அமைக்குமாறு கோரிக்கை

துணுக்காய்,மார்ச் 22

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் 20 கிராம அலுவலர் பகுதிகளிலும் சனசமூக நிலையங்களை அமைக்குமாறு மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

துணுக்காய்ப் பிரதேச சபையினர் மல்லாவியில் ஒரு பொது நூலகத்தை இயக்கி வருகின்றனர்.

ஆனால் புத்துவெட்டு வான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், அம்பலப் பெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம், உயிலங்குளம் ஆகிய கிராமங்கள் இதுவரை சனசமூக நிலையங்கள் அமைக்கப்படாத நிலையி லேயே காணப்படுகின்றன.

இதனால் பத்திரிகைகள் தமது கிராமங்களுக்கு வரு வதில்லையென இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் வெளி யுலகச் செய்திகளைத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளதால் சனசமூக நிலையங்கள் அமைக்கப்படுமாயின் பத்திரி கைகள், நூல்கள் ஆகிய வற்றை வாசித்து தகவல் களை அறிந்துகொள்ள முடி யும் என்றும் அவர்கள் தெரி விக்கின்றனர். (க-18)



அக்கராயன் ஆனைவிழுந்தானில் கரும்புச் செய்கையாளருக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அங்குள்ள கரும்புத் தோட்டம் ஒன்றைப் பார்வையிடுகின்றனர். (க-18)

# அக்கராயன் - யாழ். பஸ்சேவை ஆரம்பம்

அக்கராயன்,மார்ச் 22

அக்கராயனிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தனியார் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் அக்கராயனிலிருந்து காலை 6.40 மணிக்கு புறப்பட்டு முக்கொம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு, 10ஆம் கட்டை, நல்லூர், ஆலங்கேணி, பூநகரி, சங்குப்பிட்டி, கேரதீவு வழியாக யாழ்ப்பாணத்தைச் சென்றடையும். பின்னர் பிற்பகல் 2.40 க்கு யாழ்ப்பாணத்திலிருந்து அதேவழியாக அக்கராயனை நோக்கிப் பயணிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வன்னேரிக்குளத்திலிருந்து தனியார் பஸ் சேவை இடம்பெற்றபோதும் தொடர்ந்து பெய்த மழை, வன்னேரிக்குளம் வீதியின் மோசமான நிலை என்பவை காரண மாக நிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் முக்கொம்பன், சின்னப்பல்ல வராயன்கட்டு ஆகிய இடங்களில் வசிக்கும் மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர் கொண்டு வரும் நிலையில் தற்போது இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை பாதிக்கப் பட்ட மக்களுக்குப் பேருதவியாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

## வவுனியாவில் 33 வழக்குகள் வர்த்தகர்களுக்கு எதிராக

நெளுக்குளம்,மார்ச் 22

வவுனியா மாவட்ட வர்த் தகர்களுக்கு எதிராக நடப்பு ஆண்டில் இதுவரை 33 வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட இணைப்பாளரான ஆர்.எஸ். ராஜபக்ஷ.

பொருள்களின் பாவ னைத் திகதி முடிவடைந்துள் ளமை, விலைகப் பட்டியலைக் காட்சிப் படுத்தாமை, கட்டுப் பாட்டு விலையிலும் பார்க்க அதிக விலைக்குப் பொருள் களை விற்பனை செய்தமை, உற்பத்திகளுக்குரிய லேபிள் கள் இடப்படாமை ஆகிய கார ணங்களால் இந்த வழக்குகள் குறிப்பிட்ட வர்த்தகர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப் பட்டன.

கடந்த ஆண்டு இதே காரணங்களுக்காக 157 வழக் குகள் தாக்கல் செய்யப்பட் டன.

இதே வேளை சில வர்த் தகர்கள் மிகுதிப் பணம் வழங்குவதில்லை எனவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. மிகுதிப் பணம் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் நுகர்வோரின் விருப்பத்தின் பேரில் அவர்கள் கேட்கின்ற பொருள்களை வழங்க வேண் டும். அதை விடுத்து தாம் விரும்பும் பொருள்களை வர்த்தகர்கள் நுகர்வோருக்கு வழங்க முடியாது.

**மிகுதிப் பணம் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் நுகர்வோரின் விருப்பத்தின் பேரில் இவர்கள் கேட்கின்ற பொருள்களை வழங்க வேண்டும்.**

தற்போது ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள் ளன. இவற்றின் ஊடாக அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

எனவே நுகர்வோரின் பாதுகாப்புக் குறித்து நாம் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றோம்என அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## முல்லை- துணுக்காய் பஸ் சேவை ஆரம்பம்

அக்கராயன்,மார்ச் 22

முல்லைத்தீவிலிருந்து துணுக்காய் வரையான அரச பஸ் சேவை கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருவதாகத் தெரிய வருகின்றது.

முல்லைத்தீவிலிருந்து மாலை 4.30 மணிக்குப் புறப்படும் இந்த பஸ் துணுக்காயை இரவு சென்றடைந்து அங்கே தரித்து நிற்கின்றது. பின்னர் மறுநாள் காலை 6.30 மணிக்கு முல்லைத்தீவை நோக்கி தனது பயணத்தை ஆரம்பிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

## அக்கராயன் சந்தியை புறமொதுக்கும் பஸ் சேவை

அக்கராயன்,மார்ச் 22

துணுக்காயிலிருந்து அக்கராயன் வழியாகச் செல்லும் தனியார் பஸ் அக்கராயன் சந்தியில் தரித்து நிற்காமை யால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அக்கராயன் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந் துள்ளது. இதேபோன்று துணுக்காய், முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பாக இரண்டு மாவட்டங்களையும் சேர்ந்த தனியார் பஸ் சங்கங்கள் பேச்சு நடத்தி முடிவு ஒன்று எட்டப்பட வேண்டும். வேறுபாடு காரணமாக பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிய வந்துள்ளது. மேலும் இது தொடர்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர்களின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

துணுக்காயிலிருந்து ஆரம்பிக்கப்படும் பஸ்சேவை அம்பலப்பெருமாள்குளம், அக்கராயன், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி வழியாக யாழ்ப்பாணம் சென்று பின்னர் அதே வழியாகத் துணுக்காயைச் சென்றடைவது வழக்க மாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### வினாடிவினாப் போட்டியில்

## வவுனியா கல்வி வலயத்துக்கு தேசிய மட்டத்தில் மூன்றாமிடம்

கிளிநொச்சி, மார்ச் 22

தமது கல்வி வலயம் வினாடி வினாப் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா தெரிவித்தார்.

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட உங்களுக்குத் தெரியுமா? சுகாதார வினாடி வினாப் போட்டியில் வவு னியாதெற்கு வலயம் மாகாண மட்டத்தில் முதலாவது இடத்தையும், தேசிய மட்டத் தில் மூன்றாவது இடத்தை யும் பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த வவு னியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து சு.கோகுலன், இ.லவகீர்த் தன், யோ.டிசாந் ஆகியோ ரும், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்திலிருந்து சி.பவதாரணி, ப.துவாரகா, தெ.கேசவி ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

கடந்த ஆண்டு நடை பெற்ற போட்டியிலும் இந்தக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் தேசிய மட் டத்தில் இரண்டாவது இடத் தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## நிவாரணத்தைத் தாருங்கள் !

வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடு களை மேற்கொள்ளுமாறு இடர்முகாமைத்துவ அமைச் சின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை கைத் தொழில் வர்த்தக அமைச் சரின் இணைப்புச் செயலாளர் அனுப்பி வைத்திருப்பதாக வவுனியா மாவட்ட கமக்காரர் அமைப்பின் செயலாளர் வேலாயுதம் இராஜேந்திரன் தெரிவித்தார். இதேவேளை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் மற்றும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட வெள் ளம் காரணமாகப் பாதிப் படைந்த விவசாயிகளுக்கு இதுவரை நிவாரணம் வழங் கப்படாமையால் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## ஆரம்ப பிரிவு தனியாக

பளை,மார்ச் 22

பளை மத்திய கல்லூரியில் இயங்கிய ஆரம்பப் பிரிவு தனியான அலகாக இயங்க ஆரம்பித் துள்ளது. பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் என்ற பெயரில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இது இயங்கி வருகிறது. இதன் அதிபராக செல்வி பா.வேலுப்பிள்ளை பொறுப்பேற்று கடமை யாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# சர்வோதயத்தின் ஏற்பாட்டில் கலந்துரையாடல்

மன்னார், மார்ச் 22

மன்னார் சர்வோதயம் ஏற்பாடு செய்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் சர்வோதய அமைப் பின் மாவட்ட இணைப்பாளர் சி.[illegible] தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் நிலவும் மதங்களுக்கிடையிலான முரண்பாட்டைக் களையும் முகமாகவும் மதம், இனங்களுக் கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் முக மாகவும் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதில் சுமார் 40 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது பல்வேறு மதங்களைச் சேர்ந்த பெரியோர்கள் சர்வோதய சமூக வேலைத்திட்ட இணைப்பாளர் எஸ். கணேஸ் ஆகியோரும் சமுகமளித்திருந் தனர். (க-12)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மோ. சைக்கிள் விபத்து இருவர் காயம்

வலி.வடக்கு, மார்ச் 22

சுன்னாகம் இராணுவ முகாமுக்கு முன்பாக நேற்றுமுன் தினம் புதன் கிழமை காலை இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாய மடைந்தனர்.

மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

மல்லாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திடீரெனத் திருப்பிய போது விபத்து இடம்பெற்றுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. (ம-86)



கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழாவில் மாணவர்களுடன் முதன்மை விருந்தினரான தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா, அதிபர் திருமதி இ.சிவஞானசிவம் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (ம-9)

## காசநோய் எதிர்ப்பு வாரத்தையொட்டி வர்த்தக ஊழியருக்கு பரிசோதனை

### சாவகச்சேரி நகரசபை ஏற்பாடு

தென்மராட்சி, மார்ச் 22

சர்வதேச காசநோய் எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச வர்த்தக நிலையங்களில் பணி புரிவோருக்கு மார்புநோய் பரிசோதனையை இலவசமாக நடத்த ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி நகரசபையினர் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட அரிசி ஆலைகளில் பணி புரிவோருக்கும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் சிகை அலங்கரிப்பு நிலையங்களில் பணியாற்றுவோருக்கும் அடுத்த வாரம் இலவச மார்பு நோய்ப் பரிசோதனைகளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் மூலம் நடத்தவுள்ளனர்.

இதேவேளை, சாவகச்சேரி நகர சபையின் ஏற்பாட்டில் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொது அமைப்பு நிலையங்களில் காச நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தலைமையிலான குழுவினரால் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் நடத்தப்பட்டு வருவதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம-9)

## நாவற்குழி சுகாதாரப் பிரிவில் காய்ச்சல் நோயாளர் அதிகரிப்பு

தென்மராட்சி, மார்ச் 22

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற வந்தவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் பிரகாரம் கடந்த மூன்று வாரங்களில் நாவற்குழி பொது சுகாதார பிரிவுக்கு உட்பட்டவர்கள் அதிக அளவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற வருவோரின் விவரம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொது சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக பதிவு செய்யப்பட்டு வருகிறது.

இதன் பிரகாரம் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 17 ஆம் திகதி வரையான மூன்று வார காலத்தில் நாவற்குழி பொது சுகாதார பரிசோதகர் பிரிவைச் சேர்ந்த மக்களே காய்ச்சலால் அதிகம் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் காய்ச்சலால் அதிகம் பாதிக்கப்படும் பிரதேசங்களை இனங் கண்டு உரிய சிகிச்சைகளை வழங்க சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருவோரின் விவரங்கள் தினமும் பதிவு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# 19 வீதிகளின் அபிவிருத்திக்கு 2,740 மில். ரூபா ஒதுக்கீடு

**யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், மார்ச் 22

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் 19 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கென 2 ஆயிரத்து 740 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் 9 வேலைத் திட்டங்களில் 6 கிலோமீற்றர் நீளமான வீதிப்புனரமைப்புக்கு 42 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்குரிய வேலைகள் யாவும் கடந்த ஆண்டே முடிவுறுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாகாண சபை என்பவற்றினது நிதி ஒதுக்கீட்டில் 4 வேலைத் திட்டங்களில் 55.74 கிலோ மீற்றர் நீளமான வீதிப் புனரமைப்புக்கு ஆயிரத்து 515.49 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தற்போது 40 சதவீதமான வேலைகளே நிறைவுறுத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இவை பூரணப்படுத்தப்படும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 6 வேலைத் திட்டங்களில் 60.87 கிலோ மீற்றர் நீளமான வீதிப் புனரமைப்புக்கு ஆயிரத்து 182.64 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 60 சதவீதமான வேலைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய வேலைகள் இந்த ஆண்டு இறுதிக்குள் பூரணப்படுத்தப்படும்.

2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குக் கீழ்வரும் 128 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படும் என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## மின்சாரம் விநியோகிக்க போதிய நிதி இல்லை

### வேலணை பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

நிதிப் பற்றாக்குறை காரணமாக வேலணை பிரதேசத்தில் சில பகுதிகளுக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை என்று வேலணை மின்சார சபை பொறுப்பதிகாரி கூறினார்.

அம்பிகை நகரில் மின்சாரம் வழங்கக் கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளன.

அவை இரண்டு கிழமைக்குள் மதிப்பீடு செய்யப்படும். தூண்கள் போட வேண்டியுள்ளது. அதற்கு ஒரு மாத காலம் வரை செல்லும்.

நிதிப் பற்றாக்குறை இருப்பதால் சில இடங்களில் இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

மூன்று அல்லது நான்கு மாதங்களில் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ம-7)

## அங்காடி வியாபாரிகளுக்கு சாவகச்சேரியில் இடம்

தென்மராட்சி, மார்ச் 22

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சந்தைக்கு வரும் தென்னிலங்கைப் பகுதி அங்காடி வியாபாரிகளை சந்தைக்கு வெளியே பொருத்தமான இடத்தில் வியாபாரம் செய்ய இடம் ஒதுக்க வேண்டும் என்று நகர சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்றத்தினர் விடுத்த கோரிக்கை நேற்று முன் தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் முன் வைக்கப்பட்டு ஆராயப்பட்டது.

சித்திரைப் புது வருட வியாபாரத்துக்காகத் தற்போது சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு தென் பகுதி வியாபாரிகள் வந்த வண்ணமுள்ளனர்.

புது வருடத்தை அண்டிய காலத்தில் பெரும் எண்ணிக்கையில் அங்காடி வியாபாரிகள் வருகை தரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் சந்தைக்கு வெளியே பொருத்தமான இடத்தை அங்காடி வியாபாரிகளுக்கென ஒதுக்கி நகர்ப் பகுதி வர்த்தகர்களின் வியாபாரம் பாதிப்புறாத வகையில் நடவடிக்கை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. (ம-9)

## சித்திரை புத்தாண்டு வியாபாரத்துக்கு ஞாயிறு கடைகள் திறக்க அனுமதி

**வணிகர்களின் வேண்டு கோளுக்கு இணங்க மார்ச் 24,31, ஏப் 7,14, ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் வணிக நிலையங்களைத் திறக்க அனுமதி.**

தென்மராட்சி, மார்ச் 22

சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்ற எல்லைப்பரப்பில் உள்ள அனைத்து வணிக நிலையங்களையும் சித்திரைப் புத்தாண்டு வியாபாரத்துக்காக எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஏப்ரல் 14 ஆம் திகதி வரையான நான்கு ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கலாமென சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளர்.

கடந்த காலங்களில் பண்டிகை தினத்துக்கு முன்னர் வரும் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வணிக நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்குவதே வழமை எனவும் பெரும் எண்ணிக்கையான வணி கர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மார்ச் 24,31, ஏப் 7,14, ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் வணிக நிலையங்களை வியாபாரத்துக்காகத் திறப்பதற்கு நிர்வாகம் முடிவு செய்துள்ளது என்றும் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார். (ம-9)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சவச்சாலைக் கட்டட வேலை மந்த கதியில்

தென்மராட்சி, மார்ச் 22

சாவகச்சேரி வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வரும் சவச்சாலை கட்டட வேலைகள் மந்த கதியில் இடம்பெறுவது குறித்து பொது மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சவச்சாலை கட்டடம் அமைக்க சுகாதாரத் திணைக்களத்தால் கடந்த வருடம் 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு கட்டடத்திணைக்களத்திடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டன.

கட்டடத் திணைக்களத்தால் கடந்த ஏப்ரல் மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் இன்னமும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன.

வைத்தியசாலை வளாகத்தில் முன்னர் சவச்சாலை இருந்த கட்டடத்துக்கு அருகில் இது நிர்மாணிக்கப்பட்டு வருவதால் வைத்தியசாலையில் சடலங்களை பழைய கட்டடத்துக்குக் கொண்டு செல்வதற்கும் அவற்றை வெளியே கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று கூறப்பட்டது.

இக்கட்டட வேலையை விரைவில் பூர்த்தி செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

## நான்கு வீதத்துக்கு மேல் வரி வழங்காதீர்கள்

### நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

திருநெல்வேலி சந்தையில் விவசாயிகள் தமது பொருள்களுக்கு 4 வீதத்துக்கு மேல் வரி கொடுக்க வேண்டாம் என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சந்தையில் பொருள்களுக்கு 4 வீதவரி அறவிட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அறிவிப்பை மீறி பொருள்களுக்கு 5 வீதவரி அறவிடப்படுவதாக விவசாயிகள் [illegible] கொண்டும் தமது பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரிக்கு மேலதிகமாக வழங்க வேண்டாம்.

வரி செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைத் தவறாது பெற்றுக் கொள்ளுங்கள். மேலதிகமாக வரி அறவிடப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

வரி அறவீடு சம்பந்தமாக கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று அவர் மேலும் கூறினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடங்குளத்தில் மேலும் இரு அணு உலைகள்



கூடங்குளம், மார்ச் 22

கூடங்குளத்தில் ஒவ்வொன்றும் ஆயிரம் மெகாவாற் மின் உற்பத்தித்திறன் கொண்ட 3 ஆவது மற்றும் 4 ஆவது அணு உலைகளை ரஷ்யா அமைக்க தற்போது மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்யாவின் உதவியுடன் அணுமின் நிலையம் அமைப்பது தொடர்பாக 1988ஆம் ஆண்டும், அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த ஒப்பந்தங்களின்படி, அங்கு 2 அணு உலைகளை அமைக்க முடியும். முதல் கட்டமாக தற்போது அங்கு ஒவ்வொன்றும் ஆயிரம் மெகா வாற் மின் உற்பத்தித் திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அணுமின் நிலையம் அமைப்பதற்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களின் காரணமாக பணிகள் பாதிக்கப்பட்டதால், அங்கு மின் உற்பத்தியை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதில், முதலாவது அணு உலையில் விரைவில் மின் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கான பணியில் இந்திய அணுமின் கழக பொறியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.


முதலாவது அணு உலையில் ஏப்ரல் மாதத்திலும், 2 ஆவது அணு உலையில் டிசெம்பர் மாதத்துக்குள்ளும் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று பிரதமர் அலுவலக மத்திய அமைச்சர் வி.நாராயணசாமி அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். எனினும் பணிகள் தாமதமாவதால், உற்பத்தியை ஆரம்பிப்பது மேலும் தாமதிக்கலாம் என்று தெரிகிறது.

அதாவது முதலாவது அணு உலையில் மே மாதத்துக்குள்ளும், 2ஆவது அணு உலையில் வருகிற டிசெம்பர் மாதத்துக்குள்ளும் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய அணுமின் கழகம் தெரிவித்துள்ளது. (வ)

### கூட்டணியில் இருந்து விலகியதை அடுத்து

# ஸ்ராலின் வீட்டில் சி.பி.ஐ. நேற்று அதிரடிப் பாய்ச்சல்

## அதிர்ச்சியில் தி.மு.க.



சென்னை, மார்ச் 22

ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகிய நிலையில், அந்தக் கட்சியின் பொருளாளர் ஸ்ராலின் வீட்டில் மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் நேற்று அதிரடிச் சோதனை நடத்தினர். இது தி.மு.க.வை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

ஸ்ராலின் மகன் உதயநிதி ஸ்ராலின் வெளி நாட்டில் இருந்து சொகுசுக் காரை இறக்குமதி செய்ததில் முறைகேடு நடந்திருப்பதாக எழுந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, சென்னை தேனாம்பேட்டையில் இருக்கும் அவரது வீட்டில் காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

டில்லியில் இருந்து வந்த சி.பி.ஐ. அதிகாரிகள் 6 பேர் கொண்ட அதிகாரிகள் குழுவினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹம்மர் காருக்கு முறையான ஆவணம் இருக்கிறதா, சரியான தொகை செலுத்தப்பட்டதா என அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். அதேபோல், சென்னை திருமூர்த்தி நகரில் இருக்கும் ஸ்ராலினின் நெருங்கிய நண்பரான ராஜசங்கர் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது.

உதயநிதி ஸ்டாலின் மீது வழக்கு பதிவு செய்யப்படலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**பழிவாங்கும் நடவடிக்கை**

சோதனை நடைபெற்ற வேளை செய்தியாளர்களிடம் பேசிய ஸ்ராலின் கூறியதாவது:-

''இது பழிவாங்கும் நடவடிக்கை ஆகும். கூட்டணியில் இருந்து விலகியதால் காங்கிரஸின் கைப்பாவையான சி.பி.ஐ. இவ்வாறு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது மிரட்டல், உருட்டல் என்றார். எந்த வழக்கையும் சட்டப்படி சந்திப்பேன்'' என்றார்.

**ப.சிதம்பரம் அதிருப்தி**

ஸ்ராலின் வீட்டிலி நடைபெற்ற சோதனைக்கு மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அதிருப்தி வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''நான் இதனை ஏற்க மாட்டேன். இதுதொடர்பாக சி.பி.ஐ. பொறுப்பு அமைச்சரிடம் பேசுவேன். இவ்வாறு சோதனை நடத்தப்பட்டிருக்கக் கூடாது. இது தொடர்பில் மத்திய அமைச்சர் நாராயணசாமியை நேரில் சந்தித்துப் பேசியுள்ளேன்''-என்றார்.

இதேவேளை பா.ஜ., மற்றும் இடதுசாரிக் கட்சிகளும் இந்தச் சோதனை குறித்து கண்டனம் தெரிவித்துள்ளன. காங்கிரஸின் கைப்பாவையாக சி.பி.ஐ. செயற்படுகிறது என விமர்சித்துள்ளன. (வ)

## கர்நாடக சட்டசபை தேர்தல் மே 5 இல்

டில்லி, மார்ச் 22

கர்நாடக சட்டசபைத் தேர்தல் ஒரே கட்டமாக மே 5 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் வி.எஸ்.சம்பத், டில்லியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து, கர்நாடக சட்டசபைத் தேர்தல் திகதியை அறிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கர்நாடக சட்டசபைத் தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் உடனடியாக நடைமுறைக்கு வருகின்றன. தேர்தல் அறிவிப்பு ஏப்ரல் 10 ஆம் திகதி வெளியிடப்படும். அப்போதிலிருந்து வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யத் தொடங்கலாம். ஏப்ரல் 17 ஆம் திகதிக்குள் வேட்பு மனுத் தாக்கல் செய்ய வேண்டும்.

அதற்கு அடுத்த நாள் மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். மனுக்களை வாபஸ் பெறுவதற்கான இறுதித் திகதி ஏப்ரல் 20 ஆகும். மே 5ஆம் திகதி அனைத்துத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும். காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ள வாக்குப்பதிவுக்கு மின்னணு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். வாக்கு எண்ணிக்கை மே 8 ஆம் திகதி நடைபெறும். (வ)

## இடிந்தகரை மாணவரும் போராட்டம்



ஈழத் தமிழர்களுக்கு தனி ஈழம் வேண்டியும் ஈழத்தில் நடைபெற்ற போர்க்குற்றங்களை விசாரணை செய்யக்கோரியும் தமிழக மாணவர்களுக்குத் துணையாக இடிந்தகரை பாடசாலை மாணவ, மாணவிகள் 1500 இற்கும் மேற்பட்டோர் பாலச்சந்திரனின் உருவப்படத்தை நெஞ்சில் ஏந்தி ஊர்வலமாகச் சென்று தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். சிறுவர் தொடக்கம் பெரிய மாணவர் வரை இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இடிந்தகரையில் கூடங்குளம் அணு உலைக்கு எதிரான பிரதான திடலில் அமைக்கப்பட்டுள்ள பெரிய பந்தல்வரை ஊர்வலமாகச் சென்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (வ)

## மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் சஞ்சய் தத்துக்கு 5 வருடச் சிறை

டில்லி, மார்ச் 22

மும்பை தொடர் குண்டு வெடிப்பு தொடர்பாக நடிகர் சஞ்சய் தத் மீது 1993 ஆம் ஆண்டில் பதிவு செய்த ஆயுத சட்டம் வழக்கில் உச்ச நீதிமன்றம் நேற்று அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மும்பையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 257 பேர் உயிரிழந்தனர். 700 இற்கும் மேற்பட்டோர் படு காயமடைந்தனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட நடிகர் சஞ்சய் தத்துக்கு உச்சநீதிமன்றம் 5 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கியுள்ளது. (வ)

## நீருக்குள் இருந்து இலக்கை தாக்கும் ஏவுகணைப் பரிசோதனை வெற்றி

### உலக சாதனை படைத்தது இந்தியா



விசாகப்பட்டினம், மார்ச் 22

நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து பாய்ந்து இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட பிரமோஸ் ஏவுகணையை, நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகப் பரிசோதித்து உலக சாதனை படைத்துள்ளது இந்தியா.

விசாகப்பட்டினம் அருகே பான்டூன் பகுதியில் இந்தப் பரிசோதனை இடம்பெற்றது. இதன் மூலம் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து 290 கி.மீ. தொலைவு சென்று தாக்கும் திறன் கொண்ட, ஒலியை விட வேகமாகச் செல்லும் ஏவுகணையைக் கொண்டுள்ள முதலாவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இது குறித்து பிரமோஸ் திட்ட தலைவர் ஏ. சிவதாணுபிள்ளை தெரிவித்ததாவது:-

நீருக்கடியில் இருந்து 290 கி.மீ. தொலைவுக்கும் அதிகமாகச் சென்று இலக்கைத் தாக்கும் சுப்பர்சொனிக் ஏவுகணை வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டமை உலகிலேயே இதுதான் முதல் முறை. இந்தப் பரிசோதனையில் ஏவுகணை துல்லியமாக இலக்கைத் தாக்கியது. இதன் மூலம் நீர்மூழ்கிக் கப்பலில் பொருத்தப்படுவதற்கு பிரமோஸ் முழு [illegible] உலகளவில் [illegible] களுள் இதுவும் ஒன்று -என்றார். (வ)

## இத்தாலி வீரர்களை இந்தியாவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்

### ■ மன்மோகன் கேரள முதல்வருக்குக் கடிதம்



டில்லி, மார்ச் 22

''இத்தாலி வீரர்களை இந்தியாவுக்குக் கொண்டுவர தூதரக அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்'' என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கேரள முதல்வர் உம்மன்சாண்டிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஆண்டு பெப்ரவரியில் அரபிக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த கேரள மீனவர்கள் மீது அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்த இத்தாலிக் கப்பலில் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டிருந்த கடற்படை வீரர்கள் துப்பாக்கியால் சுட்டனர். அந்தச் சம்பவத்தில் இரண்டு மீனவர்கள் உயிரிழந்தனர். அதையடுத்து, சம்பந்தப்பட்ட இத்தாலிக் கடற்படை வீரர்கள் மஸ்ஸிமிலியானோ லதோர், சல்வதோர் கிரோன் என்போர் கைது செய்யப் பட்டனர். அவர்கள் மீது கேரள நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கடற்படைவீரர்கள் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக பிணையில் இத்தாலிக்குச் சென்றனர். எனினும் அவர்களைத் திருப்பி அனுப்ப இத்தாலி மறுத்துள்ளது. இந்நிலையில் கடற்படை வீரர்கள் இருவரையும் இந்தியாவுக்குக் கொண்டுவர தூதரக மட்டத்திலும் சட்ட ரீதியாகவும் உள்ள வழிமுறைகள் குறித்து ஆராயப்படும்-என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரிய விவகாரத்தில் தலையிடுகிறது சீனா

## அமைதி முயற்சிகளில் ஈடுபடத் தயாராம்



பீஜிங், மார்ச் 22

தென்கொரியா மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடத் தான் தயாராக உள்ளதாக என்று சீனா தெரிவித்துள்ளது.

தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியூன்-ஹையை நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங், இந்தத் தகவலை அவருக்குத் தெரியப்படுத்தியுள்ளார் என்று சீன வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

''தென்கொரியா மற்றும் வடகொரியாவுக்கு இடையே அதிகரித்து வரும் போர்ப் பதற்றம் எமக்குக் கவலையளிக்கின்றது. ஒரு காலத்தில் ஒரே நாடாக இருந்த இந்த இரு நாடுகளுக்கும் இடையே சுமுகமான உறவு இருக்க வேண்டியது அவசியம் என்றே சீனா கருதுகின்றது. அந்த வகையில் இருநாடுகளுக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள சீனா தயராக உள்ளது. ஜனாதிபதி ஜி ஜின் பிங் இது குறித்து தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியூன் -ஹையுடன் தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளார்''- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவின் நெருங்கிய நட்பு நாடாக சீனா விளங்குகிறது. எரிபொருள் உள்பட மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாகவும் இவ்விரு நாடுகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## சீன முகவரியில் இருந்தே இணையவழித் தாக்குதல்

### தென்கொரியப் பொலிஸார் கூறுகின்றனர்



சியோல், மார்ச் 22

நேற்றுமுன்தினம் தென்கொரியாவின் முக்கிய வங்கிகள் மற்றும் ஒளிபரப்பு நிலைய வழங்கிகள் மீது மேற்கொள்ளப்பட்ட இணையவழித் தாக்குதல் சீன முகவரி ஒன்றில் இருந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தென்கொரியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தென்கொரிய இணையப் பாதுகாப்புப் பிரிவினர் நடத்திய விசாரணைகளிலேயே சீன முகவரியில் இருந்து தாக்கு தல் நடத்தப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இணையவழித் தாக்குதலின் மூலம் தென்கொரியாவின் முக்கிய மூன்று வங்கிகள் மற்றும் இரு ஒளிபரப்பு நிலையங்களின் வழங்கிகள் பாதிப்புக்குள்ளாகின. அதனால் சுமார் 32 ஆயிரம் கணினிகள் செயலிழந்தன. அதையடுத்து தென்கொரிய இணையப்பாதுகாப்புப் பிரிவினர் தீவிர ஆய்வுகளை மேற் கொண்டனர். அதன்போதே மேற்படி தாக்குதல் சீன முகவரியில் இருந்து நடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்த விசாரணைகள் தீவிரமாக இடம்பெற்றுவருவதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் பாதிக்கப்பட்ட வழங்கிகள், கணினிகள் சீர்செய்யப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தனர்.

அண்மையில் சீன முகவரியில் இருந்து நடத்தப்பட்ட இணையவழித் தாக்குதலில் அமெரிக்காவின் புகழ்பெற்ற நாளிதழான 'நியூயோர்க் டைம்ஸ்' நாளிதழின் அலுவலகக் கணினிகள் செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## பிரான்ஸ் பணயக் கைதி கொல்லப்பட்டார்?

நோவாக்கோர்ட், மார்ச் 22

தம்மால் பிடித்து வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் பணயக் கைதிகளில் ஒருவரைக் தாம் கொன்று விட்டதாக அல்குவைதா அமைப்புத் தெரிவித்துள்ளது.

மாலியில் பிடிக்கப்பட்ட பயணக் கைதி ஒருவரே கொல்லப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. உளவு நடவடிக்கையில் ஈடுபட்டமைக்கான அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்று அல்குவைதா அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும் பிரான்ஸ் தரப்பு அதனை உறுதிப்படுத்தவில்லை. (ற)

## இஸ்ரேல் சென்றடைந்தார் ஒபாமா



இஸ்ரேலிய ஏவுகணை எதிர்ப்புப் பொறிமுறையைப் பார்வையிடும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா. அருகில் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மத்திய கிழக்கு நாடுகளுக்கான நான்கு நாள் பயணத்தை ஆரம்பித்துள்ளதுடன், அதன் முதற் கட்டமாக நேற்றுமுன்தினம் இஸ்ரேலை வந்தடைந்தார்.

ஒபாமா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மேற்கொண்ட முதலாவது இஸ்ரேல் பயணம் இதுவாகும். சிரியாவில் பயன்படுத்தப்படும் இரசாயன ஆயுதங்கள் தொடர்பிலும், சிரியாவின் உள்நாட்டுப் போர் காரணமாக அந்த இரசாயன ஆயுதங்கள், இஸ்ரேலின் எதிரியான ஹெஷ்பொல்லாஹ் அமைப்பின் கைகளில் சிக்காமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் ஆராய்வதே ஒபாமாவின் இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கமெனக் கருதப்படுகிறது.

அது தவிர ஈரானின் அணுவாயுத இலக்குகள் குறித் தும் அவற்றால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் குறித்தும் இஸ்ரேல் தலைவர்களுடன் ஒபாமா ஆலோசிக்க உள்ளார் என்றும் கூறப் படுகிறது.

ஒபாமாவின் மத்திய கிழக்குப் பயண நிகழ்ச்சி நிரலின்படி எதிர்வரும் தினங்களில் வெஸ்ட் பாங்க் மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## பாக். தேர்தல் மே 11 இல்

இஸ்லாமாபாத், மார்ச் 22

பாகிஸ்தான் பொதுத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த அறிவிப்பை பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஸிப் அலி சர்தாரி வெளியிட்டுள்ளார். நாடாளுமன்றின் ஆட்சிக்காலம் கடந்த வாரம் முடிவடைந்துள்ள நிலையில், தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கும்படி பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப், ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியிடம் அதிகாரப் பூர்வமாகக் கோரிக்கை விடுத்திருந்தார். அதையடுத்தே சர்தாரி தேர்தலுக்கான திகதியை அறிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ''பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப்பிடம் இருந்து தேர்தல் தொடர்பான கோரிக்கை வந்தவுடன், ஜனாதிபதி அதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். முறைப்படி தேர்தல் அட்டவணையை தேர்தல் ஆணையம் 2 நாள்களில் வெளியிடும். - என்றார் (ற)

## ஓரினச் சேர்க்கைக்கு ஹிலாரி ஆதரவு

வொஷிங்டன், மார்ச் 22

ஓரினச் சேர்க்கையாளர்களுக்குத் தாம் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளார் அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலர் ஹிலாரி கிளிங்டன்.

அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கைத் திருமணத்துக்கு சட்ட உரிமை கோரி நீண்ட காலமாக போராட்டம் நடைபெற்று வருகின்றது. அதற்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளிங்டன் அனுமதி வழங்கவில்லை. எனினும் தற்போது அவரின் மனைவியும் முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலருமான ஹிலாரி கிளிங்டன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

''ஓரினச் சேர்க்கையாளர்களும் அமெரிக்கர்கள்தான். எல்லா தரப்பிலும் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் குடியுரிமை உள்ளது. திருமணம் உள்பட எல்லா விடயங்களிலும் அவர்களுக்கு சம உரிமை உள்ளது. எனவே தான் ஓரின சேர்க்கை திருமணத்துக்கு நான் தனிப்பட்ட முறையில் ஆதரவளிக்கிறேன்- என்று தெரிவித்துள்ளார்.

ஹிலாரி இவ்வாறு கூறியிருப்பது அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## நடு வீதியில் ஒபாமா

டெல் அவிவ், மார்ச் 22

*அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தற்போது இஸ்ரேலுக்கான தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டுள்ளார்.*

*அவர் டெல் அவிவ் நகரில் பாரம்பரியக் காரான லிமோ சன் காரில் பயணங்களை மேற்கொள்கின்றார். ஒருமுறை அவர் பயணம் செய்தபோது லிமோசன் கார் நடுவீதி யில் பழுதடைந்து நின்றுவிட்டது. அதனால் பதற்றம் அடைந்த அதிகாரிகள் உடனடியாக ஒபாமாவுக்கு வேறு கார் ஒன்றை ஏற்பாடு செய்து பயணத்தைத் தொடர்ந்தனர்.*

*பின்னர் கார் பழுதடைந்தமைக்கான காரணத்தை ஆராய்ந்தபோது டீசலில் இயங்கும் அந்தக் காருக்கு பெற்றோலை நிரப்பியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அந்தப் 'சூத்திரதாரி'யைத் தேடி விசாரணைகள் நடைபெற்று வருதாகக் கூறப்படுகிறது. (ற)*

## இந்திய எல்லைப் பிரச்சினையை தீர்ப்பது இலகுவான ஒன்றல்ல

### சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் தெரிவிப்பு

பீஜிங், மார்ச் 22

இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பது எளிதான ஒன்றல்ல என்றபோதிலும் இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதில் சீனா ஆர்வமாக உள்ளது - என்று தெரிவித்துள்ளார் சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்.

இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் தாம் 5 அம்சத் திட்டம் ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது எளிதான ஒன்றல்ல. எல்லைப் பிரச்சினை வேறுபாடுகளைக் கடந்து இரு நாடுகளும் தமது உறவைப் பலப்படுத்த ஒத்துழைக்க முன்வர வேண்டும். அடுத்த வாரம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் நாடுகளின் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதற்கு ஆர்வமாக இருக்கின்றேன்''- என்று குறிப்பிட்டுள்ளார்.

முதற் தடவையாக சீன ஜனாதிபதி ஒருவர் எல்லைப் பிரச்சினை தொடர்பாக வெளிப்படையான கருத்தை வெளியிட்டுள்ளார் என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ற)

## நிலநடுக்கங்களால் தங்கமாகிறது நீர்

மெல்போர்ன், மார்ச் 22

நிலநடுக்கங்கள் காரணமாக பூமிக்கு அடியில் இருக்கும் நீர் தங்கமாக மாற்றமடைகின்றது என்று கூறுகின்றனர் குயின்ஸ்லாந்த் பல்கலைக்கழக புவியியல் ஆய்வாளர்கள். இந்த மாற்றம் நியூஸிலாந்திலேயே அதிகம் நிகழ்கின்றது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ் லாந்த் பல்கலைக் கழகம் நிலநடுக்கங்களால் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வில் ஈடுபட்டுள்ளது. அந்த ஆய்வின்போதே நீர் மூலக்கூறுகள் தங்கமாக மாற்றமடைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

''நிலநடுக்கத்தின்போது பூமிக்கு கீழ் உள்ள நீர் அதிக அழுத்தத்துக்கு உள்ளாகின்றது. இதனால் நீர் மூலக்கூறுகள் வேதியல் மாற்றத்துக்கு உள்ளாகின்றன. கடும் வெப்பம், கடும் அழுத்தம் போன்றவற்றால் பல மாற்றங்களுக்கு உட்படும் நீர் மூலக்கூறுகள் தங்கமாக உருமாறுகின்றன.

நியூஸிலாந்தில் நிலவும் சாதகமான, தட்ப வெட்ப நிலையின் காரணமாக, குறுகிய காலத்திலேயே இந்த மாற்றம் நிகழ்கிறது.'' என்று தெரிவித்துள்ளனர். (ற)



பிரிட்டனிலுள்ள ஏல நிறுவனம் ஒன்று இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸின் மனைவி, மறைந்த டயானாவின் ஆடைகளை கடந்த செவ்வாய்க்கிழமை ஏலமிட்டது. உலகின் புகழ்பெற்ற வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப் பட்ட இந்த ஆடைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக ஏலம் விடப்பட்டன. இந்த ஏலத்தின் மூலம் ஒட்டுமொத்தமாக 8 லட்சத்து 62 ஆயிரத்து 800 பவுண்ஸ்கள் (ஏறத் தாழ 25 கோடி ரூபா) கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரின் கண்டுபிடிப்புகள் இனி சர்வதேச மட்டத்துக்கு

## உயர் கல்வி அமைச்சின் செயலர் கூறுகிறார்



கொழும்பு,மார்ச் 22

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் அவர்களின் திறன்களைக் கண்டறிந்து அவற்றைசர்வதேசமட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

-இவ்வாறு உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் உள்ள மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தமது யோசனைகளை அமைச்சில் சமர்ப்பிக்க முடியும் என்று உயர்கல்வி அமைச்சின் செயலர் சுனில் ஜயந்த நவரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சுக்குக் கிடைக்கப்பெறும் யோசனைகளில் சிறந்த கண்டுபிடிப்பு மற்றும் அவர்களின் திறனைக் கண்டறிந்து அவற்றை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு புதிய கண்டுபிடிப்புகள், யோசனைகள் மற்றும் அனுபவங்கள் முக்கியத்துவம் வாய்ந்தமை என்பதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான யோசனைகள் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டு, பின்னர் போட்டிகள் நடத்தப்பட்டு சிறந்த கண்டுபிடிப்புகள் தெரிவு செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

# போர்க்குற்ற விசாரணையை இலங்கையே மேற்கொள்வதா?

## ஏமாற்று வித்தை என்கிறார் மனோ



கொழும்பு,மார்ச் 22

இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையை இலங்கை அரசைக் கொண்டே விசாரிக்கச் சொன்னால் அது சுத்த ஏமாற்று வித்தை. இதை இந்தியாவும், அமெரிக்காவும் செய்துவிட்டு இலங்கைத் தமிழ் மக்களுக்கு நியாயம் பெற்றுத் தந்துவிட்டோம் எனக் கூற முடியாது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாத் தீர்மானம் இன்னும் இறுதி வடிவம் பெறவில்லை. சில வேளைகளில் கடைசி நேரத் திருத்தங்கள் வரலாம். எப்படி இருந்தாலும் இலங்கையின் மீதான விசாரணையை இலங்கை அரசைக் கொண்டே விசாரிக்கச் சொன்னால் அது சுத்த ஏமாற்று வித்தை. இதை இந்தியாவும், அமெரிக்காவும் செய்துவிட்டு இலங்கைத் தமிழ் மக்களுக்கு நியாயம் பெற்று தந்துவிட்டோம் எனக் கூற முடியாது.

நாங்கள் இந்த அரசிடம் இரண்டு கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

முதலாவது வடமாகாண சபைத் தேர்தலை நடத்துதல், இரண்டாவது ஜனாதிபதிக்கும் ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கும் இடையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டறிக்கையில் சொல்லப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி அதை மேலும் விருத்தி செய்யுங்கள்.

13 ஆவது திருத்தமும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வுகளைத் தரவில்லை.

ஆனால் இவற்றையாவது செய்து அரசு தனது நேர்மையை வெளிப்படுத்த வேண்டும். அதன் பிறகுதான் வட்ட ,சதுர மேசை மாநாடு சர்வகட்சிக் கூட்டம் எல்லாம். இந்த நாட்டில் இன்று தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களைக் குறிவைத்துத் தாக்கு தல்கள் நடத்தும் பொதுபல சேனா, சிங்கள ராவய சங்கம் ஆகிய அமைப்புகளுக்கு தமிழகத்தைக் கண்டிக்க எந்த விதமான தார்மீக உரிமையும் இல்லை- என்றார். (த-5)


**எச். ஈ. டெனியல் எமல்ஷன் பானம்**



**100 கிளாஸ் பழரசம் செய்முறை**

2 1/2 கிலோ சீனியை ஒரு கலன் தண்ணீரில் கொதிக்க வைத்து அத்துடன் 1 1/2 அவுன்ஸ் சிட்ரிக் பவுடரையும் ஒரு அவுன்ஸ் எமல்ஸனையும் சேர்த்து கலக்கவும் மீண்டும் ஒன்றுக்கு ஐந்து விகிதப்படி தண்ணீரில் கலந்து பங்கிடவும்.

எச். ஈ. டெனியல் பழரச பானம் தோடம்பழம், அன்னாசி, திராட்சை, Rose, Mango மற்றும் பலவகைகளில் கிடைக்கும்.

கிடைக்குமிடம்
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே - 021 2222567

Sole Agents,
BASIC FOODS
244, Bankshall St,
Colombo - 11.
Phone :- 2325529

(சி/7058)(6,7)



**அறிவித்தல்**

**மானிப்பாய் கிராம உப அலுவலகம்(ஆனைக்கோட்டை)**

வட்டாரம்: 09
ஆதன இலக்கம்: 176(புதிய பிரிவு)
பிப்பிலி றோட்

வட்டாரம்-9,பிப்பிலி றோட், ஆதன இலக்கம் 176இல் அமைந்துள்ள (உறுதிப்படி: வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோயில் பற்று, நவாலி இறை 'சீனன் தோட்டம்' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 6.48 ஆதனம்) இந்த ஆதனமானது யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு 55ஆம் இலக்கத்தைச் சேர்ந்த எட்வெட் கிறிஸ்ரி செல்வராஜன் என்பவரால் அறுதி உறுதி மூலம் பொன்னன் பொன்னுத்துரைக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் சின்னத்துரை கனகரத்தினம் முகதாவில் நிறைவேறிய 13959 ஆம் இலக்க 1988/09/25 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து இந்த ஆதனம் பொன்னன் பொன்னுத்துரை என்பவரது பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(34703)(5.6.7) தவிசாளர்,வலிதென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.



**உடன் விற்பனைக்கு**

20-XXXX மிற்சுபிசி டெலிக்கா பெற்றோல் வான் விற்பனைக்கு.
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
0712214114
(34702)(10,6,7)



**லொறி விற்பனைக்கு**

47-இலக்கமுடைய லங்கா அசோக் லேடன் லொறி விற்பனைக்கு உண்டு. அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு:0711 864 398,
0711 864 464
த பினான்ஸ் கம்பனி பீ.எல்.சி
இல.249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7158)(10,6,7)



**தவறிவிட்டது**

ஏழாலை மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த சரவணமுத்து பரமேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கடந்த (15.03.2013) அன்று கே.கே.எஸ். வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:0213007983
(34644)(10,6,7)


**முதலாம் ஆண்டு நினைவலைகள்**



தோற்றம்
12.10.1955

மறைவு
01.04.2012

அமரர்
**வேலுப்பிள்ளை மகிழ்ராசன்**
(மகிழ் அண்ணை)

(திதி: தசமி 22.03.2013)

அன்பிற்கு ஊற்றாய்
பாசத்துக்கு உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
வாழ்ந்த எனது அப்பாவினதும்
எனது கணவனதும் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

மனைவி- மகன்
உறவினர்கள்.

வட்டு.கிழக்கு, சித்தன்கேணி. (C/7156)

**இரண்டாம் ஆண்டு நினைவலைகள்**



அமரர்
**சபாபதி குமாரசுவாமி**
[ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்,
வேலணை V.C.]

தோற்றம்
04*07*1940
மறைவு
13*04*2011
திதி: 22.03.2013
(வெள்ளிக்கிழமை)

மாண்புடன் நீங்கள் வாழ்ந்த இவ்வுலகில்
காண்பதெல்லாம் நீங்களாய் இருக்க
ஆண்டு இரண்டு அலைகடந்து போயினும்
மீண்டும் நீங்கள் வருவதெப்போது?
நீங்கள் மண்ணுலகில் மறைந்து விண்ணுலகம்
சென்றாலும் எம் கண்ணில் நிறைந்து
பெரும் காவியமாய் இன்றும் வாழுகின்றீர்!
உங்கள் நீங்காத நினைவுகளை
தாங்காத வலியோடு தூங்காத விழிகளோடு
எம் நெஞ்சில் என்றும் நினைத்திருப்போம்

என்றும் உங்கள் நினைவோடு
குடும்பத்தினர்.

4ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.
(34649)(2.6.7)


**வியப்பூட்டும் விலைக்குறைப்பு**

தினசரி சென்னை சேவை



சென்னை 6,400/= (செல்ல மட்டும்)
சென்னை 16,500/= upwards (சென்று திரும்ப)
(all inclusive) Upwards

Baggage allowance 37 kgs.
Complementary Meals provided

AIR-INDIA express

Groups fares offer only over 15 passengers.

Contact for further information: www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818
or Contact your nearest Travel Agent
(C/7060)





**சர்வதேச நீர் தினம்**

March 22
நீரின்றி அமையாது உலகு

சுத்தமான நீரை பருகுவதனூடாக
நோய் இன்றி....
சுகாதாரமாக....
நீண்டகாலம்...
ஆரோக்கியத்துடன் வாழ
பருகுங்கள்
Sadaharitha WATER





Sadaharitha WATER

யாழில்....
320, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Call:
Vinoth-0772184030
Rajes -0779856699
Office : 021 570 4000

(34646)(2.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி என்ற பெயரில் கொள்ளை போகிறது நிதி

## வடக்கில் ஜனநாயகம் இல்லை என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு,மார்ச்22



நாட்டில் அபிவிருத்தி எனும் பெயரில் நிதி கொள்ளையடிக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல தெற்கிலும் எந்தவிதமான அபிவிருத்திகளும் முன்னெடுக்கப்படுவதில்லை என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிக்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அரசே பெரும் பிரச்சினை ஆக்கியுள்ளது. இந்து மக்கள் மீதான அநியாயங்களுக்கான சாபத்தினாலேயே உலகிலேயே இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற இந்தியாவில் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தச் சம்பவங்களுக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும்

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முறையாக நடைமுறைப் படுத்தியிருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்க மாட்டா.

தேசிய ரீதியில் தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சினை சர்வதேச பிரச்சினையாக மாறிவிட்டது. வடக்கில் ஜனநாயகம் இல்லை. அரசியல்வாதிகள் மக்களுடன் வெளிப்படையாகப் பேசமுடியாது.

வட மாகாண சபைக்கான தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை. இதனை யாருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் -என்றார். (ச)





கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச நீர் கண்காட்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் நீர்வள சபையின் ஊழியர்களின் ஒரு நாள் ஊதியமான 3 மில்லியன் ரூபா சிறுநீரக நோயாளர்களின் சிகிச்சை நிதியத்துக்காக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

## புத்தாண்டை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்

### 8 முதல் 22 ஆம் திகதி வரை

கொழும்பு,மார்ச் 22

புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதி வரையான புத்தாண்டு காலப் பகுதியில் விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்காலிக பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்கான அதிகாரத்தை மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரிகளுக்கு வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் விசேட பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

## விசா இடைநிறுத்தம் சென்னை செல்ல

கொழும்பு,மார்ச்22

சென்னைக்கான விசா வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைகள் காரணமாக சென்னைக்கு விசா வழங்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

யாத்திரைகளை மேற்கொள்வதற்காக சென்னைக்கு விசாக்களை வழங்கி வந்த பௌத்த சாசன அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

தற்போதைய நிலைமைகளில் மாற்றம் ஏற்படும் வரை விசா வழங்கப்பட மாட்டாது என்று பௌத்த சாசன அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை சென்னைக்கான விமான சேவைகளை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் பாதியாகக் குறைத்துள்ளது.

இலங்கையர்கள் தமிழகம் செல்வதற்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலய
முன்னாள் அதிபர்
ஞா.இளையதம்பி
அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து தற்போது ஊவா மாகாணத்தில் பசறைக் கல்வி வலயத்துக்கு உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
கிளி/கண்டாவளை மகாவித்தியாலய சமூகம்.
(35301)(2.6.7)

கரைச்சி
புளியம்பொக்கணை நாகதம்பிரான்
ஆலயம்

தண்டல் ஒழுங்குகள்

ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கலை முன்னிட்டு வழமையான கிராமங்களுக்கு ஆலய இலட்சினை பொறிக்கப்பட்ட உழவு இயந்திரங்களில் எமது தொண்டர்கள் (20.03.2013) புதன் கிழமையிலிருந்து வருகை தருகிறார்கள். அவர்களிடம் அடியார்கள் தமது நேர்த்திப் பொருள்களை வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும். வேறு எவருக்கும் தண்டல்கள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதனையும் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.
(C/7143)
(10.6)

021 5671111
advt@uthayan.com

அறிவுபூர்வமான முதலீட்டுத்
தீர்மானத்திற்கு நீங்கள் தயாரா?





வாருங்கள் முதலீடு பற்றிய அறிவை வளர்ப்போம்
CSE முதலீட்டாளர் தினம் 2013

யாழ்ப்பாணம்
2013 மார்ச் 23
மு.ப 10.00 முதல் பி.ப 3.00
வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு www.cse.lk யைப் பாருங்கள் அல்லது
அழையுங்கள் 021-2221455/0777-822014

CSE
COLOMBO STOCK EXCHANGE
(C/7143) (6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தாக்கல் செய்துள்ள தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தாக்கல்செய்துள்ள இலங்கைக்கு எதிரான நகல் தீர்மானத்தின் திருத்தப்பட்ட வடிவமானது, ஆரம்பத்தில் அது இருந்த விதத்தில் இறுக்கமானதாக இல்லாது போனாலும் அதன் மிகமுக்கிய அம்சங்கள் அப்படியே தான் இருக்கின்றன. ஆணையாளரின் அறிக்கை, உண்மையைக் கண்டறியும் பொறி அமைப்பு, நம்பகமான சுயாதீன சர்வதேச புலனாய்வு, விசேட நடைமுறைகள், மனித உரிமைகள் ஆணையாளரின் பணிமனை அதிகாரிகளின் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் போன்ற அம்சங்கள் மாற்றப்படாமல் இருக்கின்றன.

தீர்மான வாசகம் 18 ஆம் திகதி சபையில் தாக்கல் செய்யப்பட்டு விட்டதால், வாக்களிப்பு நடக்கும் வகையில் அதில் மாற்றங்கள் ஏதும் செய்யப்படுவதற்கான எதிர்பார்ப்புக்கள் இல்லை. இருந்தாலும் வாக்களிப்பு தினத்தில் நாளை வாய்மூலமான திருத்தங்கள் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

திருத்தப்பட்ட தீர்மான வாசகத்தில் சர்வதேச விசாரணைக்கு கோரிக்கை விடும் பகுதி பிரதான வாசகத்திலிருந்து அறிமுக உரையின் ஒரு பந்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட தீர்மான வாசகத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

நாட்டின் முழு மக்கள் தொகையினரும் சகல மனித உரிமைகளையும், அடிப்படை சுதந்திரங்களையும், முழுமையாக அனுபவிப்பதை உறுதிசெய்வது ஒவ்வொரு அரசினதும் கடமை என்பதை மீளவும் உறுதிப்படுத்துகின்றோம்.

பயங்கரவாதத்தை எதிர்த்து எந்தஒரு நாடும் நடவடிக்கை எடுக்கும் போது சர்வதேச சட்டங்களின் கீழ் அவர்களுக்குரிய கடப்பாடுகளை நிறைவு செய்வதாய் இருக்கவேண்டும். குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச அகதிகள் சட்டம் மற்றும் பொருந்தக்கூடிய மனிதாபிமான சட்டங்கள்.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் 2013 செப்ரெம்பர் மாதத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்த விரும்புவதாக இலங்கை அரசு அறிவித்திருப்பதை வரவேற்கின்றோம்.

உட்கட்டுமானப் பணிகளை மீள் அமைத்தல், கண்ணிவெடிகள் அகற்றல், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானவர்கள் மீள் குடியமர்த்தப்பட்டிருத்தல் போன்ற இலங்கை மேற்கொண்டுள்ள முன்னேற்றப் பணிகளை அங்கீகரிக்கும் அதே சமயம் கணிசமான பணிகள் நீதித்துறை, மீள்நல்லிணக்கம் மற்றும் வாழ்வாதார மேம்பாடு முதலியவற்றில் இன்னும் எஞ்சியிருப்பதை கவனத்தில் கொள்கின்றோம், மற்றும் இந்தப் பணிகளில் உள்ளூர் மக்கள் தொகையின், சிவில் சமூகத்தின் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளும் முழு அளவில் பங்குகொள்ள வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகின்றோம்.

இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் அது கண்டுபிடித்துள்ளவற்றையும் பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு, இலங்கையின் தேசிய நல்லிணக்கத்துக்கு அதனால் பங்களிப்பு செய்ய முடியும் என்பதை கவனத்தில் எடுக்கின்றோம். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான அரசின் அர்ப்பணிப்புகளையும் கவனத்தில் எடுப்பதுடன் தேசிய செயல்திட்டமானது ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புக்களையும் ஆக்கபூர்வமான பரிந்துரைகளையும் செயற்படுத்துவதற்கு போதுமானவையாக இல்லை என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

சட்டவிரோதக் கொலைகள், வலுக்கட்டாயமாக காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள், வடமாகாணம் இராணுவமயமாகியுள்ளமையை இல்லாமல் செய்தல், காணித் தகராறுகளை தீர்ப்பதற்கு பொறிமுறையொன்றை அமைத்தல், தடுப்புக் காவல்கள் தொடர்பான கொள்கையை மீளாய்வு செய்தல், சுதந்திரமான சிவில் அமைப்புகள் முறையாக செயல்பட ஊக்கமளித்தல், மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பாக அரசியல் தீர்வொன்றைக் காணல் சகலருக்கும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தைப் பாதுகாத்து ஊக்கமளித்தல், சட்ட ஆட்சியை சீர்திருத்தல் போன்றவை அடங்கலாக விரிவான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள விடயங்கள் நம்பகமான புலனாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். என்ற ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை மீளவும் வலியுறுத்துகின்றோம்.

## செயற்றிட்டத்தின் குறைபாடு

தேசிய செயற்றிட்டமும் ஆணைக்குழுவின் அறிக்கையும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவை மீறப்பட்டமை தொடர்பாக போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என்பதைக் கவலையுடன் கவனத்தில் எடுக்கின்றோம்.

இலங்கையில் கட்டாயமாகக் காணாமற் போகச் செய்தல், சட்டவிரோதக் கொலைகள், சித்திரவதை செய்தல், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படல், அமைதியாக கூட்டம் கூடுதல் மற்றும் ஒன்று கூடல் மனித உரிமைக்காக பாடுபடுபவர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் ஆகியவர்கள் மீது தீங்கிழைத்தல் மற்றும் அச்சுறுத்தல், நீதித்துறையின் சுயாதீனம், சட்ட ஆட்சி, சமயம் மற்றும் நம்பிக்கைகள் தொடர்பாக பாகுபாடுகாட்டல் போன்றவை அடங்கலாக இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகக் கிடைக்கும் அறிக்கைகள் குறித்து கவலையடைகிறோம்.

அரசியல் அதிகாரப் பகிர்வு உட்பட அரசு பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளவைகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசை வலியுறுத்துகின்றோம். இவை நல்லிணக்கத்துக்கும் சகல மக்கள் தரப்பினரும் மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு மிக முக்கியமானவையாகும்.

மனித உரிமைகள் பணிமனையிலிருந்து தொழில்நுட்பக் குழுவொன்று வருகை தருவதற்கு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு இலங்கை அரசு எடுத்துள்ள முயற்சிகளைப் பாராட்டி ஆணையாளரின் பணிமனையுடனான ஒத்துழைப்பையும் உரையாடல்களையும் அதிகரிக்கும்படி ஊக்கமளிக்க விரும்புகின்றோம்.

தீர்மான விவரம்:-

1. இலங்கையின் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்தும் விடயத்தில் இலங்கை அரசுக்கு ஆலோசனைகளும் தொழில்நுட்ப உதவிகளும் வழங்குவதாக மனித உரிமை ஆணையாளர் அறிக்கையில் தெரிவித்திருப்பதை வரவேற்கின்றோம். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளும் முடிவுகளும் குறிப்பாக உண்மையைக்கண்டறியும் பொறிமுறையொன்றை நிறுவுவது என்பது விரிவாகவும் படிப்படியாகவும் நீதிநிலைபெறுவதற்கு மிகவும் அவசியமான ஒன்று.

2. மனித உரிமை ஆணையாளர் பணிமனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை ஊக்கப்படுத்துகிறோம். மற்றும் பொருத்தமான விதத்தில் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகளை சுயாதீனமாகவும் நம்பகத்தன்மையுடனும் புலனாய்வுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை வற்புறுத்துகின்றோம்.

3. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை வினைத்திறனுடன் செயல்படுத்துமாறு இலங்கை அரசை மீண்டும் வலியுறுத்துகிறோம். மேலும் சகல இலங்கை மக்களுக்குமான நீதி, சமத்துவம், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அதற்குரிய சட்டபூர்வமான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான மேலதிக அவசிய நடவடிக்கைகளை எடுக்கும்படியும் வற்புறுத்துகிறோம்.

4. சிறப்பு ஆணைபெற்ற அதிகாரிகளுடன் ஒத்துழைத்து நிறைவேற்றப்படாமலிருக்கும் அவர்களின் கோரிக்கைகளுக்கு முறையாகப் பதில் அளிக்கும்படியும், அவர்களுக்கு அழைப்புகள் விடுத்து நாட்டுக்குள் வருவதற்கு வசதிகள் வழங்கும்படியும் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.

5. இலங்கை அரசுடன் ஆலோசனைகள் நடத்த அதன் ஆதரவுடன் மேற்குறித்த நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு ஆலோசனைகளும் தொழில்நுட்ப உதவிகளும் வழங்குமாறு ஆணையாளரின் பணிமனையையும் மற்றும் தொடர்புள்ள சிறப்பு ஆணைபெற்ற அதிகாரிகளையும் ஊக்கப்படுத்துகிறோம்.

6. இப்போதைய இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவது தொடர்பாகச் சிறப்பு ஆணை பெற்றவர்களின் தகவல்களுடன் பொருத்தமான வகையில் மனித உரிமைகள் சபையின் 24 ஆவது மாநாட்டில் வாய்மூலமாக மிகப் பிந்திய தகவல்களை வழங்கும்படியும் விவாதமொன்றை நடத்தி விரிவானதொரு அறிக்கையினை அதன்பின் பேரவையின் 25 ஆவது மாநாட்டில் தாக்கல் செய்யுமாறும் மனித உரிமை ஆணையாளரைக் கேட்டுக்கொள்கின்றோம். (ப)

# கேட்ட வரம் கிடைக்கும் நேரமிது...

மத்திய அரசுக்கு ஆபத்து இல்லை என்பது உறுதியாகத் தெரிந்துவிட்டதாலும், இந்த விவகாரத்தில் மத்திய அரசு எந்த நிலைப்பாட்டை மேற்கொண்டாலும் அரசை ஆதரிப்பது என திரிணமூல் காங்கிரஸ் முன்வந்திருப்பதாலும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பெரும்பான்மையை யாரும் கேள்வி கேட்கப் போவதில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதில்லை.

இந்த நிலையிலும், திமுக கோரிய அதே இரண்டு கோரிக்கைகளை நாடாளுமன்றத்தில் தீர்மானமாகக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ள மத்திய அரசு, அனைத்துக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகிறது.

மத்திய அரசு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்போகும் தீர்மானம் எப்படி அமைய வேண்டும் என்பது, மார்ச் 19-ஆம் திகதி இரவு காங்கிரஸ் கட்சியின் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் சோனியா காந்தி பேசிய வார்த்தைகளிலேயே வெளிப்பட்டுள்ளது. அவர் கூறியிருப்பது இதைத்தான்:

இலங்கைத் தமிழர்களின் துயரம் எங்கள் இதயத்தைத் தொடுகிறது. அவர்களது சம உரிமை, சட்டப்படியான பாதுகாப்பு ஆகியவற்றில் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி காலம் முதலாகவே உறுதியாக இருந்துள்ளோம். அவர்களுக்கு உரித்தான அரசியல் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுவது வேதனை அளிக்கிறது. அப்பாவி மக்கள் மீதும் குழந்தைகள் மீதும் நிகழ்த்தப்பட்ட சொல்லொணா அட்டூழியங்கள் பற்றிய செய்திகள், குறிப்பாக 2009-இல் இறுதிப்போரின் போது நிகழ்த்தப்பட்ட கொடுமைகளைக் கண்டு வேதனையடைகிறோம். ஆகவேதான் சுதந்திரமான, நம்பத் தகுந்த விசாரணையைக் கோருகிறோம்'.

இதே வார்த்தைகள் அச்சுப் பிறழாமல் தீர்மானமாக நிறைவேற்றப்படும் என்று நம்பலாம். சோனியா காந்தியின் உரையில் இருக்கும் ''சுதந்திரமான நம்பத் தகுந்த விசாரணை' என்பதை ''சர்வதேச விசாரணை' என்று மாற்றப்படுவதும், அதேபோன்று 2009-இல் நிகழ்த்தப்பட்ட ''சொல்லொணா அட்டூழியங்கள்' என்பது ''இனப்படுகொலை' என்று மாற்றப்படுவதும் இருக்காது. இந்தத் தீர்மானமும் அமெரிக்கா ஐ.நா. மனித உரிமை சபைக்கு அளித்த இறுதித் தீர்மானம்போல நீர்த்துப்போனது என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறு வீரியம் இல்லாத் தீர்மானத்தை நிறைவேற்றக் காரணம், நிச்சயமாக திமுகவை மீண்டும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. காங்கிரஸ் கட்சியும் தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளுடன் கூட்டணி அமைத்து அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தலைச் சந்தித்தாக வேண்டும் என்கிற நெருக்கடிதான் காரணமாக இருக்க முடியும்.

இத்தனை நாள்களாக இந்திய அரசுக்கு கோரிக்கை விடுத்ததைக் காட்டிலும் நேரடியாக அமெரிக்காவுக்கே கோரிக்கை வைத்திருக்கலாம். ஒபாமாவைச் சந்தித்துப் பேசியிருக்கலாம். ஐ.நா. மனித உரிமை சபையின் உறுப்பு நாடுகளுக்குச் சென்று, அந்நாட்டுத் தலைவர்களுடன், இலங்கையின் மனித உரிமை மீறல் குறித்துப் பேசி ஆதரவு திரட்டியிருக்கலாம். விரும்பும் திருத்தம் செய்யக் கோரியிருக்கலாம்.

ஆனால் அத்தகைய பெரு முயற்சிகளை, வாய்ப்பிருந்தும் செய்யவில்லை இங்குள்ள அரசியல் கட்சிகள். இதில் திமுகவை மட்டும் சொல்லிக் குற்றமில்லை. யாரும் செய்யவில்லை.

மார்ச் 21-ஆம் தேதி அமெரிக்கத் தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றவுடன், அதற்கு இந்தியா ஆதரவாக வாக்களித்ததுடன், இப்போதைய மாணவர் போராட்டங்கள் அடங்கிப்போகக் கூடும். ஆனால், ஐ.நா. மன்றத்தில் நிறைவேறும் தீர்மானங்களுக்கு அப்பாற்பட்டு இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் செய்ய வேண்டிய கடப்பாடுகள் உள்ளன.

அதனை உறுதிப்படுத்துவதில் தான் தமிழக அரசியல் கட்சிகள் தற்போது கொண்டுவர இருக்கும் நாடாளுமன்றத் தீர்மானத்தின் போது முனைப்புக் காட்ட வேண்டும்.

இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கும் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது, இலங்கைத் தமிழர்களுக்கான மீள் குடியமர்வுப் பணிகளை இந்திய அரசின் மேற்பார்வையில் நடத்துவது போன்ற ஒப்பந்தங்களை ஏற்படுத்துவது இன்றைய அவசியத் தேவை.

இலங்கையில் கடைசிப் போருக்குப் பின்னும் மிச்சமாக

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீரின்றி அமையாது உலகு....!

பீ.ஏ.அந்தோனிமார்க்

தேசிய மட்டத்தில் உலகம் முழுவதும் தண்ணீரின் சேமிப்பு அளவு நாளாந்தம் குறைந்து செல்வதினால் 2018 ஆம் ஆண்டளவில் தண்ணீர் அடியோடு வற்றிப் போகலாம். அதேநேரம் உலக சனத்தொகையில் அரைப் பகுதி குடி மக்கள் வாழும் நாடுகளான இந்தியாவும், சீனாவும் குடி தண்ணீர் இன்மையினால் வெகுவாக பாதிப்படையவும் கூடும். அப்படி இல்லாவிட்டால் உலக நாடுகளுக்கிடையில் நீரினால் ஓர் உலகப் போர் ஏற்படவும் வாய்ப்புண்டு. பயங்கரவாதிகளையும் கண்ணி வெடிகளையும், விட நீர் நிலையங்களில் நீர் குறைந்து போவது சர்வதேச பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலாக அமையலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. உலகத்தில் நீரை மையமாக வைத்து மனிதனால் ஏற்படுத்தப்பட்ட போராட்டங்கள் பல :-

1. இந்தியா, பாகிஸ்தான் இந்தி நதி விவகாரம்

2. இந்திய பாங்களாதேஷ் கங்கை நீர் விநியோகம்

3.ஜோர்தான் ஆற்று நீருக்கான இஸ்ரவேல் ஜோர்தான் போராட்டம்

4. நைல் நதி நீருக்கான எகிப்து சூடான் போர்

5. இந்திய மத்திய அரசு தமிழ்நாடு மாநில அரசு இடையேயான காவேரி ஆற்று நீர் பிரச்சினை.

இப்படியான ஓர் பயங்கரமான முன் எச்சரிக்கையானது. நாட்டை ஆளுவோரையும் குடி மக்களையும் அச்சமடையச் செய்ததாகத் தெரியவில்லை. தண்ணீருக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு கோடிக்கணக்கான கலன் நீர் வீணாவதையும் குறைந்துள்ளது. பொதுமக்கள் நீரைச் சேகரிப்பதிலும், பாவித்த நீரைச் சுத்திகரித்து திரும்ப பாவிப்பதிலும் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். துரதிஷ்டவசமாக பல நாடுகளில் தண்ணீரின் தரம் குறைந்து பழுதடைந்து வருவது கவலைக்குரிய விடயமாகும். 90 வீதத்துக்கு மேலான ஆபத்தை விளைவிக்கும் வெள்ளம், ஆழிப்பேரலை போன்ற விபரீத சம்பவங்கள் நீரின் மூலமாகத் தான் நடைபெறுகின்றன.

அத்துடன் இந்தச் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. தூரநோக்கற்ற காணிப்பாவனை காடு அழிப்புகள், மிருகங்களின் மேலதிகமான மேய்ச்சல்கள், நிலைத்து நிற்கமுடியாத புதிய நீர்ப்பாசன திட்டங்கள், மண் அகழ்வுகள் போன்றனவும் இவற்றுக்கு மூலகாரணமாக அமைந்துள்ளன. நீரின்றி உலகத்தில் எந்த ஜீவனும் வாழ முடியாது. இன்றிலிருந்து 30 வருடங்களுக்குள் உலக உணவுத் தேவை தற்போது இருப்பதை விட 55 வீதம் மேலதிகமான நீர்ப்பாசன வசதிகளும் தேவைப்படும்.

உலக நீர் வளத்தில் 97 வீதம் பயன்படுத்த முடியாத உவர் நீராகும். மிகுதி 3 வீதத்தில் 0.003 வீதமே மனிதர்களின் பாவனைக்கு கிடைக்கின்றது. இதைத் தான் 700 கோடிக்கு மேற்பட்ட மக்களும் உயிரினங்களும் பயன்படுத்துகின்றன. இன்னும் 90 ஆண்டுகளில் கடல் நீரின் மட்டம் அதாவது 2100 ஆம் ஆண்டில் இரண்டு மீற்றர் உயரும் என பீஜிங்கில் நடைபெற்ற கால நிலை மாற்றம் தொடர்பான கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. அந்த நிலையில் பல நாடுகள் கடலுக்குள் சென்றுவிடும். குடிப்பதற்கு நல்ல தண்ணீரும் கிடைக்காது. நதிகளையும், நீர் வீழ்ச்சிகளையும் கொண்ட எமது நாட்டில் பெரும் அளவான நீர் பாவனைக்கு உதவாது வீணாகக் கடலைச் சென்றடைகிறது. இலங்கையில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு உபயோகமாகும் நீரின் அளவு 13 கன மீற்றர்களாகும். எமது நாடு ஒரு விவசாய நாடு. இதன் முக்கிய தேவைகளில் ஒன்று தான் நீர் என்பது குறிப்பிடத்தக்கது. உலகில் வருடாந்தம் 108 ஆயிரம் கன கிலோ மீற்றர் மழை பெய்கிறது . இதில் 60 வீதம் அதாவது 61 ஆயிரம் கன மீற்றர் ஆவியாகி மீளவும் நீர்மட்டத்துடன் சேர்கின்றது. எஞ்சிய 47 ஆயிரம் கன மீற்றர் நீர் கடலை அடைகிறது. அதாவது ஏறத்தாழ ஒரு இலட்சம் கன மீற்றர் நீர் மட்டும் ஆறுகள், ஏரிகள் போன்றவற்றின் மூலம் பயன் படுத்தக் கூடிய நீராக உள்ளது. இந்த நூற்றாண்டில் நீருக்கான தேவை தற்போது இருப்பதைவிட 6 மடங்கு மேலதிகமாக தேவைப் படுகின்றது. இது இரட்டிப்பான சனத்தொகை வளர்ச்சியை ஈடு செய்வதற்காகும். அதிகூடிய நீர் விவசாயத்துக்கும் அதற்கடுத்ததாக கைத்தொழிலுக்கும் மிகுதி குடிமக்களின் வீட்டுத் தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது. வீடுகள், தொழிற்சாலைகள் இவற்றில் பயன்படுத்தப்படும் நீரை மீண்டும் சுத்திகரித்து திரும்பவும் பயன்படுத்த முடியும். எதிர் வரும் 10 வருடங்களுக்குள் நீர்த் தட்டுப்பாடு அதிகரிக்கும். அது எப்படியென்றால் புவி வெப்பமடைவதினால் ஆற்று நீர் வற்றிப் போகும். கிணறுகள் வற்றிப் போகும். உவர்த்தன்மை அதிகரிக்கும், மீன் வளங்கள், கடல் தாவரங்களும் அழிந்து போகும். கடல் நீர் அதிகரிப்பினால் வெள்ளம் ஏற்படும். இதனால் பல நாடுகள் பயங்கரத்துக்குள்ளாகும். உலக சனத்தொகையில் ஐந்தில் இரண்டு பகுதி மக்கள் கடல் வெள்ளத்தால் பாதிப்படையக்கூடிய பகுதிகளில் வாழ்கிறார்கள். இப்படியாக பாதிப்படையக் கூடிய நாடுகளில் இந்தியா, சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் அடங்கும். பரந்த அளவில் விவசாயக் காணிகளில் ஏற்படும் நஷ்டம் உணவுப் பற்றாக் குறையை ஏற்படுத்தும். மீன்பிடித் தொழில் பாதிப்படையும். நாட்டுக்கு நாடு நீர் முகாமைத்துவ வளர்ச்சி முறையில் வித்தியாசம் உண்டு. அவை பின்வருமாறு:-

1.நீர் வளங்களின் தேவையை அளவிடும் பிரமாணம்

2.நீருக்குக் கொடுக்கும் விலையை மதிப்பீடு செய்யும் முறைமை

3. நீர்த் தேவையையும் அதற்கேற்ப வளமான சுத்த நீரின் கன அளவும்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் முன்னேற்றம் அடைய நீர் முகாமைத்துவத்துக்கும், அபிவிருத்திக்கும் தேவையான புதிய முதலீடுகள் தேவை. அவை சுற்றாடலையும் சமூகத்தையும் பாதுகாக்கத் தேவைப்படும் நீரைப் பெறுவதற்குரிய சம நிலையை நீண்ட காலத்துக்கு பாதுகாக்கக் கூடிய ஸ்திரத் தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும் என்பது உலக வங்கியின் வேண்டுகோளாகும். கிராம அபிவிருத்திக்கு தேவையான நீர் விநியோக செயற்திட்டத்தை ஆரம்பித்தால் மட்டும் போதாது. ஆனாலும் அதிலும் முக்கியம், அதற்கு தேவையான நீர் ஆதாரங்களை இனங்கண்டு அதைச் சரியான முறையில் முகாமை செய்து அதைப் பயன்படுத்துவதற்கு வழி வகுத்தல் ஆகும். தண்ணீரை உற்பத்தி செய்து அதை விநியோகிக்கும் முதலீடுகள் நல்ல பலன் தரக் கூடிய முறையில் திட்டமிடல் அடிப்படையில் பகிரப்படல் வேண்டும். அத்துடன் நீர் விநியோகத்துக்கு முதலீடு செய்வதற்கு ஒரு நிரந்தரமான தள அமைப்புத் தேவை வறுமையை ஒழிப்பதில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பணக் கஷ்ரங்களை அனுபவிக்கின்றன.இதனால் சிறந்த நீர் வளங்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. ஆனால் சிறந்த நீர் வளங்கள் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியைக் கூட்டி மக்கள் மத்தியில் ஒரு மாற்றத்தை உண்டுபண்ண வாய்ப்பளிக்கும். அது எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். உண்மையான வளர்ச்சிக்கு இது தான் முக்கிய சவாலாக அமைகின்றது. சம்பந்தப்பட்ட அனைவரும் புதிய புதிய திட்டங்களையும் சவால்களையும் ஏற்கவேண்டுமெனின், சரியான நீர் வழங்கும் கட்டமைப்பும் சிறந்த முகாமைத்துவமும் நீர் விநியோகத்தினாலும் ஏற்படும் தடைகளை அகற்றி பொருளாதார, சமூக முன்னேற்றங்கள் மேலும் விருத்தியடைய ஒரு தூண்டு சக்தியாக அமையும். விவசாயம் சம்பந்தப்பட்ட வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் நான்கு விதமான கட்டுமான அமைப்புக்களும், முகாமைத்துவ முறைகளும் உண்டு. வளர்ந்து வரும் நாடுகளில் இவை வறுமையை குறைக்க உதவிசெய்ய முடியுமென நம்பப்படுகின்றது.


1. நீர் பாயும் ஆறுகளின் பரந்த அளவிலான சட்ட நுணுக்கங்களும் ஏழைகள் உட்பட்ட அனைவருக்கும் நன்மை பயக்கும்.

2.வாடிக்கையாளர்கள் தண்ணீரைப் பயன்படுத்தும் முறைகளை இலகுபடுத்தி நன்மையடையச் செய்தல்

3. குடி நீர் விநியோகம் மற்றும் நீர்ப்பாசன சேவைகள் இல்லாத ஏழைகளுக்கு மேற்படி திட்டங்கள் ஆரோக்கியமான சுகாதார வசதிகளையும், நீர் விநியோகத்தையும் உறுதிப்படுத்தும். வறுமையை அகற்றும் நோக்கமாக, தண்ணீர் குன்றிய பிரதேசங்களுக்கு தொடர்ந்து தண்ணீர் நிரப்பும் முறையை ஏற்படுத்தல்

மேலும் எதிர்கால நீர்த் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு புதிய நீர் வளங்களைக் கண்டுபிடித்து அவற்றை விருத்தி செய்தல் வேண்டும். அதற்கு அடுத்தாக ஏற்கனவே காணப்படும் நீர் வளங்களை பேணிக்காக்க வேண்டும். விவசாயத்தைப் பொறுத்த வரையில் பாரம்பரிய நீர்ப்பாசன முறைகள் மூலம் 50 விதமான தண்ணீர் வீணாகிறது. இதனால் சொட்டு நீர்ப்பாசன முறைகளைப் பயன்டுத்தலாம். நெல்லை மட்டும் பயிர் செய்யாது மற்றைய போகங்களில் தானியப் பயிர்களைச் செய்கை பண்ணலாம். இதனால் மிகுதியான நீரை மிச்சப்படுத்தலாம் மேலதிகமாக வழிந்தோடும் நீரையும், கடலுக்கு சென்று வீணாகும் நீரையும் அணைக்கட்டுக்கள் மூலம் சேமிக்கலாம். உலக சனத்தொகையில் சுமார் 120 கோடி மக்களால் சுத்தமான தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதுடன் அமெரிக்க சஞ்சிகையொன்றின் ஆய்வின் படி, உலக சனத் தொகையில் 40 வீதமானோர் தூய்மையான நீரின்றி சிரமப்படுவார்கள் எனத் தெரிய வருகிறது. மேலும் மாசடைந்த நீர் விநியோகத்தினால் மலேரியா வயிற்றோட்டம் போன்ற நோய்கள் அதிகரிக்கின்றன. கோடிக்கணக்கான மக்கள் இந்த நோய்களால் இறந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் அநேகமானோர் 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் ஆவார்கள். சுத்தமான நீர் விநியோகத்தினால் இவர்களைக் காப்பற்ற முடியும். உலகெங்கும் இருவகையான தண்ணீர் உள்ளது. கடல் சமுத்திரம் என்பவற்றில் உப்பு நீராகவும், ஆறு, குளம் என்பவற்றில் நன்னீராகவும் காணப்படுகின்றது. நன்னீரையும் இரண்டு வகையாக பிரிக்கின்றனர். ஒன்று கடின நீர், மற்றது மிருதுவான நீர் என்பதாகும் மக்னிசியம், கல்சியம் (காபனைட்) சல்பைட் உள்ள நீரைப் பரிகினாலும் பலவிதமான நோய்களினால் பாதிப்படைய வேண்டிவரும் ஆகவே நீரைச் சுத்தமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துவது அனைவருக்கும் நன்மை பயக்கும். ★

**இன்று (22.03.2013) சர்வதேச நீர் தினம். அதனையொட்டி இந்தக் ஆக்கம் பிரசுரமாகிறது.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்:** அதிகாரப்பூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**மிதுனம்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். அடுத்தவர்களின் விவகாரத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியத்தைத் தவிருங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கடகம்:** உறவினர்களுடன் பகைமை வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசாதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**சிங்கம்:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**கன்னி:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

## நாளை

பங்குனி-10 சனிக்கிழமை 23.03.2013
திதி: ஏகாதசி பி.ப. 04.13 வரை
நட்சத்திரம்: பூசம் காலை 08.00 வரை
சுபநேரம்: 03.16- 04.46 வரை
இராகுகாலம்: 09.16- 10.46 வரை

**துலாம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**விருச்சிகம்:** பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். உதவி கேட்டு உறவினர், நண்பர்கள் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். அடுத்தவர்களைக் குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப்பாருங்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**தனுசு:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மனநிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

**மகரம்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள்.

**கும்பம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவர்கள்.

**மீனம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | | | | | | | 6 |
| | | 1 | 7 | | | 5 | 3 | |
| | | 5 | 6 | 8 | | 2 | | |
| | 5 | 3 | | | | | | 9 |
| 7 | 8 | | | | | | 2 | 3 |
| 2 | | | | | | 4 | 7 | |
| | | 9 | | 4 | 1 | 3 | | |
| | 1 | 2 | | | 7 | 8 | | |
| 4 | | | | | | | 1 | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 1 | 5 | 6 | 7 | 3 | 9 | 8 |
| 6 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 | 2 | 7 |
| 3 | 7 | 8 | 2 | 9 | 1 | 5 | 4 | 6 |
| 9 | 8 | 2 | 3 | 5 | 6 | 4 | 7 | 1 |
| 4 | 5 | 6 | 7 | 1 | 9 | 2 | 8 | 3 |
| 1 | 3 | 7 | 8 | 2 | 4 | 9 | 6 | 5 |
| 5 | 6 | 3 | 9 | 7 | 2 | 8 | 1 | 4 |
| 8 | 1 | 9 | 6 | 4 | 5 | 7 | 3 | 2 |
| 7 | 2 | 4 | 1 | 3 | 8 | 6 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில்
01★08★1938
விண்ணில்
23★02★2013

அமரர்
**சீனிவாசகம் சிவசுந்தரம்** (சுந்தரம் சாமியார்)

25-03-2013 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


இல.58, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(34637) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
07 * 02 * 1944



உதிர்வு
02 * 04 * 2012

திதி: பூர்வபக்க தசமி

**காசிநாதர் கனகசிங்கம்**

மறக்குமா நெஞ்சம்...
ஆண்டொன்று கடந்ததுவோ ஆறவில்லை
நம்துயரம் நேற்றுப்போல் நிழலாடுகிறதே
உம் பசுமை மிகுநினைவலைகள் தங்கள் இன்முகமும்
இனிய வார்த்தைகளும், புன்சிரிப்பும், கலகலப்பும்
இன்னும் நீறணி நெற்றியும் எப்போ எம் முன் தோன்றும்?
... மறக்குமா நெஞ்சம்.

ஈரவிழிகளுடன் தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

சிவன்கோவிலடி,
புத்தூர்.

மருமக்கள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(34616) (6-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'நாங்கள் கொல்லவில்லை பாலச்சந்திரனை'

## ரி.வியில் ஒளிபரப்பான காட்சி சோடிக்கப்பட்டது

## வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் பொன்சேகா

கொழும்பு,மார்ச் 22

**விடுதலை புலிகளின் தலை**வர் பிரபாகரனின் இளைய மகன், பாலச்சந்திரனை நாங்கள் கொல்லவில்லை என்று இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிட்டனைச் சேர்ந்த, **தனியார் தொலைக்காட்சியில், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின், 12 வயது மகன் பாலச்சந்திரன், துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்ட காட்சி ஒளி பரப்பானது. இந்தக் காட்சி சோடிக்கப்பட்ட ஒன்று.**


பாலசந்திரன் பக்கத்தில் நிற்கும் வீரர் அணிந்திருக்கும் சீருடையை படையினருக்கு நாங்கள் வழங்கவில்லை.

இந்தச் சீருடையை இந்திய இராணுவத்தினர்தான் அணிவார்கள். இதுபோன்ற சீருடைகளை கள்ளத்தனமாக பயன்படுத்தி விடுதலைப் புலிகள் இறுதிக் கட்டப் போரில் ஈடுபட்டனர்.

இலங்கை இராணுவம் பயன்படுத்திய பதுங்கு இடங்கள் மிகவும் சிறியவை. பாலச்சந்திரன் அமர்ந்திருக்கும் இடம், சுத்தமாகவும், பெரியதாகவும் உள்ளது. அது போன்ற பதுங்கு அரண்கள் இலங்கை இராணுவத்தினரால் பயன்படுத்தப்படவில்லை.

எனவே இந்தப் படம் போலியானது. இலங்கைப் போர் தொடர்பாக எந்த விதமான சர்வதேச விசாரணையையும் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். முன்னாள் இராணுவத் தளபதி என்ற ரீதியில் எனக்கும் இந்த பொறுப்பு உள்ளது. இலங்கை அரசு, போர்க் குற்றம் தொடர்பான விசாரணையை சந்திக்க தயங்குகிறது. இறுதிக் கட்ட போரின் போது என்ன நடந்தது என்பதை அறிய மக்கள் விரும்புகின்றனர்.

**இந்தச் சந்தேகம் களையப்பட வேண்டும். போர்க் குற்றம் தொடர்பான விசாரணையை சந்திக்க மறுத்தால், இலங்கை அரசு எதிர்காலத்தில் அதிக அளவில் சர்வதேசக் குற்றச்சாட்டுக்களை சந்திக்க வேண்டியிருக்கும்.**-என்றார். (ச)



## 400 'அம்புலன்ஸ்' வாகனங்கள் இறக்குமதி

வைத்தியசாலைகளின் தேவைகளுக்காக 400 அம்புலன்ஸ் வாகனங்களை இந்த வருடத்தில் இறக்குமதி செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. தற்போது ஜப்பானின் உதவியுடன் 250 அம்புலன்ஸ் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதே வேளை இலங்கை அரசின் நிதியின் மூலமாக 150 அம்புலன்ஸ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளில் 380 அம்புலன்ஸ் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

எனினும் இந்த வருட இறுதிக்குள் நாட்டிற்கு தேவையான அம்புலன்ஸ் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வைத்தியசாலைகளின் அம்புலன்ஸ் தேவை நிறைவு செய்து வைக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் மைதிரிபால சிறிசேன தெரிவித்தார். (ச)

# 'பான் பராக்' உட்கொள்ளாதீர்! வாய்ப்புற்று நோய் வரும்

## தடை செய்ய விரைவில் சட்டம்

கொழும்பு,மார்ச் 22

பாபூல், பீடா, பான்பராக் போன்ற பாக்கு வகைகளை உட்கொண்டால் வாய்ப் புற்று நோய் ஏற்படும். இவ்வாறு கடல்தொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



சர்வதேச வாய் சுகாதார தினம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு களுத்துறை தேசிய சுகாதார கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு விற்பனை செய்யப்படுகின்ற இந்தப் பாக்கு வகைகள் வாய்ப்புப் புற்றுநோய் பரவுவதற்கு காரணமாக அமைந்துள்ளன என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

வாய்ப்புற்று நோய்க் காரணிகளில் ஒன்றான இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மாவா என்ற பெயரிலான ஒருவகை போதை இரசாயனக் கலவை அடங்கிய பாக்கு கொழும்பிலுள்ள பாடசாலைகளுக்கு அருகில் விற்பனை செய்யப் படுகிறது என்று அவர் தெரிவித்தார்.

பாக்கு வகைகளை இறக்குமதி செய்தல், விநியோகித்தல், உட்கொள்ளல் என்பவற்றை தடைசெய்ய பிரேரணை ஒன்று அமைச்சரவை அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# அலங்கார மீன்களால் சூழலுக்குப் பாதிப்பு

## நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை தகவல்

கொழும்பு,மார்ச் 22

அலங்கார மீன்களைப் பிரதான நீர்த்தேக்கங்களுக்குள் விடுவிப்பதால் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்று தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. பொல்கொல்ல, போவத்தென்ன உள்ளிட்ட நீர்த்தேக்கங்களில் அலங்கார மீன்கள் காணப்படுகின்றன என்று அதிகார சபையின் தலைவர் ஜயந்த சந்திரசோம கூறினார். களுத்துறை மற்றும் பாணந்துறை ஆகிய பகுதிகளில் இருந்தும் அலங்கார மீன் வகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். இவ்வாறான அலங்கார மீன்களை நீர்த்தேக்கங்களில் விடுவிப்பதைத் தவிர்க்குமாறு தேசிய நீரியல்வள அதிகார சபை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அலங்கார மீன் வகைகளை தமது அதிகார சபையிடம் ஒப்படைக்குமாறு ஜயந்த சந்திரசோம கேட்டுள்ளார். (ச)

# மாலைதீவு பிரஜைகளை நாடு கடத்தமாட்டோம்

## சம்பிக்கவின் கோரிக்கையை நிராகரித்தது அரசு

கொழும்பு,மார்ச் 22

இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள மாலை தீவைச் சேர்ந்தவர்களை நாடு கடத்த வேண்டும் என்ற ஜாதிக ஹெல உறுமயவின் கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளது.

இந்தக் கோரிக்கையை கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் பாடலி சம்பிக்க ரணவக்க விடுத்திருந்தார்.

எனினும் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க நிராகரித்துள்ளார்.

இந்தக் கருத்து அமைச்சருடைய தனிப்பட்ட கருத்து. இது அரசின் நிலைப்பாடு அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே இலங்கையில் இருந்து மாலைதீவைச் சேர்ந்தவர்கள் நாடுகடத்தப்பட மாட்டார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். ( ச)


**விற்பனைக்கு**

LB XXXX ISUZU 350 ரக கன்டர் வாகனம் உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 151 0348, 077 403 9938
(34633)(6.7.11)

**கடை வாடகைக்கு**

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக முதலாம் மாடி, இரண்டாம் மாடி 60 அடி நீளம்,16 அடி அகலம் (இரண்டு தட்டு) கடை வாடகைக்குண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 021 222 3461, 077 604 2264
(34634)(6.7.11)

**காணி விற்பனைக்கு**

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள 4¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 155 4465
(35424)(6.7.11)

**வாடகைக்கு உண்டு**

இல. 7, கண்டி வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் அமைந்துள்ள கட்டடம் வாடகைக்கு விடப்படும் (2200 Sq.Ft.)
வங்கி, அலுவலக உபயோகத்துக்கு உகந்தது.
தொடர்பு: 077 613 9559
(35431)(6.45)

**காணி விற்பனைக்கு**

நல்லூர் சுற்றாடலில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 075 510 9327
(34574)(5.6.7)

**உடனடி வேலைவாய்ப்பு**
**(20 பேர் மட்டும் தேவை)**

சர்வதேச ரீதியில் இயங்கி வரும் One world in Innovage நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை. மாதாந்தம் Fixed Income package ஆக 12, 000/=-20,000/= பெற முடியும். அனுபவம் அவசியமற்றது.
O/L, A/L படித்தவர்கள், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களிலிருந்து தேவைப்படுகின்றனர்.
குறிப்பு: தங்குமிட வசதிகள் உண்டு.
வயதெல்லை 18- 28
தொ.பே : 077 556 6224 (யாழ்ப்பாணம்),
077 190 6728 (கிளிநொச்சி),
077 621 9536, 021 720 0867 (முல்லைத்தீவு)
(34636)(6.7.11)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் **வைரமுத்து தளையசிங்கம்**
(முன்னாள் இ. போ.ச. சாரதி)
திதி: பூர்வபக்க தசமி 22.03.2013)

மண்ணில் 25.12.1940

விண்ணில் 01.04.2012

ஆண்டு ஒன்று சென்றதையா! எம்மை விட்டு நீர் பிரிந்து
ஆயிரம் உறவுகள் எம்மருகில் இருந்தாலும்
அவை அனைத்தும் உங்கள் அன்புக்கு ஈடாகுமோ?
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

24/2, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.
(34632) (45-6-7)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



முத்தாக 20.07.1997

வித்தாக 15.03.2011

அமரர் **சண்முகநாதன் தபோவரன்**
திதி: வளர்பிறை தசமி
(22.03.2013)

எங்கள் வீட்டில் ஒளி வீசிய நிலாவொன்று
தேய்ந்து போன தெங்கே...?
ஈராண்டுகள் சென்றாலும் -உமது
அசைவுகளை எப்படி மறப்போம்- தபோ!
உமது பசுமையான இனிமையான
நினைவுகள் எம் மூச்சிருக்கும் வரை
மறக்கவே முடியாது! என்றும் உம் நினைவுகளுடன்

கட்டுக்காணி லேன்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
(27899)(6.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில் நடமாடிய முதியவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி,மார்ச் 22

சாவகச்சேரி நகரப்பகுதியில் அநாதரவாக நடமாடிய, மனநோயால் பாதிக்கப்பட்டவர் என சந்தேகிக்கப்படும் முதியவர் ஒருவரை சாவகச்சேரி நகரசபைத் தலைவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளார்.

ஊரெழு மேற்குப்பகுதியைச் சேர்ந்த யேக்கப் யோசெப் என இவர் தனது பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.

உறவினர்கள் அவரை பொறுப்பேற்று அழைத்துச் செல்லுமாறு வைத்திய சாலை நிர்வாகம் கேட்டுள்ளது. (ஓ-9-400)

## யோகர் சுவாமிகளது குருபூசை தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யோகர் சுவாமிகளது 49 ஆவது குருபூசை தினம் நாளை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு யாழ். சிவத்தொண்டன் நிலையத்தின் புராண மண்டபத்தில் சுவாமிகளது திருமேனிக் கும் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் திருவடிக்கும், விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன. தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ந)



சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த நாளை முன்னிட்டு, பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தில் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் முகாமையாளர் சி.கதிர்காமநாதன் மற்றும் செல்வி யாழினி சௌந்தரராஜன் ஆகியோர் சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தாவினால் கௌரவிக்கப்பட்டனர். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி. சிவசிதம்பரமும் படத்தில் காணப்படுகின்றார். (ந)

## உலக உணவு நிவாரண பொருள்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

உலக உணவுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டுவரும் நிவாரணப் பொருள்களின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் 21 வகையான பொருள்களே விநியோகிக்கப்பட்டன. இது தற்போது 23 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களே அதிகரித்த பொருள்களில் உள்ளடங்குகின்றன. உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் பாவனையை ஊக்குவிக்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்துக்கான நிவாரண விநியோகத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது 23 வகையான பொருள்கள் விநியோகிக்கப்படும். இதன் மாதிரிகளைப் பயனாளிகள் பார்வையிட்டு அதன் தரங்களுக்கு ஏற்ப பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த விநியோகத்தின் போது கிளைகள் தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் கிடைத்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## புண்ணியக் கிராம விழா அரியாலையில்

யாழ்ப்பாணம்,மார்ச் 22

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், அரியாலை கிழக்கு ஸ்ரீ துரவடிப் பிள்ளையார் ஆலயமும் இணைந்து நடத்தும் புண்ணியக் கிராம விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீதுரவடிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து சமய அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி. மா. அனந்தலெட்சுமி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் கலந்து கொள்வார்.(ம)

## ஒளியிலிருந்து இருளுக்கா....?

"உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்தே செய்கின்றார்கள்". [யோவா 3:21]

தீயனவற்றை செய்கிறவன் ஒளியை வெறுக்கின்றான். ஒளியை பகைக்கின்றான், ஒளியிலிருந்து ஒதுங்குகின்றான். ஆதியிலே கடவுள் இருளை நீக்கி ஒளியை உண்டாக்கினார். ஏகேன் தோட்டத்தில் சகலதையும் அனுபவித்து தேவனுடன் நல்லுறவை வைத்திருந்த ஆதாமும், ஏவாளும் பாவம் செய்த பின் ஒளியிலிருந்து தங்களை மறைத்துக் கொண்டார்கள். ஏன்? அவர்களது நிலையைக் கண்டு அவர்களே வெட்கப்பட்டார்கள். ஆகான் பாபிலோனிய சால்வையையும், வெள்ளியையும், பொன்னையும் அபகரித்து மண்ணுக்குள் புதைத்து வைத்தான். அபகரித்த பொருள்களை வெளியரங்கமாய் வைத்து கூடாரத்தை அலங்கரிக்காமல் தான் செய்வது தவறு என்று அறிந்திருந்தும் அதனைப் புதைத்து ஒளித்து வைத்தான். இதன் விளைவு.....? புதைத்து வைக்கப்பட்ட பொருள்கள் வெளியே எடுக்கப்பட்டு அழிக்கப்பட்ட பின்புதான் இஸ்ரவேல் வெற்றிகண்டது. [இயேவா 7:1-26]




பாவத்தை மூடி மறைத்து ஒளியில் நடவாமல் இருளில் நடந்து கொண்டிருந்தால் நமது தனிப்பட்ட வாழ்க்கையில் அது அழிவைக் கொண்டு வரும். ஏனெனில் தன் பாவத்தை மூடி மறைக்கின்றவன் வாழ்வடையமாட்டான்.

கடவுள் மெய்யான ஒளியாயிருக்கின்றார். அன்று ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாளைத் தேடிய இறைவன் இன்று எங்களையும் தேடி வருகின்றார். பாவ இருளில் வாழ்ந்து கொண்டிருந்தால் மெய்யான ஒளியை ஏற்றுக்கொண்டு வெளிச்சத்தின் பாதையில் நடந்து செல்ல இன்றே தீர்மானம் எடுப்போம். இயேசுவை ஏற்றுக்கொண்ட பின்பும் உலக இச்சை, மாம்சம், சாத்தானின் வஞ்சனை போன்றவற்றினால் கவரப்பட்டு கடவுளிடமிருந்து ஓடி மறைகின்றோமா? கடவுளுடைய மெய்யான ஒளி எம் இதயத்தில் ஊடுருவிச் செல்ல இடம்கொடுத்து புதைத்து வைத்திருக்கும் பாவங்களை வெளியே கொண்டுவந்து அறிக்கையிட்டு, அகற்றிவிட்டு என்றும் ஒளியிலே வாழத் தீர்மானிப்போம்.

க. அருள்நேசன், குருநகர்

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,மார்ச் 22

மீசாலை வடக்கு நடராஜா வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் திருவிழாவில் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 31 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

தென்மராட்சி,மார்ச் 22

சாவகச்சேரி நுணாவில் மத்தி வைரவ சுவாமி என அழைக்கப்படும் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் பங்குனி உத்தர தினத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ந-9)

# 3 கொலைச் சம்பவங்கள் தொடர்பில் நான்கு சந்தேகநபர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம்,மார்ச் 22

திருநெல்வேலி சிவன் அம்மன் கோயிலடியை அண்மித்து இடம்பெற்ற கொலை உட்பட 3 கொலைச் சம்பவங்கள் தொடர்பில் நான்கு சந்தேக நபர்கள் யாழ். மேல் நீதிமன்றினால் கடந்த செவ்வாய்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் மூன்று வழக்குகளினதும் பிணை விண்ணப்பங்கள் பரிசீலனைக்காக கடந்த செவ்வாய் கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டன. அதனைப் பரிசீலித்த பின்னர் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

திருநெல்வேலி சிவன் அம்மன் கோயிலை அண்மித்து கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி பத்மநாதன் ஜெனிசீலன் (வயது 28) என்பவர் கத்தியால் வெட்டிக்கொலை செய்யப்பட்டார். மற்றொருவர்கத்தியால்வெட்டிக் காயப்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் திருநெல்வேலியை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த பா.மகேந்திரராஜா, திருச்செல்வம் ஜசிந்தன், குலசேகரன் கபிலன், குலசேகரன் சதீஸ்காந்தன், செல்வராஜா மிகுந்தன், செல்வராஜா ஜெயந்தன் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் மிகுந்தன், ஜெயந்தன் ஆகியோர் சார்பாக யாழ்.மேல் நீதிமன்றில் பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த பின்னர் இருவருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் ஒவ்வொருவரும் தலா 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா இரண்டு லட்சம் ரூபா இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

மற்றொரு கொலை திருநெல்வேலி கந்தர்மடம் பகுதியில் 2007 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி நடந்தது. இதன்போது அதே இடத்தைச் சேர்ந்த குமாரசுவாமி செல்வஜோதி (வயது 36) என்பவர் கொலை செய்யப்பட்டார்.

அவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை திருச்செல்வம் என்பவர் கடந்த ஜூலை 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவரின்பிணைகோரிய விண்ணப்பத்தைப் பரி சீலித்த மன்று பிணை அனுமதி வழங்கியது.

இதன்படி 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார்.

மற்றைய வழக்கு கோண்டாவிலில் இடம்பெற்ற கொலை தொடர்பானது. இந்தச் சம்பவத்தில் கோண்டாவில் கோட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த சபாரட்ணம் ஜெயந்திரன் (வயது -52) என்பவர் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் அராலி யைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் தம்பு இளங்கோ என்பவர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். (த-4)

## உயிரிழப்பை ஏற்படுத்திய சாரதிக்கு 5 ஆண்டு சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 22

வீதியால் சென்ற வயோதிபரை பஸ்ஸினால் மோதி உயிரிழப்பை ஏற்படுத்திய சாரதிக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது நீதிமன்றம்.

யாழ்.மேல்நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வேலணையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் சபாரத்தினம் (வயது-72) என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்றபோது இந்த முதியவரை மோதியது. இதனால் அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்த பஸ்ஸின் சாரதியான பொ.தர்மகுலசிங்கம் என்பவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். விளக்க மறியலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவர் மீதான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ்.மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வந்தது.

விசாரணையின் போது குறித்த சாரதி கொலை அல்லாத மரணத்தை ஏற்படுத் தியதாக இனங்கண்டு அவருக்குத் தண்டனை விதிக் கப்பட்டது.

இதன்படி இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிமன்றம் அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது. இதுதவிர 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறின் மேலும் ஒரு மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் மேல்நீதிமன்றம் உத்தரவிட்டது. (த-4)

## கேட்ட வரம்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மண்ணிலேயே உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கை தங்களுக்குத் தாய்மண்ணில் கண்ணியமான வாழ்க்கை அமைய வேண்டும் என்பதுதான். வெளிநாடு வாழ் இலங்கைத் தமிழர்கள் கேட்பதைப்போல, அவர்களால் தமிழீழம், ராஜபக்ஷவுக்கு தண்டனை என்று வெளிப்படையாகப் பேச முடியாது.

ஈழத்தில் கால் நூற்றாண்டுப் போரினால் சலிப்புற்று இருக்கும் அப்பாவித் தமிழர்களின் எதிர்பார்ப்பு கல்வி, மருத்துவம், உறைவிடம், ராணுவம் வெளியேறிய அமைதிச் சூழல், தொழில்தொடங்க பொருளாதார உதவிகள் போன்றவையாகத்தான் இருக்க முடியும். இலங்கை அரசை எதிர்த்துப் போராடும் மனத்துணிவும் தலைமையும் அங்கே இல்லை. இன்னொரு பிரபாகரன் அங்கே தோன்றக்கூடும். ஆனால், அதற்கு இன்னும் காலம் உண்டு. இப்போதைய அவர்களது தேவை அமைதியான வாழ்க்கைதான்.

இத்தகைய வாழ்க்கையை நிச்சயமாக ராஜபக்ஷ அரசு உறுதிப்படுத்தாது. அங்கே மக்கள் பயத்திலும் பீதியிலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முள்வேலிகள் அகற்றப்பட்டு விட்டனவே தவிர, ஒவ்வொரு தெரு மூலையிலும் துப்பாக்கியுடன் இராணுவ சிப்பாய்கள் நின்று கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த நிலைமையை இந்திய அரசால், இந்திய அரசு இலங்கைக்குத் தரும் தலையீட்டால் தடுக்க முடியும்; மாற்ற முடியும். அதற்குத்தான் தமிழகத்தின் அரசியல் கட்சிகள் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். கேட்டால் கேட்ட வரம் கிடைக்கும் நேரம் இது.

நன்றி: 'தினமணி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலிஸ் சேவையின் 149 ஆவது நிறைவு தினம் நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பில் நடை பெற்ற போது...

# பெற்றோர் வீடு திரும்பவில்லை 6 பிள்ளைகள் சிறுவர் இல்லத்தில்

இரத்தினபுரி,மார்ச் 22

இரத்தினபுரி,கெஹல்வத்த பிரதேசத்தில் பெற்றோர் விட்டுச்சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகள் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கெஹெல்வத்த பொத்துப்பிட்டிய பகுதியில் வசிக்கும் 2 தொடக்கம் 14 வயதுக்கு உட்பட்ட ஆறு பிள்ளைகளே இவ்வாறு சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று இறக்குவானை பொலிஸார் தெரிவித்தனர்.

6 பிள்ளைகள் உள்ள குறித்த வீட்டில் 7 ஆவது பிள் ளையை பெற்றெடுக்கவென தாய் கடந்த 5 ஆம் திகதி பிரசவத்துக்கென வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

அதன்பின்னர் தந்தையும் வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். இந்த இருவரும் இதுவரை வீடு திரும்பவில்லை. இவர்கள் குறித்து தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அநாதரவான 6 பிள்ளைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டு இறக்குவானை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்டபோது. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் அவர்களை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச)

# அரசமைப்புக்கே பொதுபலசேனா சவால்

## அசாதாரண சூழலை ஏற்படுத்த முயற்சி என்கிறார் ஆரிப் சம்சுடீன்

அம்பாறை, மார்ச் 22

அரசமைப்புக்கே சவால் விடும் பொதுபலசேன போன்ற அடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் வலியுறுத்தியுள்ளார்.

பொதுபலசேனவின் விசமத்தனமான செயற்பாடுகள், அறிக்கைகள், கருத்துக்கள் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முஸ்லிம்களின் கலை, கலாசார, பண்பாட்டு, மார்க்க விடயங்களில் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்து, முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் அப்பாவி இளைஞர்களைத் தூண்ட பொதுபல சேனா செயற்படுகிறது.

அமைதி நிலவும் நாட்டில் மீண்டுமொரு அசாதாரண சூழலைத் தோற்றுவித்து இலங்கை அரசை சர்வதேசத்தில் தர்ம சங்கடமான நிலைக்குத் தள்ளிவிட பொது பல சேனாவும் அதன் ஆதரவாளர்களும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நாட்டில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்ந்தாலும் அவர்கள் இந்த நாட்டில் சகல உரிமையுடன் வாழக்கூடிய பிரஜைகள். முஸ்லிம்கள் வந்தேறு குடிகளல்ல. பல நூற்றாண்டு களாக இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள். இனியும் இந்த நாட்டில் தான் வாழ்வார்கள்.

நாட்டின் தேசிய தனித்துவ இனமென்ற ரீதியில் அரசமைப்பில் கூறப்பட்டுள்ள அனைத்து உரிமைகளுடன் வாழும் உரிமை முஸ்லிம்களுக்கு உண்டு என்பதை பொதுபல சேனா போன்ற அமைப்புக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே இத்தகையவர்களின் நடவடிக்கைகளுக்கு அவர்கள் வழியில் பதிலளிப்பது பொருத்தமல்ல. மனிதத்துவத்தையும் மதிக்கின்ற மக்களோடு ஒன்றிணைந்து அவர்களின் சமூக விரோத நடவடிக்கைகளை ஓரங்கட்டுவதே சரியானபதிலாக அமையும்.

ஹலால் உணவு உண்பதைத் தடுத்துவிட்டோம் என்று மார்பு தட்டி, மகிழ்ச்சி கொண்டாடும் பொது பல சேனா, இந்த நாட்டு மக்கள் சுத்தமான உணவு உண்பதைத் தடுத்து மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளதை உணரவில்லை. இந்த அடிப்படைவாதிகளின் சமூக விரோதச் செயல்களை மக்கள் தற்போது உணர ஆரம்பித்துள்ளனர்.

இந்த நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கவில்லை; கூறு போடவில்லை. மாறாக இந்த நாடு சுதந்திரம் அடைந்தது முதல் ஒவ்வொரு விடயத்திலும் முஸ்லிம்கள் நாட்டுப் பற்றோடு பங்குபற்றியிருக்கிறார்கள். அந்த நாட்டுப்பற்றுடன்தான் இன்றும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவற்றை அறியாது செயற்படும் பொதுபல சேனா போன்ற அடிப்படைவாதக் குழுக்களின் கூச்சல்களுக்கு நாம் அடிபணிய வேண்டிய அவசியமில்லை.

ஏனைய மதத்தவர்களின் உரிமைகளைப் பாதிக்காத வண்ணம் நாம் நமது தனித்துவ உரிமைகளுடன் வாழும் உரிமையுடையவர்கள். அந்த வகையில் இந்த நாட்டில் வாழும் சகல முஸ்லிம்களும் தங்களது தனித்துவத்தை அடையாளப்படுத்தும் ஆடையாக ஹபாயாவை அணியுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

நேற்று வியாழக்கிழமை 17ஆம் பக்கத்தில் வெளியாகிய மார்க்கக் கோட்பாடு பற்றிப் பேச எவருக்கும் உரிமை இல்லை என்னும் செய்தியில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். எஸ்.அமீர் அலியின் ஒளிப்படத்துக்குப் பதிலாக அமைச்சர் பஷீர் சேகுதாவூத்தின் புகைப் படம் வெளியாகி இருந்தது. தவறுக்கு வருந்துகிறோம்.

-ஆசிரியர்

# உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,மார்ச் 22

மட்டக்களப்பு, வெலிக்காகண்டி மக்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு முன் நடத்திய ஆர்ப்பாட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகரும் கிழக்கு மாகாண சபை உறுப்பிருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் வழங்கிய உறுதிமொழியையடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வெலிக்காகண்டி கிராம மக்களை யானைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்குமாறு கோரியும், இந்த கிராமத்துக்கான வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரியும் மக்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு முன்னாள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து ஆர்ப்பாட்ட இடத்துக்கு சென்ற சிவநேசதுரை சந்திரகாந்தன், அந்தக் கிராம மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து கொண்டதுடன், அவர்களது கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்றித் தருவதாக உறுதிமொழி வழங்கினார்.அதனையடுத்து ஆர்ப்பாட்டம் நிறைவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் வயது 60

## பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை

கொழும்பு,மார்ச்22

அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை 60 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் உள்ளடக்கிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க இதுவரை 57 வயதாகநிர்ணயிக்கப்பட்டிருந்த ஓய்வுபெறும் வயதெல்லை 60 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிணங்க அரச உத்தியோகத்தர் ஒருவர் 55 வயதுக்குப் பின் 60 வயது வரை இனிமேல் ஒவ்வொரு வருடமும் காலத்தை நீடிப்பதற்காக விண்ணப்பிக்க வேண்டியதில்லை. அவர் 60 வயது வரை சேவையைத் தொடர முடியும்என்று அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே 55 வயதாக இருந்த அரச உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை தொழில் சங்கங்களின் வேண்டுகோளுக்கு இணங்க 57 வயதாக அதிகரிக்கப்பட்டது. தற்போது 60 வயதாக இந்த வயதெல்லை அதி கரிக்கப்பட்டுள்ளது. 60 வயது வரை மட்டுமே இந்த நீடிப்பு நடைமுறையில் இருக்கும். 60 வயதுக்கு மேல் எவருக்கும் கால நீடிப்பு வழங்கப்படமாட்டாது என்று உயர் அதிகாரி கூறினார்.

அரச உத்தியோகத்தர் ஒருவர் 55 வயதில் ஓய்வுபெற முடியும். அவர் விரும்பும் பட்சத்தில் மூன்று மாத கால முன்னறிவித்தலை வழங்கி அவர் 60 வயது வரை சேவை யில் நீடிக்க முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு தமிழ் தெரிந்தவரை நியமிக்கவும்

## மூதூர் பீஸ் ஹோம் நிறுவனம் கோரிக்கை

திருகோணமலை,மார்ச் 22

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சமரசப் பிரிவில் தமிழ் மொழி தெரிந்த உத்தியோகத்தர் ஒருவரைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும்.

இவ்வாறு 'மூதூர் பீஸ் ஹோம்' நிறுவனம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம் மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சமரசப் பிரிவில் தமிழ்மொழி தெரிந்த உத்தியோகத்தர் ஒருவர் கடமையில் இல்லாததால் அந்தப் பிரிவுக்கு வரும் தமிழ்மொழி பேசும் மக்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

வெளிநாடு சென்றுள்ள தமது உறவினர்கள் குறித்து தகவல்களைப் பெற குறித்த பிரிவை நாடிவரும் தமிழ் பேசும் மக்கள், தமது பிரச்சினையை உரிய முறையில் தெரியப்படுத்த முடியாது திரும்பிவரும் நிலைமை அண்மைக்காலமாகத் தொடர்ந்து வருகின்றது.

அவ்வாறு செல்பவர்களில் சிலர் இரு மொழிகளில் பேசக்கூடியவர்களை மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் அழைத்துச்செல்வதால் அவர்களுக்கான செலவீனத்தையும் சுமக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

மூதூரைச் சேர்ந்த றிஸானா நபீக்கிற்கு ஏற்பட்ட சம்பவத்தின் பின்னர், வெளிநாடுகளில் தொழில் புரிந்துவருவோர் சம்பந்தமான தகவல்களை அறிந்துகொள்வதற்கு உறவினர்கள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இதனால் வேலைவாய்ப்புப் பணியகத்தின் சமரசப் பிரிவுக்கு நாளாந்தம் தமிழ் மொழி பேசும் மக்களும் வருகை தந்தவண்ணமுள்ளனர்.

எனவே இந்த மக்களின் நிலைமையைக் கவனத்திற்கொண்டு தமிழ்மொழி தெரிந்த ஒருவரையாவது குறித்த பிரிவில் தினமும் கடமையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஆவணங்கள் உள்ளவர்களுக்கு காணிகளை வழங்குங்கள்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் உத்தரவு

திருகோணமலை, குச்சவெளி பிரதேசத்தில் காணிக் கச்சேரி மூலம் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்பட்ட ஆவணங்கள் உள்ள மக்களுக்கு சொந்தக் காணிகளை உடனடியாக வழங்க வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் மாகாண காணி ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த காலப் போரால் 1984ஆம் ஆண்டு புல்மோட்டை பிரதேசத்துக்குட்பட்ட மண்கிண்டிமலை, தேத்தாவாடித்தீவு, பீரந்தீவு, பொன்மலைக்குடா ஆகிய கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் அந்தக் கிராமங்களுக்கு மீள் குடியேற முற்பட்டுள்ளனர். எனினும் குறித்த மக்களுக்கு [illegible] காணி தமக்கு சொந்தமானது என்று கடற் படையினர் தெரிவித்தனர். அதனையடுத்து அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டது.

அதனையடுத்து இந்தப் பிரச்சினை குறித்து கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீதின் கவனத்திற்கு மாகாண சபை உறுப்பினர் ஆர். ரம்ழான் கொண்டு வந்துள்ளார். அதனையடுத்து காணிக் கச்சேரி மூலம் தெரிவு செய் யப்பட்டு வழங்கப்பட்ட ஆவணங்கள் உள்ள சகல மக்களுக்கும் சொந்தமான காணிகளை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் கிழக்கு மாகாண காணி ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கணினிப் பாவனையில் சுட்டிகளின் (Mouse) பயன்பாடானது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இதனால் காலத்துக்குக் காலம் பல்வேறு புதிய தொழில் நுட்பங்களை உள்ளடக்கியதாக வெவ்வேறு வகைச் சுட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன.

இவற்றின் தொடர்ச்சியாக தற்போது IRIS நிறுவனமானது OCR தொழில்நுட்பத்துடன் கூடிய Scanner Mouse ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. USB 2.0 இணைப்பிகளை உடைய இந்த சுட்டிகளின் மூலம் எந்தவிதமான மேற்பரப்புக்களில் காணப்படும் எழுத்துக்களையும் ஸ்கான் செய்யக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த சுட்டியுடன் தரப்பட்டுள்ள ஸ்கான் செய்வதற்கான பொத்தானை அழுத்தியதும் சுட்டி காணப்படும் மேற்பரப்பிலுள்ள எழுத்துக்கள் ஸ்கான் செய்யப்படும். இந் நவீன ரக சுட்டிகளை 79 அமெரிக்க டொலர் பெறுமதியில் கொள்வனவு செய்ய முடியும்.




இதற்காக குறித்த சுட்டியுடன் தரப்பட்டுள்ள ஸ்கான் செய்வதற்கான பொத்தானை அழுத்தியதும் சுட்டி காணப்படும் மேற்பரப்பிலுள்ள எழுத்துக்கள் ஸ்கான் செய்யப்படும். இந் நவீன ரக சுட்டிகளை 79 அமெரிக்க டொலர் பெறுமதியில் கொள்வனவு செய்ய முடியும்.

# Samsung அறிமுகப்படுத்தும் அதிநவீன ஹேமிங்பேட்

இலத்திரனியல் முன்னணிச் சாதனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுள் ஒன்றான Samsung ஆனது அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ஹேமிங் பேட் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

வயர்லெஸ் தொழில்நுட்பத்தையும் உள்ளடக்கியுள்ள இந்த ஹேமிங் பேட் ஆனது தொடுதிரை தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றது.

கணினி விளையாட்டுப் பிரியர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படும் இச்சாதனமானது 2 x AAA அளவுடைய மின்கலங்களின் உதவியுடன் தொழில் படக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



# இணையப் பக்கங்களை சுயமாகவே திறக்கச் செய்வதற்கு......

தொடர்ச்சியாக இணையத்தளங்களில் பணிபுரிபவர்களுக்கு புதிய இணையப் பக்கங்களை அடிக்கடி திறக்க வேண்டி ஏற்படும். இதனால் மணிக்கட்டில் வலிபோன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களும் வெகுவாகவே காணப்படுகின்றன.


எனவே இந்தப்பிரச்சினையிலிருந்து நிவாரணம் தரும் முகமாக AutoPager எனும் நீட்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நீட்சி மூலம் Google Chrome மற்றும் Mozila Firefox ஆகிய உலாவிகளில் குறித்த வசதியை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

இதன் மூலம் Lifehacker, New York Times, Digg, eBay, Amazon, Yahoo, YouTube, flickr, live, msn, myspace, wikipedia, ebay,taobao,Twitter, Google உட்பட ஆயிரக்கணக்கான இணையத்தளங்களை சுயமாகத் திறக்கும் வசதியை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.




# உங்களை கேலிச்சித்திர நாயகனாக்கும் பேஸ்புக் அப்ளிக்கேஷன்




சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பேஸ்புக் தளத்தில் பல பொழுதுபோக்கு அம்சங்கள் இருப்பது அனைவரும் அறிந்ததே.

பேஸ்புக்கில் இருக்கும் அப்ளிகேசன்களில் பல மிகவும் பிரபலமாகியுள்ளன.

கேலிச்சித்திர (கார்ட்டூன்) படங்களை வடிவமைப்பதற்காகவே ஒரு சிறப்பான அப்ளிகேசன் உள்ளது. பிட் ஸ்ட் ரிப்ஸ் என்ற இந்த அப்ளிகேசன் மிகவும் பிரபலமாகியும் உள்ளது.

இதை எப்படிப் பயன்படுத்துவது என்ற விவரங்களைத்தான் கீழே பார்க்கலாம். கேலிச்சித்திரங்களாக மட்டுமல்லாது, வாழ்த்து அட்டைகள் (Greeting Cards) கூட இந்தத்தளத்தில் கிடைக்கிறது.

apps.facebook.com/bitstrips என்ற இணையத்தள முகவரிக்குச் செல்லவும். [illegible] அவதார் டிசைன் [illegible] பொத்தானை அழுத்தி அடுத்த பக்கத்துக்குச் செல்லவும். இவை அனைத்தும் ஆண்கள்,பெண்கள் என்ற வகையில் மாறுபடும்.

அடுத்ததாக வரும் பக்கங்களில் உங்கள் முக அமைப்பு எப்படியிருக்கும் என்ற கேள்விகளுக்கு, படங்கள் மூலமே பதிலளிக்கவும். உதாரணத்துக்கு, உங்கள் முகத்தின் கலர் மற்றும் வடிவமைப்பு போன்றவை.

இங்கே நீங்கள் உயரமானவரா அல்லது உயரம் குறைந்தவரா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவும். அதைப்பொறுத்தே உங்களுடைய கேலிச்சித்திரம் அமையும்.

நீங்கள் எடை குறைந்தவரா அல்லது உடல் எடை அதிகம் உடையவரா என்பதை இந்தப்பகுதியில் குறிப்பிடலாம்.

நீங்கள் உடையணியும் முறையைக்கூட இங்கே குறிப்பிடலாம். அனைத்துச் செயல்களும் முடிந்தவுடன் உங்களுடைய கார்ட்டூன் மற்றும் அதுதொடர்பான பல படங்களை தானாகவே வடிவமைக்கும் இந்த அப்ளிகேசன். பயன்படுத்துவதற்கு நன்றாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



யாழ். தொல்புரம் மேற்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை தவராசா அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதியரசர் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், பின்னர் சிமெந்துக் கூட்டுத் தாபனத்திலும், வெளிநாட்டு நிறுவனங்களிலும் கடமையாற்றியவர்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சிறந்த கிரிக்கெட் வீரராக விளங்கியவர். இன்று விக்ரோறியன் விளையாட்டுக் கழகத்தை வழி நடத்திவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ-28)

* * *



நீர்வேலியைச் சேர்ந்த மா. புவனேந்திரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியரான இவர் சாரணியத் துறையிலும் அளப்பெரும் சேவையாற்றியவர். கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளராகப் பணியாற்றிய இவர், சாரணியத்தில் அதி உயர் விருதான ''வெண்தாமரை விருதை'' பெற்றுக் கொண்டதோடு சாரணியம் சார் நிலையில் 18 விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவர் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவுக் கிளையின் செயலாளருமாவார். (எ-11)

# பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் பெண்களின் செயற்பாடு சிறப்பானவையே

## நல்லூர் உதவிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

பெண்கள் குறித்த விழிப் புணர்வுகளை மக்கள் மத்தி யில் ஏற்படுத்தினால் மட்டும் போதாது. அவர்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கக்கூடிய வழிமுறை களைக் காண்பதில் நேரடியாகவே ஈடுபடவேண்டும்.

யாழ்ப்பாணம், மார்ச் 22

பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வரும் நிலையிலும் சமூகத்துக்கான தமது பங்களிப்புக்களில் பெண்கள் சிறப்பாகவே செயற்படுகின்றனர்.

நல்லூர் உதவி பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக மகளிர் தினவிழா செயலக மண்டபத்தில் உதவி பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

அவர் தனது தலைமையுரையில் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

1848 இல் மகளிர் தமது உரிமைகள் கிடைக்கவேண்டும் என ஆரம்பித்த போராட்டம் இன்று சர்வதேச மகளிர் தினமாகப் பரிணமித்துள்ளது.

அநேக நாடுகளில் பெண்கள் எந்தவொரு சுதந்திரம் அற்றவர்களாக வாழ்கின்றனர். எமது நாட்டில் அந்த நிலை இல்லை. எமது நாட்டில் பெண்கள் உயர்ந்த நிலையில் பதவிகளை வகித்து வருகின்றனர். பல்வேறு துறைகளிலும் காணமுடிகின்றது.

இலங்கையில் பொருளாதார அதிகரிப்பில் பெண்கள் பெரும் பங்கு வகிக்கின்றார்கள். பெண்கள் சமூகம் அதிக அளவில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படையாகக் கூறமுடியாத நிலை உள்ளது.

பெண்கள் குறித்த விழிப் புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தினால் மட்டும் போதாது. அவர்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கக்கூடிய வழிமுறைகளைக் காண்பதில் நேரடியாகவே ஈடுபடவேண்டும்.- என்றார். (ம-9)




நல்லூர் பிரதேச செயலக மகளிர் தின நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன. பிரதேச உதவிச் செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமதி எஸ். திருமகள், சிறப்பு விருந்தினராக, சுவிஸ் திட்ட கூட்டுத்தாபன திட்ட முகாமையாளர் திருமதி டூ.டெ.பேரு ஆகியோர் கலந்து கொண்டனர். மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டிகளுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் திருமதி எஸ். திருமகள் வழங்கிக் கௌரவித்தார். (ம-7)

## ஒல்லாந்தர் கால நாணயங்கள் குடத்தனைப் பகுதியில் கண்டுபிடிப்பு



வடமராட்சி, மார்ச் 22

வடமராட்சி கிழக்கு குடத்தனை வலிக்கண்டலில் உள்ள நாகர்கோவில் தெற்கு மீள்குடியமர்வுக் கிராமத்தில் ஒல்லாந்தர் காலத்து நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தில் வசிக்கும் பி.பூபாலசிங்கம் தனது வீட்டுக்கு வேலி அடைக்க கதியால் போட நிலத்தைத் தோண்டும்போது இந்த ஒல்லாந்தர் காலத்து சில்லறை நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (ந-8)

## வடமராட்சியில் திடீர்ப் பரிசோதனை

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற மூன்று பேருக்கு அபராதம்

வடமராட்சி, மார்ச் 22

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவர் இலங்கை மின்சார சபைக்கு 74 ஆயிரம் ரூபாவையும், நீதிமன்றத்துக்கு 47 ஆயிரம் ரூபாவையும் அபராதமாகச் செலுத்தினார்கள்.

இலங்கை மின்சார சபையின் திடீர் சோதனைக் குழு நடத்திய சோதனையின் போது அல்வாய் கிழக்கு மடத்தடிப் பகுதியில் ஒருவரும், கரணவாய்ப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவரும் சிக்கிக் கொண்டனர்.

இந்த மூவர் மீதும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்குகள் தனித்தனியே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூவரும் குற்றங்களை ஒப்புக் கொண்டனர்.


இதனைத் தொடர்ந்து அல்வாய் கிழக்கு, மடத்தடி வாசி இலங்கை மின்சார சபைக்கு நஷ்டமாக 58 ஆயிரம் ரூபாவும், நீதிமன்றுக்கு தண்டப்பணமாக 35 ஆயிரம் ரூபாவும், கரணவாய் வாசிகள் இலங்கை மின்சார சபைக்கு நஷ்டமாக தலா 8 ஆயிரம் ரூபாவும், நீதிமன்றக்கு தண்டப்பணமாக தலா 6 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (ந-8)

## மகளிர் தினத்தையொட்டி போட்டிகள்

தென்மராட்சி, மார்ச் 22

தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் விவகார பிரிவினர் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரதேச மகளிர் அமைப்புகளின் அங்கத்தவர்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துகின்றனர்.

போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். போத்தலில் நீர் நிரப்புதல், கிடுகு பின்னுதல், பலூன் ஊதி உடைத்தல், ஊசி நூல் கோர்த்தல், பந்து எறிதல், கயிறு இழுத்தல், கரண்டியில் தேசிக் காய் வைத்து ஓடுதல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. (ந-9)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## இலகு வழிச் சைவநெறி நூல் வெளியீடு இன்று

தென்மராட்சி, மார்ச் 22

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. தரம் 8 வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட ''எழுதுவோம், வாசிப்போம், உயர்வோம்'', ''இலகுவழிச் சைவநெறி'' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று மு.ப.11.30 மணிக்கு வித்தியாலய சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் வே.கந்தசாமி தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய தமிழ்ப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னத்துரையும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை தமிழ்த் துறை விரிவுரையாளர் க.தர்மராஜா, சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் , தமிழ்ப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி க.சிறிதரன், சைவநெறி ஆசிரிய ஆலோசகர் செல்வி சி.இராமலிங்கம் உட்படப் பலர் கலந்து கொள்வர்.

வித்தியாலயத்தின் தரம் 8 மாணவர்களின் மொழி அறிவு, சமய பண்பாட்டு விழுமியங்களையும் பாடத் திட்டத்துக்கமைய உருவாக்கப்பட்ட செயலாக்கங்கள் மூலம் குறித்த நூல் ஆக்கப்பட்டுள்ளதாக அதிபர் வே.கந்தசாமி தெரிவித்தார். (வ-9)

## புத்தக தினத்தை முன்னிட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 22

உலக புத்தக தினத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்கள் மட்டத்திலும் திறந்த மட்டத்திலும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களின் விடுமுறைக்காலத்தை நூலகத்துடன் ஒன்றிணைக்கும் நோக்குடன் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி வரை வாசிப்புக் காலமாக அறிமுகம் செய்து போட்டிக்குரிய நூல்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

அதனைத்தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, திறந்த மட்டப் போட்டி ஆகியவற்றில் ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களும் வாசகர்களும் இணைத்துக் கொள்ளப்படுவர்.

ஏப்ரல் 23 ஆம் திகதி உலக புத்தக தினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதால் இதற்கான போட்டிகள் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி கோண்டாவில் பொது நூலகத்தில் நடைபெறும்.

ஆர்வமுடையவர்கள் மேலதிக விவரங்களையும் போட்டியில் கலந்துகொள்வதற்கான அனுமதியையும் கோண்டாவில் பொதுநூலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று நூலகர் கே. அனிதா தெரிவித்துள்ளார். (ம-14)

## வாழும் கலைப்பயிற்சி

பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர் குருஜி நடத்தும் வாழும் கலைப்பயிற்சி நீராவியடி சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 6மணிக்கு ஆரம்பமாகும் இந்த பயிற்சிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறும். மாணவர்கள் இன்று முற்பதிவு களை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## பருத்தித்துறையில் 116 பேர் இரத்ததானம்

வடமராட்சி, மார்ச் 22

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் 116 பேர் இரத்த தானம் செய்தனர்.

பிரதேச இராணுவத்தினரும், பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய மேற்படி இரத்ததான நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் இரத்த தானம் செய்தனர். (வ-8)

## இறைவனிடம் நம்பிக்கை வை

தனியாக விடப்படவில்லை என்பதை எப்போதும் நினைவிற் கொள். இறைவன் உன்னுடன் உள்ளார். அவர் உனக்கு உதவிக்கொண்டும் உன்னை வழி நடத்திக் கொண்டும் இருக்கிறார். அவர் என்றும் உன்னைக் கைவிடாத தோழன். அவரே உனக்கு ஆதரவளித்துக் கொண்டும் வழிகாட்டிக் கொண்டும் இருக்கும் நண்பனாவார். அவனிடம் நம்பிக்கை வை. அவர் உனக்காக அனைத்தையும் செய்வார்.




## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

அமனா ரக்புல் நிறுவனத்தின் யாழ். கிளைக்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள், அணித்தலைவர்கள் பதவிக்கு வெற்றிடங்கள் உள்ளன என்றும் தகுதியானவர்கள் ஒரு வார காலத்துக்குள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என்றும் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (ந-13)

## எழுத்தாளர் அமைப்பு உருவாக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

இலங்கையில் உள்ள அனைத்து எழுத்தாளர்களையும் கொண்ட தேசிய எழுத்தாளர் அமைப்பு உருவாக்க கலாசார மற்றும் கலைகள் அலுவல்கள் அமைச்சு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகளிலும் இயங்கும் எழுத்தாளர் சங்கங்களை ஒன்றிணைத்து தேசிய எழுத்தாளர் அமைப்பு உருவாக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் எழுத்தாளர் சங்கங்களின் விபரங்களையும் அவற்றின் நிர்வாகிகளின் விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்திருக்கிறார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிரான போரில் இந்தியாவின் பங்கு என்ன?

## சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றில் பொதுநல வழக்கு

சென்னை, மார்ச் 22

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற போரில் இந்தியாவின் பங்களிப்பு இருந்தது என்று ஐ.நா. தெரிவித்திருப்பதால், இந்தியாவின் பங்களிப்பு எந்த அளவுக்கு இருந்தது என்பதைக் கண்டறிய சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரி உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கோலாலம்பூரைச் சேர்ந்த சட்டத்தரணி ஏ. கணேசலிங்கம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

நான், சிங்கப்பூரில் பிறந்த இலங்கைத் தமிழர் வம்சாவளியைச் சேர்ந்தவன். ஐ.நா. அமைத்த குழு தனது அறிக்கையில், 'பயங்கரவாதிகளுக்கு எதிரான போர்' என அழைக்கப்படும், குறிப்பிடப்படும் இலங்கைப் போரில், இலங்கை அரசுடன், இந்தியாவும் ஒத்துழைத்துச் செயற்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் பங்களிப்பு என்பது எந்தளவுக்கு இருந்தது, அதன் முழுப் பரிமாணம் என்ன என்பது குறித்து, சுதந்திர மாக விசாரிக்க சி.பி.ஐக்கு உத்தர விட வேண்டும்.

இலங்கை இராணுவத்தினர் இலங்கைத் தமிழர் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தி அவர்களைக் கொன்றதற்கு போதுமான ஆதாரம் உள்ளது என்று ஐ.நா. விசாரணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

இலங்கை அரசால் பாதுகாப்பான பகுதி என அறிவிக்கப்பட்ட 3 இடங்களுக்கு 3 லட்சம் இலங்கைத் தமிழர்கள் இடம்பெயரச் செய்யப்பட்டனர்.

இதில், 2 பாதுகாப்பான இடங்கள் மீது இலங்கை இராணுவம் வேண்டுமென்றே குண்டு வீசித் தாக்குதல் நடத்தியது. இவை தொடர்பான ஐ.நா. அறிக்கை 2011 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி உலகம் முழுக்க இணையத்தளங்களில் வெளியிடப்பட்டது. ஆனாலும், இதுவரை ஐ.நா. அதிகாரபூர்வ விசாரணைக்கு உத்தரவிட வில்லை.

இலங்கைத் தமிழர்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டது குறித்தும், இலங்கை உள்நாட்டுப் போரில் இந்தியாவின் பங்களிப்புக் குறித்து விசாரிக்கக் கோரியும் சி.பி.ஐ. தலைவருக்கு 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கடிதம் மூலம் மனுத் தாக்கல் செய்தேன். அதற்கு இதுவரை எந்தவித பதிலும் இல்லை - என்றுள்ளது.

(வ)

## ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மேட்டூரில் நேற்று கடையடைப்பு



சேலம், மார்ச் 22

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கக் கோரியும் சேலம் மாவட்டம், மேட்டூரில் நேற்று கடையடைப்புப் போராட்டம் நடைபெற்றது.

பொதுமக்கள், வர்த்தகர்கள் மற்றும் அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைப்புக் கொடுத்ததால் அனைத்துக் கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தன. பஸ் நிலையம், சதுரங்காடி, சந்தைகள் போன்ற இடங்களில் உள்ள அனைத்துக் கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தன.

கடைகள் அடைக்கப்பட்டதால் சுற்று வட்டார கிராமப் பகுதியில் இருந்து மேட்டூர் நகருக்குச் செல்லும் மக்கள் கூட்டம் குறைந்து பஸ் நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது. நகரின் அனைத்து முக்கிய பகுதிகளிலும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

மேட்டூர் சின்னபார்க் பகுதியில் கல்லூரி மாணவர்கள் சிலர் நேற்று முன்தினம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். அவர்களின் போராட்டம் நேற்று 2 ஆவது நாளாகவும் நீடித்தது. இதேபோல் சதுரங்காடி பகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் மகளிர் அணி சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 2 ஆவது நாளாகவும் நீடித்தது.

(வ)

### பெயர் மாற்றம்

இல. 48, கண்ணாபுரம் கொட்டடி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் செல்வநாயகம் பத்மாதேவி ஆகிய நான் இன்று தொடக்கம் எனது பெயரை செல்வநாயகம் பத்மாவதி என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

செல்வநாயகம் பத்மாவதி (34709) (6.7.11)

## புலம்பெயர் தமிழர்கள் போராட்டம்

ஈழத்தமிழருக்கு ஆதரவாக வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் எம்மவர்கள் கடந்த சில தினங்களாக கவனவீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

டென்மார்க், ஜேர்மன், நோர்வே மற்றும் கனடா ஆகிய நாடுகளில் அடையாள உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களில் புலம்பெயர்ந்தோர் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக இவர்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

### தவறிவிட்டது

வலிவில் வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வி சாந்தினி கந்தசாமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (815515374V) வலிவில் வீதிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

T.P:077 947 8317

(27900)(6.7.11)

### தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த இராசையா கிருஷ்ணபிள்ளை ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. 533154697V, காப்புறுதிப் பத்திரம், வங்கி அட்டை, ஒரு தொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் சாவகச்சேரி மக்கள் வங்கிக்கும் பிரதேச செயலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P:077 526 8139

(27801)(6.7.11)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நலன் விரும்பியும் ஆலோசகருமான **சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா** அவர்கள் SLEAS III தரத்துக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு

அவரை மனமார நாம் வாழ்த்துவதோடு மேலும் அவர் பார்போற்ற பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

தியாகி அறக்கொடை நிறுவன சமூகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(34705)(2.6.7)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 18-09-1936
மறைவு 23-02-2013



வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி **தங்கச்சிப்பிள்ளை நவரத்தினம்**

நீங்கள் எம்மை விட்டு இறைவன்
திருவடி சேர்ந்தீர்கள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்முள் அலைபாய்கின்றன
என்றென்றும் உங்கள் நினைவுடன்
உங்களுக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவினால் நாம் துயருற்றிருந்த போது, அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கியவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (23.03.2013) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்த கரையில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து (25.03.2013) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

வாதரவத்தை, புத்தூர். (34712)(10.6) குடும்பத்தினர்.





**Why Choose BCAS for Law?**

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.
> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது.
> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.
> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.
> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

Macro Ads

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத் தமிழருக்கு ஆதரவு கோரி புலம்பெயர் தமிழர் போராட்டம்



திசைகள் இளையோர் அமைப்பின் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் டென்மார்க் தலைநகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.




ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் தலைநகர் பேர்லின் மற்றும் டுசல்டோர்ப்பில் உள்ள உள்ளூராட்சி நாடாளுமன்றம் முன்பாக கவனயீர்ப்பு.



நோர்வே தமிழ் இளையோர் சமூகத்தின் ஏற்பாட்டில் ஈழத்தமிழருக்கான நீதி கோரி நடைபெற்ற கவனயீர்ப்பு அடையாள உண்ணாவிரதப் போராட்டம்.




கனேடிய தமிழரின் ஏற்பாட்டில் ரொறன்ரோவில் அமெரிக்க துணைத் தூதரகத்தின் முன்பாக இடம்பெற்ற கண்டனப் போராட்டம்.

# நவநீதம்பிள்ளையை சபையில் கொச்சைப்படுத்தினார் பீரிஸ்

## சுமந்திரன் எம்.பி. சாடல்

இலங்கை அரசு இன்றும் சிறுபான்மை மக்களைக் சிறுபான்மையாகவே கருதுகின்றது. உள்நாட்டில் சிறுபான்மை இன மக்களைப் பாதுகாக்கத் தவறிய அரசு ஜெனிவாவில் பிரேரணை கொண்டுவருவதைக் கண்டிப்பது வெட்கப்பட வேண்டிய ஒரு விடயம் எனக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

ஐ.நா.ஆணையாளர் நவநீதம்பிள்ளையை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கொச்சைப்படுத்திவிட்டார் என்று அவர் கூறினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் மீள்குடியேற்ற அமைச்சு தொடர்பான விவாதத்தில் பேசியபோதே சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை அரசு இன்னும் சிறுபான்மை இன மக்களை ஒரு குப்பையாகவே கருதுகிறது. ஒரு முஸ்லிம் பெண் தமது பாரம்பரிய உடையுடன் வீதியில் செல்லமுடியவில்லை. வீரகெட்டியவில் வணக்கஸ்தலம் தாக்கப்பட்டது. இதைப் பற்றி சிறிதும் அக்கறை கொள்ளவில்லை.

ஆனால் தமிழ் நாட்டில் பௌத்த பிக்கு தாக்கப்பட்டதற்காகக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்கின்றீர்கள் இது எந்த வகையில் நியாயமாகும்?

முதலில் உள்நாட்டில் உங்கள் சொந்த மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உள்நாட்டில் சிறுபான்மை மக்களை குப்பையாக நடத்திக் கொண்டு ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல், போர்க்குற்ற விசாரணை வேண்டும் எனப் பிரேரணை கொண்டுவருவதாகக் குற்றம் சாட்டுகின்றீர்கள். வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், சர்வதேச மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இந்தச் சபையில் சாடினார். அவருக்கு ஆணையாளரின் பெயரைக் கூடச் சரியாகக் கூறமுடியவில்லை. இது அவரைக் கொச்சைப்படுத்தும் ஒரு செயலாகும்.

வெளிவிவகார அமைச்சராக இருந்த போதும் அவருக்கு ஜெனிவாவில் இடமளிக்காதமையால் அவர் இந்தச் சபையைப் பயன்படுத்திக்கொண்டார்.

ஜனாதிபதி சர்வதேச சட்டங்கள் மீறப்படுவது தொடர்பான ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளார்.

ஆனால் இங்கே மனித உரிமைகள் கேலிக்கூத்தக்கப்பட்டுள்ளன. நாம் சிறுபான்மை இனம் என்பதால் எங்களுக்குக் குரல் இல்லையா?

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் படி யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவம் விலக்கப்பட வேண்டும் என்று சிபாசு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இராணுவம் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து முகாம்களை அமைத்துள்ளது.-என்றார்.

# கட்டளைத்தளபதியிடம் கோப்பாய் மத்தி குடியிருப்பாளர்களின் கோரிக்கை

யாழ்ப்பாணம் , மார்ச் 22

கோப்பாய் மத்தியிலுள்ள தமது குடியிருப்புக்கு ராஜ வீதியிலிருந்து பொது வீதியொன்றை போக்குவரத்துக்கு விட்டுத் தரும்படி அங்குள்ள மக்கள் கோப்பாய் 51 ஆம் பிரிவு இராணுவத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இந்த வீதி தொடர்பாக இராணுவத் தளபதியுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரும்படியும் அவர்கள் கேட்டுள்ளார்கள்.

கோப்பாய் 51 ஆவது பிரிவு கட்டளைத் தளபதிக்கு மக்கள் அனுப்பியுள்ள மனு ஒன்றில், குறித்த வீதியை 47 வருடங்களுக்கு மேலாக நாங்கள் எமது வீடுகள் மற்றும் விவசாய நிலங்களுக்கும் சென்று வரப் பயன்படுத்தியுள்ளோம். 1969 ஆம் ஆண்டு. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சுவர்ண பூமித் திட்ட குடியிருப்பாகும் இது. 2010 ஆம் ஆண்டு குடியிருப்பாளர்கள் இந்தப் பாதையை பயன்படுத்துவது இராணுவத்தால் தடைசெய்யப்பட்டு நாம் தனியார் காணி ஒன்றையே எமது போக்குவரத்துக்கு பயன்படுத்தும் படியாக நிர்ப்பந்திக்கப்பட்டோம். இது தற்காலிக ஏற்பாடே. காணி உரிமையாளர் வேலி அமைப்பாரானால் எமக்கான போக்குவரத்து பாதை இல்லாமல் போகும் எனவே இது விடயமாக தங்களை தனிப்பட்ட முறையில் தலையிட்டு உதவும் படி கேட்பதுடன் இது பற்றி விவாதிக்க சந்தர்ப்பம் ஒன்றைத் தரும்படியும் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவித்துள்ளனர். (ப)

# போருக்குப் பின் யாழ்ப்பாணத்தில் நிலைமைகளை ஆராய்ந்தது கனடா

போருக்குப் பின்னரான யாழ். மாவட்டத்தின் நிலைமைகளை கனேடிய தூதுக் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை, கனேடிய செனற்றரும், பொதுநலவாய மாநாட்டுக்கான விசேட குழுவின் இணைப்பாளருமான ஹக் டீ.சீகல், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் ஷெலிவிடில் ஆகியோர் கொண்ட குழுவினர் வருகைதந்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்திருந்தனர்.

இதன்போது யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் காலை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவித்ததாவது :-

யாழ். மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் அவர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் யாழ். மாவட்டத்தில் போரின் பின்னர் அதிகரித்திருக்கும் மின்சார நுகர்ச்சி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் வீட்டுத் தேவைகளுக்கு உதவி செய்யுமாறு அவர்களிடம் கோரிக்கை விடுத்தேன். அதனை அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் சுற்றுலாத்துறைக்கு, மணற்காடு, காரைநகர், நெடுந்தீவு போன்ற இடங்கள் சிறப்பாக விளங்குவதையும், கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலைக்கு மருதங்கேணி, மணற்காடு உகந்த இடம் என்பதனையும், தும்பிலிருந்து கயிறு உற்பத்தித் தொழிலுக்குச் சாவகச்சேரி, அல்லாரை பொருத்தமான பிரதேசம் என்றும், கடலுணவு உற்பத்திக்கு வேலணை, மண்டைதீவு பிரதேசங்கள் சிறந்த இடம் என்றும், அலுமினியத் தொழிற்சாலைக்கு வேலணை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்கள் உகந்தது என்றும் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

இங்கு தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினேன் - என்றார். (-5)

# இந்தியாவும் பொறுப்புக் கூறவேண்டும் ஈழத்தமிழர் இனப் படுகொலைக்கு

மும்பை, மார்ச் 22

இலங்கையில் நடைபெற்ற இனப்படு கொலைக்கு இந்தியாவும் பொறுப்பேற்க வேண்டும். ஈழத்தமிழர்கள் கொத்துக் கொத்தாக மடிந்து போனதற்கு இந்தியாவும் கூட்டுக்குற்றவாளிதான் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வலியுறுத்தியும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளையமகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் மும்பையில் உள்ள ஆசாத் மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

[illegible] செயலர் தமிழ்ச்செல்வன் சார்பில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமை ஏற்றார்.

## மும்பையில் வைகோ முழக்கம்



கூட்டத்தில் பேசிய வைகோ தமது உரையில்,

இனப்படு கொலை செய்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும். தனி ஈழம் உருவாக பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இலங்கையில் நடைபெற்றது போர்க்குற்றம் மட்டுமல்ல. அது ஓர் இனப்படுகொலை. இந்தப் படுகொலைக்கு இலங்கைக்கு உதவிய இந்திய அரசும் கூட்டுக் குற்றவாளிதான் - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 பிரிவுகளிலும் அசத்தியது யாழ்.இந்து மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்,மார்ச்22

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் யாழ். இந்து மகளிர் கல்லூரி சம்பியனானது.

இந்த ஆட்டங்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

15 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம் மோதிக்கொண்டது.

முதல்பாதி ஆட்டத்தில் இந்து மகளிர் கல்லூரி அணி 8:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்ற யாழ்.இந்து மகளிர் அணி ஆட்ட நேர நிறைவில் 14:6 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சம்பியனானது. மூன்றாம் இடத்தை வேம்படி மகளிர் உயரதரப் பாடசாலை பெற்றுக் கொண்டது.

**இரண்டாவது பாதி ஆட்டம் மிகப் பரபரப்பாக அமைந்தது. இந்து மகளிர் அணிகள் இலகுவாக வெற்றி பெறுவதற்கு முடியவில்லை. இரண்டாவது பாதியில் புத்தூர் சோமஸ்கந்தா அணி 24:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று அசத்தியது.**

தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் அணி 20:6 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலையிலிருந்து இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யாழ். இந்து மகளிர் அணி 17:0 என்ற புள்ளி அடிப்படையிலும் வென்றது. ஆடட முடிவில் யாழ்.இந்து மகளிர் 37:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியனானது.

மூன்றாம் இடத்தைக் கொக்குவில் இந்துக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

மூன்றாவதாக இடம்பெற்ற 19 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் அணியும் புத்தூர் சோமஸ் கந்தா அணியும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் 20:8 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்.இந்து மகளிர் வென்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் மிகப் பரபரப்பாக அமைந்தது. இந்து மகளிர் அணி இலகுவாக வெற்றி பெறுவதற்கு முடியவில்லை. இரண்டாவது பாதியில் புத்தூர் சோமஸ்கந்தா அணி 24:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று அசத்தியது.

எனினும் ஆட்ட முடிவில் யாழ்.இந்து மகளிர் அணி 36:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனானது. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசத்தி விளையாட்டுக் கழகத்தினால் நடந்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை மின்னொளியில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ளஅணிகளின் விபரங்கள் வருமாறு

இரவு 7மணி

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் எதிர் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம்

இரவு 8மணி

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு - 7மணி

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் பண்டத்தரிப்பு அறிவொளிவிளையாட்டுக்கழகம்.

★ ★ ★

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடாத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பி.ப. 4.மணி

நவிண்டில் கலைமதி வி.க. எதிர் கரவெட்டி நவசக்தி வி.க. (த-23-8-288-400)

# பலமான போட்டியில் அசத்தியது மகாஜனா

வலி.வடக்கு,மார்ச் 22

தெல்லிப்பளை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான் கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி கோட்டச் சம்பியனாகியது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் முடிவடையும் வரை இரு அணிகளும் வெற்றி வாய்ப்பைப் பெற வேண்டும் என்ற துடிப்புடன் மோதிக் கொண்டன.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 19 வயதுப் பிரிவு அணி கடந்த பல வருடங்களாகக் கோட்டச் சம்பியனாக இந்தப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி பலத்த எதிர்ப்பைக் காட்டியமை மகாஜனாக் கல்லூரியை சற்றுத் தடுமாறச் செய்தது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றை அருணோதயாக் கல்லூரி 25:21 புள்ளிகள் என்ற நிலையில் வெற்றி பெற்றது.

இரண்டாம், மூன்றாம் இறுதிச் சுற்றுக்களையும் முறையே 25:22, 26:24 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

ஆட்டநிறைவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 2:1 என்ற சுற்றுக்கள் கணக்கில் வெற்றி பெற்று கோட்ட மட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

(த-86)

## கரைச்சி வெற்றி

கிளிநெச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டியில் ஆண் பெண் இருபாலாருக்குமான கடற்கரை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரு பிரிவிலும் கரைச்சி பிரதேச செயலக பிரிவு அணிவெற்றி பெற்று சம்பியன் ஆனது.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணி 2:0 என்ற அடிப்படையில் கண்டவளை பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டது.

பெண்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக அணி கரைச்சி பிரதேச செயலக அணியை 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனகியது. (த-400)

## பூநகரி, கரைச்சி அணிகள் உதைபந்தில் சம்பியன்

கிளிநெச்சி,மார்ச. 22

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் பூநகரி பிரதேச செயலக அணியும் பெண்கள் பிரிவில் கரைச்சி பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்று சம்பியன் ஆகின

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பூநகரி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரைச்சி பிரதேசசெயலக அணி மோதிக் கொண்டது.

இதில் பூநகரி பிரதேச செயலக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது

பெண்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் பூநகரி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரைச்சி பிரதேசசெயலக அணி மோதிக் கொண்டது.

இதில் கரைச்சி பிரதேச செயலக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது (த-23)

## கிளிநொச்சி மாவட்ட கபடி கண்டாவளை, கரைச்சி வெற்றி

கிளிநெச்சி,மார்ச் 22

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டியில் ஆண் பெண் இருபாலாருக்குமான கபடிச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் கரைச்சி பிரதேச செயலக அணியும் பெண்கள் பிரிவில் கண்டாவளை பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகின

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து பச்சிலைப்பள்ளிபிரதேசசெயலக அணி மோதிக் கொண்டது

இதில் கரைச்சிப் பிரதேச செயலக அணி 87:29 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது

பெண்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலக அணியை எதிர்த்து கரைச்சி பிரதேசசெயலக அணி மோதிக் கொண்டது

இதில் கண்டாவளைப் பிரதேசசெயலக அணி 43:29 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது(த-23)

# அல்வாய் நக்கீரனை வென்றது சிவானந்தா

கரணவாய்,மார்ச்22

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று இடம் பெற்ற பரபரப்பான ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட 8 அணிகளுக்கிடையிலான லீக் முறையிலான ஆட்டங்கள் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகிய்து.

இதில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் மோதின.

போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்களிலேயே நக்கீரன் விளையாட்டுக் கழக அணி அசத்தலான கோல் ஒன்றை அடித்தது. அதன் பின் போட்டி விறுவிறுப்படைந்தது. இரு அணி வீரர்களும் கோலைப் பெறுவதற்கு கடும் முயற்சியுடன் விளையாடினர். பந்தானது இரு அணியினதும் கோல் பிரதேசங்களையும் அடிக்கடி ஸ்பரிசித்த போதும் கோல் காப்பாளர்களுடைய முயற்சியினால் அது தடுக்கப்பட்டன. இதனால் முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற அடிப்படையில் நிறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது ஆட்டத்தில் மேலும் அனல் பறந்தது. நக்கீரன் விளையாட்டுக் கழகத்தினர் எதிரணியினர் கோல் பெறுவதை தடுக்கும் வகையில் தடுத்தாடினர். ஆனால் சிவனந்தா அணியினரோ கோலை அடிப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தனர்.

இந்தச் சூழ்நிலையில் போட்டி நிறைவடையும் நேரத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. நக்கீரன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெறும் என்று பார்வையாளர்கள் எண்ணியிருந்த வேளை ஆட்டம் நிறைவடைய ஆறு நிமிடங்கள் இருக்கையில் அதிர்ச்சி அளிக்கும் வகையில் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தினர் அடுத்தடுத்து 2 கோல்களை அடித்து தமது பார்வையாளர்களைப் பரவசப்படுத்தினர்.

இதன் பின் ஆட்டம் மேலும் விறுவிறுப்பு அடைந்த போதும் இரு அணிகளாலும் மேலதிக கோல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை இறுதியில் 2:1 என்ற அடிப்படையில் சிவானந்தா விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

(த-400)

## கிரிக்கெட் நாளை

ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 93 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. பங்குபற்ற விரும்பும் கழகங்கள் காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-400)




[illegible] கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற [illegible] பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட [illegible] மத்திய மகா வித்தியாலய வீராங்கனைகள்.(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரவரிசை வெளியீடு கேரத் 4, சங்கா 5





சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கையின் ரங்கன ஹேரத் 4 ஆவது இடத்தையும், துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் குமார் சங்ககார 5ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் போட்டிகள், இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3 டெஸ்ட் போட்டிகள் நிறைவில் வெளியிடப்பட்டுள்ள புதிய தரப்படுத்தலிலேயே இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கை சார்பில் துடுப்பாட்டத்தில் மஹேல ஜெயவர்த்தன 22 ஆவது இடத்திலும், திலகரட்ண டில்ஷான் 27 ஆவது இடத்திலும், அஞ்சலோ மத்தியூஸ் 28 ஆவது இடத்திலும், டினேஷ் சந்திமால் 40 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சில் சானக வெலகெதர 37 ஆவது இடத்திலும்,அஜந்த மெண்டிஸ் 40 ஆவது இடத்திலும்,நுவான் குலசேகர 43 ஆவது இடத்திலும் உள்ளனர்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்கள்:ஹசிம் அம்லாஏபி.டி.வில்லியர்ஸ் ஷிவ்நரின் சந்தர்போல், மைக்கல் கிளார்க், குமார் சங்ககார, அலஸ்ரெயர்குக், ஜக்ஸ் கலிஸ் , ரெய்லர், யுனிஸ் கான், ஜொனதன் ட்ரொட்

முதல் 10 பந்துவீச்சாளர்கள்: ஸ்ரெய்ன், வேர்ணன் பிலாந்தர், சயிட் அஜ்மல், ரங்கன ஹேரத், பீற்றர் சிடில், ஜேம்ஸ் அண்டர்சன், கிரேம் ஸ்வான் ரவிச்சந்திரன், அஷ்வின் பிரக்ஜான், ஓஜா, மோர்னி மோர்க்கல் . (23)

## தீவுகளின் ஆதிக்கத்தில் திணறும் சிம்பாப்வே




மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2 ஆவது ஆட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்தது.

முதல்நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முழுமையான ஆதிக்கத்தைப் பெற்றுள்ளது.

டொமினிக்காவில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி சகல இலக்குகளையும் இழந்து 175 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

முதலாவது இலக்குக்குக்காக 42 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், அதன் பின்னர் இலக்குகளை தொடர்ச்சியாக இழந்திருந்தது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக அணித்தலைவர் பிரெண்டன் ரெய்லர் 33 ஓட்டங்களையும் சிபண்டா 32 ஓட்டங்களையும் சியன் வில்லியம்ஸ் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷிலிங்போர்ட் 5 இலக்குகளையும், மார்லன் சாமுவேல்ஸ் 3 இலக்குகளையும், கப்றியல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதல்நாள் ஆட்ட முடிவில் 2 இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அந்த அணி 2 இலக்குகளையும் இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியிருந்த போதிலும், 3 ஆவது இலக்குகளுக்காக கிறிஸ் கெயில், மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் பிரிக்கப்படாத 79 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கிறிஸ் கெயில் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும், கெரன் பவல் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக வீழ்த்தப்பட்ட இரண்டு இலக்குகளையும் ஜார்விஸ் வீழ்த்தியிருந்தார்.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(23)

## டோனியின் தலைமை சச்சினின் தயவில்



இந்திய அணியின் தலைமைப் பதவிக்குத் தன்னை சச்சின் டெண்டுல்கர் பரிந்துரை செய்தமை மிகப்பெரிய விடயம் என்று இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார். சச்சின் டெண்டுல்கர் தொடர்பான நூல் வெளியீட்டு விழாவொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2004ஆம் ஆண்டு தனது அறிமுகத்தை மேற்கொண்ட மகேந்திரசிங் டோனி, 2007 ஆம் ஆண்டில் இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். சிரேஷ்ட வீரர்களைத் தாண்டி மகேந்திரசிங் டோனிக்கு இந்தத் தலைமைப் பதவி சச்சின் டெண்டுல்கரின் பரிந்துரையினையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, தான் அணித்தலைவராக நியமிக்கப்படாமல் விடப்பட்டிருந்தாலும் கூட, சச்சின் டெண்டுல்கர் தன்னை பரிந்துரை செய்திருந்தமை என்பது மிகப்பெரிய விடயமாக அமைந்திருக்கும் எனக் குறிப்பிட்டார்.

அணியில் இடம்பெற்றதன் பின்பு சச்சின் டெண்டுல்கரின் துடுப்பாட்டத்தின் நுட்பங்கள், அம்சங்கள் குறித்து ஏராளமாகக் கற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்ட மகேந்திரசிங் டோனி, அவரோடு நேரடியாகக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டிருந்ததாகத் தெரிவித்தார்.

மைதானத்தில் வைத்து அணியின் திட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடும்போது, தனக்குத் தவறெனப்படுபவற்றை நேரடியாகவே தெரிவித்திருந்ததாகக் குறிப்பிட்ட டோனி, சச்சினிடம் கூட அவரது கருத்துக்களை மறுத்து நேரடியாகக் கலந்துரையாடியிருந்ததாகவும், அந்த நேர்மையான பண்பு சச்சின் தன்னை அணித்தலைவருக்குச் பரிந்துரை செய்ய உதவியதாகவும் தெரிவித்தார். (23)

## தவான் பங்கு பற்றாமையால் துள்ளிக் குதிக்கும் கோவான்

இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஷீகர் தவான் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்றாமை மகிழ்ச்சிக்குரியது என்றுஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் எட் கோவான் தெரிவித்துள்ளார். அத்தோடு அணி ஒற்றுமையாகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் தவான் பங்குபற்ற முடியாமற் போனமை மிகச்சிறப்பான செய்தியெனத் தெரிவித்த எட் கோவான், மூன்றாவது கட்டத்தில் அவர் டொன் பிரட்மன் போல் துடுப்பெடுத்தாடியதாகத் தெரிவித்தார்.

தனது அறிமுகப் கட்டத்தில் தவான், இதுவரை தான் பார்த்த இன்னிங்ஸ்களில் மிகச்சிறப்பான இன்னிங்ஸ்களில் ஒன்றை ஆடியிருந்ததாகத் தெரிவித்த எட் கோவான், சிலவேளைகளில் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சில நாட்கள் சிறப்பான நாட்களாக அமைவதுண்டு எனவும், அவரது அறிமுக ஆட்டத்திலேயே தவானுக்கு அந்த நாள் அமைந்து கொண்டதாகவும் எட் கொவான் தெரிவித்தார்.

இந்தியா விற்கெதிரான இத்தொடரில் 0-3 என்ற கணக்கில் பின்னிலையில் காணப்படுகின்றமை வருந்தத்தக்கது எனக் குறிப்பிட்ட எட் கோவான், ஆனால் அணி ஒற்றுமையாகக் காணப்படுவதாகவும், உணர்வுகள் சிறப்பான முறையில் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (23)

**விற்பனைக்கு**

மிகவும் நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப்பெட்டி (D.Freezer), புதிய Singer தையல் மெசின் விற்பனைக்குண்டு. 205, பிரதான வீதி, யாழ்ப்பாணம். காலை 10.30க்கு பின்பு பார்வையிடலாம்.
தொடர்பு- 0777409358
(347728)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமைபுரியும்

**திரு. இராசேந்திரம் வைகுந்தவாசன்**

20.03.2013 அன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு பெரு மகிழ்வடைவதோடு மேலும் அவரது சேவை வளம் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

Best Wishes

யாழ். மாவட்ட போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள்.
(தி.7164)(9.14.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 கற்கைநெறிகளை
கற்கைநெறிக்கட்டணம் இன்றி கற்கலாம்

Hardware & Networking, DTP, Web Design
Sinhalam, Internet & email

கல்வியங்காட்டில் மட்டும்

Qualified Lectures panel, 12 Years Experience

மேலதிக விபரங்களுக்கு நேரில்
243,Adiyapatham Road

MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society

விஷேட கருத்தரங்குகள்

வடமாகண கணக்காளர் பரீட்சை சனி, ஞாயிறு 1.00மணி தொடக்கம் 5.00மணிவரை
கிராமசேவகர் மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கான பொது அறிவு, பொதுஉளச்சார்பு.
ஒவ்வொரு ஞாயிறும் 12.30மணிக்கு

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொம்மெல் வங்கி அருகில்)


## கண்ணீர் அஞ்சலி



21.03.2013 அன்று சிவபதமடைந்த எமது கல்லூரியின் பழைய மாணவரும் நலன்விரும்பியுமாகிய **Dr.சபாபதி சபாரத்தினம்** (கலாநிதி ஆ.தியாகராஜா அவர்களின் மருமகன்) அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காரைநகர் ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கலாநிதி. ஆ.தியாகராஜா ம.ம.வி.
காரைநகர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நேசரத்தினம் நடேசு



காரைக்காட்டு ஒழுங்கை வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசரத்தினம் நடேசு நேற்றுமுன்தினம் (20.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், நடேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றர்களான நாகமுத்து-சிந்தாமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, ராசு மற்றும் உதயச்சந்திரன்(குணம்) ஆகியோரின் சகோதரியும், யோகராணி, யோகராசா, செல்வராணி, சண்முகராசா, செல்வராசா(டோகா), கலாவதி, பத்மஸ்ரீ, செல்வரத்தினம், சோதிலிங்கம், லலிதா(ஜேர்மனி), வனஜா (லண்டன்) ஆகியோரின் தாயும், குணரத்தினம், தெய்வேந்திரம், வசந்தி(டென்மார்க்), கனகசிங்கம், சுதா, ஆஷா, மஞ்சுளா, அருமைநாயகம்(ஜேர்மனி), ஸ்ரீரஞ்சன்(லண்டன்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.03.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

91, காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### Dr. சபாபதி சபாரத்தினம்

காரைநகர் புதுவீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சபாபதி சபாரத்தினம் நேற்று (21.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சபாபதி-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஆ.தியாகராஜா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் Dr.மங்கையற்கரசியின் அன்புக்கணவரும் மீரா, ராதா ஆகியோரின் தந்தையும் சபாநடேசன், சபாநாதன், சுசீலவதி, சபாநேசன், சபாநாயகம், சிவஞானவதி, சபேந்திரன், சங்கரப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் தனலட்சுமி, சரஸ்வதி, யசோ, அனுலஜயசேகர, திலகவதி, புனிதவதி, ஞானசம்பந்தன், கண்ணன், விநாயகமூர்த்தி, துரைசாமி, சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

181, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சபாபதி சங்கரப்பிள்ளை(சகோதரன்)
0777571776, 0727571776

### திருமதி பூமலர் கணேசன்



அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி பூமலர் கணேசன் நேற்று (21.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதி -முத்தம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணேசனின் (முன்னாள் பிரதம மருந்தாளர்- யாழ். வைத்தியசாலை) அன்பு மனைவியும், ருக்குமணி (இந்தியா), லீலா (பிரான்ஸ்), மகேந்திரன் (கனடா), சந்திரா (பிரான்ஸ்), தபேந்திரன் (கனடா), சாரதா, சுமித்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள்ரூபன் (பிரான்ஸ்), ஜெயரூபி, செந்தில்ரூபன் (பிரான்ஸ்), சாந்தரூபி ஆகியோரின் அன்புத் தாயும், துஸ்யந்தி, நீதிராசா (இசைத்துறை- யாழ். பல்கலைக்கழகம்), வோங்க், சிறிதரன் (கணக்காளர், மாகாணத் திறைசேரி வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2013) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லை வீதி, அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்:
அருள்ரூபன் (மகன்)
நீதிராசா, சிறிதரன் (மருமக்கள்)

## குழை வெட்டச் சென்ற பெண் சடலமாக மீட்பு

ஆட்டுக்கு குழை வெட்டச் சென்றவர் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை தெல்லிப்பழை பழைய தபாற் கந்தோருக்கு அண்மையில் இடம் பெற்றது.

நேற்று மாலை அருகிலுள்ள வீட்டு வளவினுள் குழை வெட்டச் சென்ற மாணிக்கம் செல்வராணி (வயது-63) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-86-400)


### மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கான பூநகரி மணல் குறைவான விலையில் நேரடியாக டிப்பர்கள் மூலம் விநியோகிக்கப்படும்.
தொடர்பு:- 0755110767

### வீடு விற்பனைக்கு

நல்லூர், நாயன்மார் வீதியில் அமைந்துள்ள காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0755555090


### தேவை
### பிரதேச செய்தியாளர்கள்

| முல்லைத்தீவு மாவட்டம் | கிளிநொச்சி மாவட்டம் | மன்னார் மாவட்டம் |
|---|---|---|
| ★புதுக்குடியிருப்பு | ★ பூநகரி | ★ பேசாலை |
| ★முள்ளியவளை | ★ முழங்காவில் | ★தலைமன்னார் |
| ★ செம்மலை | வவுனியா மாவட்டம் | ★முருங்கன் |
| ★ முல்லைத்தீவு நகர் | ★ செட்டிகுளம் | ★மாந்தை |

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு அலுவலகச் செய்தியாளர்களாக, பிரதேச செய்தியாளர்களாகப் பணியாற்ற விரும்புவோர் தமது சுய விவரங்களை editor @ uthayan.com என்ற – மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது உதயன் வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்.

★வயதெல்லை - 25 முதல் 35 வரை

**முடிவு திகதி: 30.03.2013**


### புத்தம் புதிய தெரிவுகளுக்கு

புத்தாண்டை முன்னிட்டு இந்தியாவிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட புத்தம்புதிய தரம் வாய்ந்த கண்கவர் சாறிவகைகள் மலிவான விலையில்

ஸ்ரீகல்கி விநாயகர் ரெக்ஸ்ரைல்
கைதடி. தொ.பே.077 8837178
34715

### New Degree College
மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக

வரலாறு- திரு.R.R.ஆனந்தன்
A/L 2013 Day Class வினாவிடை வகுப்பு (M.C.Q)
ஆரம்பம் 24.03.2013 Sun 2.00 pm
A/L 2014, 2015 புதிய பிரிவுகள்
ஆரம்பம் 24.03.2013 Sun 3.00 pm
★தனிப்பாட அனுமதி உண்டு.
★இம் மாதக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(34618)(6.7.11) நிர்வாகி.

### A/L பொருளியல் நூல்

பல்தேர்வு வினாவிடை
MCQ
ரூபா:70

வே.கருணாகரன்

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
(34780)(8.16.14)

### அறை வாடகைக்குத் தேவை

நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஒருவருக்கு தங்குவதற்கு அறை வாடகைக்கு தேவை.
(யாழ். நகரப் பகுதி விரும்பத்தக்கது)
0779099735

### கைத்தொலைபேசி கை தவறி வைக்கப்பட்டுள்ளது

18.03.2013 அன்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் முன்பாக Pleasure மோட்டார் சைக்கிளில் தவறுதலாக H.T.C Windows mobile phone வைக்கப்பட்டு விட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபரிடம் ஒப்படைக்கவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 236 3572 (26252)(6.7.11)

### சாதாரண பொது மக்களுக்கான நட்ட ஈடு

கடந்த கால சூழலில் வீடு மற்றும் சொத்துக்கள் சேதமடைந்த சாதாரண பொது மக்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு மற்றும் சொந்தக் காணியற்றோர்கள் தங்களுடைய உடைமைகள் சேதத்திற்கான கொடுப்பனவு படிவங்களை, ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபையின் சுற்றறிக்கைகளுக்கமைய நன்கு அனுபவம் வாய்ந்தவர்களால் எதிர்வரும் 23.03.2013 தொடக்கம் 30.03.2013 வரையான காலப் பகுதிக்குள் எதுவித கட்டணமுமின்றி பூர்த்தி செய்து கொள்வதற்கு உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி றொபட்சன் கொம்யூட்டர் சென்ரர்
(கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக)
ஆனந்தபுரம், கிளிநொச்சி.(26253)(2.16)
தொடர்பு:- 021 568 2951

### ஐரோப்பிய நாடான சைப்பிரஸ் < படித்துக்கொண்டே மாதாந்தம்

ஒரு லட்சம் வரை சம்பாதிக்க
விசேட வழிகாட்டல் கருத்தரங்கு
ஜூன் 2013 கற்கை நெறிகள் ஆரம்பம்

இடம் : திசைகாட்டி குழுமத் தலைமைக் காரியாலய கேட்போர்கூடம்
காலம் : 24.03.2013 பிற்பகல் 02 மணி (ஞாயிறு)
விடயம் : சைப்பிரஸ் நாட்டைப் பற்றிய அறிமுகம், பெண்களுக்குப் பாதுகாப்பானதா?, கல்விச்சான்றிதழ் சம்பந்தமான அங்கீகாரம் உடையதா?, P.R. கிடைக்குமா? எவ்வகைத் தொழில்கள் உள்ளன? தமிழர்கள் பரம்பல் எவ்வளவு?
பிரவேசம் இலவசம்: (முன்பதிவு தொலைபேசி மூலம் அவசியம்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(34645) (45.6.7)



### கனடாவில் < படிக்க உழைக்க
வழிகாட்டல் கருத்தரங்கு

அடிப்படைத் தகுதியுள்ளவர்களைத் தேர்வு செய்தலும் - வழி நடத்தலும்

இடம் : திசைகாட்டி குழுமத் தலைமைக் காரியாலய கேட்போர் கூடம்
காலம் : 24.03.2013 முற்பகல் 10 மணி (ஞாயிறு)
வளவாளர் : திரு. J.Jed (Bsc. Hons) (வடமராட்சி மைந்தன்)
பிரவேசம் இலவசம், முற்பதிவு முக்கியம் (தொலைபேசி மூலம்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(34645)
(45.6.7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.